04

# ...eerthisingan

OR

# Kandirajan

(A Tamil Novel)

PUBLISHED BY

T. DURAISWAMY MUDALIAR.

1919

...d Copyright.

Annas 8.

O-,2MKP,K
N19
67773

15 JAN 1920

உ

சுந்தரகணேசர் துணை.

## கீர்த்திசிங்கனென்னும்

# கண்டிராஜன்.

Act. தேசம் — Scene. கண்டிமாநகரம்

### கதாநாயகர்.

இராஜன் — கீர்த்திசிங்கன்.
இராஜபத்தினி — மிர்துபாஷினி.
மந்திரிகள் — ஆலப்பளை, முள்ளிக்கொடை,
திசாநாய்க்கன், மிரமித்தளை, குடிகள்,
தோழியர், சேனைவீரர்.

ஆழிசூழுலகில் தாழ்விலாச் செல்வம் நிறைந்தோங்கிய சீலகுணாளர் வசித்துலாவும் பரத கண்டத்திற் சிறப்புற்றோங்கிய நந்நகரென பொன்நகர் புரந்தரனும் வியந்துரைப்பச் செழிப்புள்ளதென அருமறையுணர்ந்த அறிஞராற் புகலரும் அமராவாழிந்திர புரியிதுவோவென் றுணந்தமாய்ப் புகழ்ந்துரைப்பதற் கிணங்கிய மாடமாளிகை கூடகோபுர அலங்காரச் சிங்காரமாய் விளங்

கும் மாநகரிற் சிறந்தோங்கும் மகிமை பொருந்திய சிவாலயம், விஷ்ணுவாலயமும் நிறைந்து, பக்தரும் முக்தரும் சித்தமகிழ்ந்து மகத்வம்பொருந்திய சிவசுப்ரமண்யரெனும் கதிர்காமத்தையன் திவ்யக்ஷேத்ரமென எத்திசையினும் வசித்துலாவும், பக்த சிரோன்மணிகளாற் பூஜிதம் பெரும் பூவுலகென் றுனந்தமெய்த பிர்ம்ம, க்ஷத்ரிய, வைசிய, சூத்ர சிங்களசோனக ரில்லம் நிறைந் தவற்றுண் வாழு மாந்தரின் புறத்தென்றற் காற்று வீசுதற் கினிமை பொருந்திய சோலைகளில் மதன்சர மிதுவோவென் றதிசயித் தானந்தமுறும், நறுமணம் வீசும் மணமலர்களாகிய, மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, செண்பக, அல்லி, அசோகு, தவனம், குரிவேர், மருவு, மகிழம், தாழை, மனோரஞ்சிதம், மன்மதபாணம், பாரிஜாதம், நந்தியாவட்டை, நாகலிங்க மாமலர்கள் புட்பித்திருக்கும் வினோதங்களைக் கண்ணுற் றகமகிழும் காமுகர் காதலியுடன் களிப்புறுதற்கேற்ப கதலி, கிச்சிலி, மா, பலா, அன்னாசி, தேங்கு, பனை, வில்வம், ஆல், அரசு, சந்தனாதி விருக்ஷங்களின் கிளைகளில் வசித்துலாவும், மயில், குயில், காடை, கவுதாரி, மயினா, டேகை, புறு, பஞ்சவர்ணக்கிளிகள், நாகணவாய்ப் புட்கள் முதலாகிய பற்பல பறவையினங்களும் தமது அழகிய கனிவாயைத் திறந்து தத்தம் குரலொலி தொனிக்கிசைந்த, பண்முதலாகிய பற்பல வினோதலங்

கார சங்கீத சாஹித்ய காயனங்களாற் பாடுமினி மையைச் செவிகுளிரக் கேட்கும், மாந்தர் மன மகிழ் வெய்திகளிப்புற் றிலகும் மாநகரமென்றவ னியோர் புகழ்ந்துரைக்கும் நந்நகரெனுங் கண் டிமா நகரத்திற் கோர் பழுதுமின்றி துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனனுய் ஆலயபூஜை அனுதினம் புரி ந்து தான தர்ம பரோபகாரனுய் குடிகள்மீது கருணை வாய்ந்து செங்கோன் முறை வழுவின்றி சிற்றரசர் திறை சலுத்த தீரவீர ப்ரகாசமாய், அரசு புரிந்திருந்த சிங்களவ ஸாதிபனுகிய மன் னன் தெய்வாதீனமாய் தேகவியோகமாயினன் அத்தருணம், அருகிலிருந்த மந்திரி பிரதானியர் அரசன் சடலத்தை அடக்கஞ்செய்து உற்றுரிமை யனைத்தும் வழுவின்றி நடாத்திவிட்டு, அவரவர் தொழிலினை மேவியிருந்தனர்.

இங்ஙனம் நிற்க, அரசனின்றிய நகரிற்கனர் த்தம் வந்தாற்போல ஒருவரை யொருவர் மதியா மற் சச்சரவு புரிந்துகொண்டு தமக்குத் தாமே பெரியவராய் மதித்து, விபரீத கலகங்கள் விளைத் துக் கொண்டிருக்கையில் ஓர்நாள் அறிவிற் சிறந்த சில பெரியோர் சடைகூடி, நம்மில் யாவரேனும் ஒருவரை அரசனுக நியமித்து, அவர்சொற்படியே அடங்கியிருப்பது நலமன்றி, அவரவ ரிஷ்டத்தின் படியே தலைவிரிகோலமாய்த் தத்தளிப்பது நன் கல்லவெனப் புகன்றவை யுணர்ந்த அமைச்சகர்

ளனைவரும் மூனைந்து, யான் அரசனுவேன் யான் அரசனுவேனென், ஒருவர்க்கொருவர் அடங்காமல் அரண்மனை அதிரும்படி ஆர்ப்பாட்டஞ் செய்கையில் பின்னும் விபரீத வீண் கலகங்கள் விளைந்த குரூரத்தைக் கண்ணுற்ற, முதன் மந்திரியாகிய ஆலப்பனை புகல்வதாயினன்.

ஆலப்பனை:—அறிஞர்காள்! நீவி ரித்தகைய சச்சரவு புரிதல் நன்கல்ல, வயதில் முதிர்ந்தவரும் அறிவிற் சிறந்தவருமான பிரமித்தனையென்பவரையே இந்நகரத்திற் கிறைவனென முடிசூட்டி யாமனைவரும் அவர்சொற் கடவாது நடந்து கொள்வதே நலமென யோசிக்கின்றேன்.

முள்ளிக்கோடை:—ஐயா! நீர் நவின்றமை யுணர்ந்த ஞாலத்தோர் கேலிசெய்து நகைப்பத் தடையுளதோ? அஃதேனெனின் பிரமித்தனையை மாத்திரம் சிலாகித்துச் சொன்னீரே யான் என்ன அவனுக் கிளைத்தவனு, எனக்கு மாத்திரமென்ன இராஜநீதி தெரியாததோ, யானே மகிபனென மகுடம் புனைந்து, மாநிலம் புகழும் இந்தக் கண்டிமா நகரினை அரசாக்ஷி செய்கின்றேன் நீர் இதனை மறுத்திடிற் றீது விளையுமென் றுணர்வீர்.

திசாநாய்க்கன்:—சரி, சரி, முள்ளிக்கொடை, உமது அதிசயத்தை நிறுத்தி வையுங்காணும். தன் காலைத் தான்பணிவதுபோல தம்மைத்தாமே புகழ்ந்து சபாரஞ்சிதனைப்போற் பாஷிப்ப தாயினீர். இத்தனைபேரில் நீர் மாத்திரம் சிரேஷ்டமானவரென சிலாகித்துச் சொல்வ தாயினீர். உன்னிலும் யான் இளைத்தவனோ, நீர் மன்னனாய் விளங்குவதும் யாங்களனை வரும் உனக்குக் கீழ்ப்படிந்திருப்போமோ, சபாஷ்! வறுமையாளன் இராஜ கினவு கண் டதுபோற் கிஞ்சிற்றேனும் நாணமின்றிபேச வந்தீர்.

ஆலப்பனை:—அன்பர்காள்! நீங்கள்கிஞ்சிற்றேனும் அச்சமின்றிய சத்துருவைப்போ லித்தகைய சச்சரவு புரிதல் நன்கல்ல இதற்கு யானோர் ஆலோசனை புகல்கின்றேன், கவனமாய்க் கேண்மின், அஃதியாதெனின், நமது அரச னின் பட்டத்து யானையைச் சிங்காரித்து அதன் துதிக்கையில் மலர்மாலையைத் தந்து அனுப்புவோம், அவ்வேழம் அதனை யாவர் கழுத்தில் சூடுகின்றனவோ அவரையே அர சனாக ஏற்படுத்தி அவருக்குக் கீழ்ப்படிந்து யாமனைவரும் முன்போலவே அமைச்சர் களாயிருந்து இராஜ துரோகம் புரியாமல் அரசுரிமையைப் பாது காப்போம்.

என, நவின்றமை யுணர்ந்த சபையோ ரனைவரும் சம்மதப்பட்டு சரி, சரி, ஆலப்பனையின் ஆலோசனையே சிரேஷ்டமானவை யாவும் தெய்வச்செயலன்றி மனச்செய லன்றென மநுஸ்மிருதியும் முறையிடுவதால், சிவசுப்பிரமண்யர் கிருபா வீக்ஷண்யத்தினுல், இவ்வேழம் யாவர் கழுத்தில் மலர் மாலை சூடுகின்றனவோ அவரையே அரசனாக நியமிப்போமென்று பட்டத்து யானைக்கு திவ்ய தீர்த்தங்களால் மங்கள ஸ்நானஞ் செய்வித்து கதம்ப கஸ்தூரி பந்நீரணிந்து தூபதீபாராதனை புரிந்து துதிக்கையில் மலர் மாலையைத் தந்து, ஓ வேழமூர்த்தி, மன்னனின்றிய இம்மாநிலம் புரக்கும் மகிபன் கழுத்தில் மலர் மாலை சூடுவாயென பணிந்தனர். அத்தருணம் மதயானை மனேல்லா சத்துடன் அந்நகர் வலம்வருகையில் யாவரும் தமது கழுத்திற் புட்பமாலை சூடுமென ஆவலுற்றவராய்ப் பின்பற்றிச்செல்வதாயினர்.

இங்ஙனம் நிற்க, வடுகர் குலத்திற் ஜனித்து வறுமை யாற்களைத்திளைத்து ஜாண்வயற்றை வளர்ப்ப தெவ்விதங் கர்த்தவ்யமேயென, தனது பத்தினியுடன் சுயதேசத்தை விடுத்து கண்டிமாநகரில் வந்து கைத்தொழில் புரிந்து கஷ்ட ஜீவனமாய்க் காலங் கழித்துவந்த கீர்த்தி சிங்கனென்பவன் தான் முன் ஜனனத்திற் புரிந்த புண்ணிய வசத்தினுற் பக்தியிற் சிறந்து அனுதினமும் அரு

ணோதயத்தி லெழுந்து ஸ்நானபான நேம நிஷ்டை புரிந்து கண்டியின்கண் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிராநின்ற சிவசுப்பிரமண்யரெனும் கதிர்காமத்தையனை சித்த சுத்தி வைராக்கியத்துடன் பக்தியானந்தமாய் பூசித்து கருணாநிதி! அடியேன் வறுமைநோயகற்றி திரவிய சம்பன்னனாய்த் தரணியில் வசித்திருக்கக் கிருபை புரிவீராகில், ஆதுலர் அந்தணர்க்கு யாதொரு குறைவின்றி தானதர்ம பரோபகாரம் புரிந்து நின் அன்பர்கட் கடியனாய் மெய்யடியர் தொண்டு பூண்டு வையகத்தி லுய்வேன் பன்னிரு கையா! வையாபுரித் தலைவாயென பக்தி செலுத்திக்கொண்டிருக்கையில், ஓர்நாள் கருணாநிதியாகிய கதிர்காமத்தையன் கனிவுகூர்ந்து கடைக்கண் பார்வை இவன் நலம் பெருகவென அனுக்கிரகம் புரிந்தனர். அந்நாள் நன்னாளாயினதால் அன்றையதினத் திற்றான் அரண்மனையிற் கலகம்நேர்ந்து ஆனையின் துதிக்கையிற் பூமாலையைக் கொடுத்தனுப்பினர். அத்தருணம் கீர்த்தி சிங்கனும் அம்மார்க்கமாய் வருகையில் குஞ்சரம் அவன்கழுத்தில் மலர்மாலையைச்சூடித் தனது துதிக்கையினாலவனை யெடுத்துத் தனதுமுதுகின்மீ தேற்றிக்கொண்டு அரண்மனையிற் சென்று சிம்மாசனத்தில் அமர்த்தியது இவ்விநோதத்தைக் கண்ணுற்ற நகரவாசிகளாகிய சிங்கள ரனைவரும் வியப்புற்று அடடா, இஃதென்ன ஆச்சர்யம், நாம் இந்நகரிற் ஜனித்ததா

லாயபயனென்ன சுயதேசத்திற் ஜீவிக்கச் சக்தி யின்றி, இக்கண்டிமா நகரத்தில் அண்டிப் பிழைக் கவந்த வடுகன் அரசனுயினனே, ஈதன்றே, அதிர்ஷ்டானு கூலமென, வியப்புற்றுத் தம்மைத் தாமே நிந்தித்துக்கொண்டு நாணத்துடன் வெட் கித் தலைகுனிந்து விசனமுற்றிருந்தனர்.

அத்தருணம் மந்திரி பிரதானிய ரனைவரும் ஆச்சர்யமுற்றவ ராயினும், இவை யனைத்தும் ஆண்டவன் செயலன்றி, மனச்செய லன்றென மதித்து அரண்மனைத் தோழிப் பெண்களாற் கீர்த்தி சிங்கன் பத்தினியாகிய மிர்துபாஷிணியை முத்துச்சிவிகையி லேற்றிக்கொண்டு வந்து, சதி பதி இருவருக்கும் புண்ணிய தீர்த்தங்களினுல் மங்களஸ்நானஞ் செய்வித்து, நவரத்ன கசிதமய மாய்த் துலங்கும் ஆடை ஆபரணங்களாற் சிங்கா ரித்து சிம்மாசனத்தில் வீற்றிருக்கச் செய்து கீர்த்திசிங்கன் கரத்தில்செங்கோற்றந்து மாநிலம் புகலரும் மஹாராஜ ராஜேஸ்வராயென வேதவே திச ரக்ஷதைத் தூவி, ஆசிர்வதிக்க, சுபேவா வென மணிமகுடஞ் சிரசிற்சூடி மனுமுறை வழு வுருது துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனனுய் குடி கள்மீது கருணை வாய்ந்துமாநிலம் புரப்பீர் மஹா ராஜேஸ்வரா யென வாழ்த்தி முன்போலவே மந் திரி பிரதானிய ரனைவரும் அவரவர் உத்தியோ கத்தை அனுசரித்துஅரசன் ஆக்ஞையின்படியே நடந்துக்கொண்டனர்.

அப்பால், கீர்த்தி சிங்கன் தானனுபவித்த கஷ்ட நிஷ்டூரத்தையும், தனக்குத் தெய்வாதீன மாய்க் கிடைத்த பெரு நிதியாகிய அரசுரிமையை யும் ஆராய்ந்துணர்ந்து, இவை யனைத்தும் கதிர் காமத்தையனின் கிருபாவிஷேஷ்ணியமெனமதித்து, சந்ததமும் கந்தஸ்வாமியைப் பணிந்து செந்தில் வேலேயுதாவென, சிந்தித்து சித்தசுத்திவைராக் கிய பக்த சிரோன்மணியா யிருந்தனன், அன்றி யும் நகரவாசிகள் அறிவீனத்தால் யாதேனும் குற்றம்புரிந்தால் அவையனைத்தும் அப்போதைக் கப்போதே மன்னித்து துர்க்குண மனுகின் தோ ஷம் விளையுமென, அவர்கட்குத் தகுந்தமதியு ரைத்து அனுப்பி விடுவதும் அரண்மனையின் பொக்கிஷத்தி லிருக்கும் திரவியங்களை ஆதுலர், அந்தணர் யாசகர் சங்கமர்கட்குத் தானதர்மம் புரிவதும், சிவனடியரைக் கண்ணுற்று தரிசித்து வணங்குவதும், குடிகள் திறைபணம் செலுத்தா விடினும் யாதொரு தொந்தரையும், புரியாமல் மன்னிப்பதும், நகரவாசிகளைத்தாய் தந்தையைப் போல் மதித்து அன்பு பாராட்டுவதும் ஸ்காந்த புராண பிரசங்கத்தைச் செவிகுரக்கேட்டு மன மகிழ்வதுமாய் சில நாள் வரையினும் இராஜநீதி வழுவுருது, அரசாக்ஷி செய்திருந்தனன்.

இங்ஙனம் நிற்க, ஆதியில் இவனை அடா கீர்த்திசிங்காவென் றழைத்தவரெல்லாம், அரசே! அரசே !! அரசேந்திரா !!! வென்றழைப்பதைக்

கேள்வியுற்று, தான்முன்னிருந்த நிலேயைமறந்து, இந்த உலகமெல்லாம்தனது உள்ளங்கையிலடங்கி யிருப்பதுபோல தன்னேத்தானே புகழ்ந்துக் கொண்டு மமதை யற்றவனுய் இரணியனேப்போல் மனே கர்வத்தைத் துணேயாய்வகித்து மதோன் மத்தனுய், தேவாலய பூஜையைமறந்து தாசிக ளின் மையலாற் சோர்ந்து குடிகட்கு வரிகளேச் சுமத்தி நரகவாசிகளே நடுங்கச்செய்து சிறுபிழை புரிந்திடினும் பெருங்குற்றமாய் மதித்து குரூர குண மமைந்த கொலேஞர்களால் இருபிளவாய் வெட்டியெறியும்படி ஆக்ஞாபித்தும் சிலரை கை காலே வெட்டியும், கண்ணேப்பிடுங்கியும் பலபற் விதமான அக்கிரமம் புரிவதைக் கண்ணுற்று யாவரும் மன விசாரமடைந்து ஆ! விதிவசமே இஃதென்ன ஆச்சர்யம், நற்குண மமைந்த மன் னன் துர்க்குணனுய் அக்கிரமம் புரிகின்றுனே யென்று திகிலுற்று துஷ்டமாமிகளிடம் கஷ்டப் படும் மருமக்கள் போல துயருற்று மனவிகாரமா யிருக்கையில் நகரவாசிக ளுளங்கலங்கித் திடுக் கிட்டு அந்நகரத்திற் சிறந்த நன்மதி யமைந்திருக் கும் சிங்கள வாம்ஸாதி பதியாகிய பிரமித்த ளேயிடம்சென்று புதியராஜன் புரியும் அநியாய மனேத்தும் மொழிந்து விசன மெய்தியதைக் கண்ணுற்ற அன்னேன் அவர்கட்குத் தைரியம் புகன்று இனி நீங்கள் யாதொரு மனவருத்தமு மெய்யாதீர் யான்அரசனே தனிமையா யழைத்து

வேணமதியுரைத்து சீர்திருத்தம் செய்குதுமென் றிசைத்து, ஓர் நாள் கீர்த்தி சிங்கன் தனிமையாய் நந்தவனத்தி லுலாவிக்கொண் டிருக்கும் தருணம் அருகிற்சென்றமதி யுரைப்பதாயினன்.

பிரமித்தளே:—அரசே! நீவிர் நற்குலத்தி லுதித்த சற்குணளராகையால் பகவத் கிருபா விஷேஷத்தால் இந்நகரின் மன்னனு யமைந்து கொடையிற் கர்ணனும், சத்தியத்தில் அரிச்சந்திரனும், தயாளத்தில் சிபிச்சக்கரவர்த்தியும், காருண்யத்தில் கங்காதரனும் பொறுமையில் தரும புத்திரனும், பக்தியில் ருக்மாங்கதனும் நிகரிலேயெனக் கீர்த்தி வாய்ந்தவராய்க் குடிகள் மீது கருணை செலுத்தி, மநுநீதி முறை வழுவுறுது அரசாக்ஷி செய்திருந்தீர் அத்தகைய நற்குணமமைந்திருக்கும் வரையில் கண்டிமாநகரிற் கொரு பழுது மிலேயெனக் களிப்புற் றிருந்தோம். ஆயினும் தற்சமயம் யாதோ விபரீத கால வித்தியாசத்தினுல் துர்க்குணத்தைத் துணையாய் வகித்து நகரவாசிகளே நானுவித துன்பத்திற் சிக்கித் துயருறச் செய்கின்றீரென கேள்வியுற்றேன். நீர் புதியஅரசனுய் விளங்குவதினும் மன மயக்கமாய் யாதேனும் கொடுமை விளேத்தால் யாங்கள் உமக்கியன்றமதியுரைத்துத் திருத்

தஞ் செய்வதுல கியற்கையென இவ்வளவு தூரம்பாஷிக்கலாயிற்று. ஆயினும், நீர்இனி குடிகட்கு வரிகளைச் சுமத்தி பற்பலவித குரூர பயங்கர அநியாய ஆக்கினை விதிப் பதைத் தவிர்த்து சாந்த மனதுடன் தரணி யைப் பரிபாலனஞ் செய்வீராகில் நலமா யிருக்கும்.

கீர்த்திசிங்கன்:—பெரு மூச்சு விடுத்து ஆ! அப் படியா! அடடா! சிங்களப் பயலே யாது வார்த்தை பாஷித்தனை சரி! சரி! நன்மதியு ரைத்தனையே, இன்னும் ஏதாயினும் உளர வேண்டி யிருக்கின்றனவோ? இவ்வளவு தானோ?

பிரமித்தளை:—அரசே, நீவிரென்மீது இத்தகைய முனிவுறுதல் நன்கன்று, யான் உமக்கு நன் மையைப் புகன்றேனே யன்றி, இகழ்ந் துரைத்திலேனே அன்றியும், குடிகளைப் பகைத்த கோமான் பலதுயருற்று ஆபத் தடைகுவனென மதியி லுணர்கிலிரோ?

என, சொல்லிவாய் மூடுமுன்னே கீர்த்திசிங்க ராஜன் பற்களை நெற நெறவெனக் கடித்து, மீசை துடிதுடிக்க கர்ச்சித்து, இவ்வற்பனோ எனக்கு மதிபுகல்வதாயின னென, திரிபுர தகனன்போற் சிரித்து, வீராவேசத்துடன் தனது கரத்திற் றுங்கிய கட்கத்தினல் பிரமித்தளையின் சிரசை

பளீரென இருபிளவாய்த் துணித்தெறிந்து, தனது மாளிகையிற் போய்ச் சேர்ந்தனன் இவ்விபரீதத்தைக் கண்ணுற்ற குடிகள்வெகுவாய்த் துக்கித்து அவரவ ரில்லத்திற் கேகினர்.

இங்ஙனம் நிற்க, இராஜபத்தினியாகிய மிர் துபாஷிணி தனது மணாளனைப் பார்த்து, பிராணேசா! எத்தினமும் மனோல்லாசமாய்க் களிப்புற்றிருக்கும், நின் முகார விந்தத்தில் இத்தினம் யாதோ கோபக்குறி தோற்றுவ தாயினவே இஃதுண்மை யானுணர்க விவரித் தியம்புவீரென வினவினள் அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற மன்னன் புகல்வதாயினன்.

கீர்த்திசிங்கன்:—மாதே! இப்பூதலத்திற் பெருமை வாய்ந்த மகிபனென் நவரத்தின கசித மணிமகுடஞ் சிரசிற்சூடி உலகேந்திரனாய்ச் சிம்மாசனத் தமர்ந்து கரத்திற் செங்கோ லேந்தி துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனம் புரிந்து, கீர்த்தியுடன் இந்தக் கண்டிமா நக ரத்தைப் பரிபாலனஞ் செய்யும், என்னை கீர்த்தி சிங்க மஹாராஜனென்ன தன் மனதி லுன்னாமல், அற்பனாகிய சிங்கள பிரமித்தனை யென்பவன்கிஞ்சிற்றேனும் அஞ்சுதலின்றி என் முன்வந்து அரசே! நீர் நகரவாசிகளை வெகு தொந்தரை புரிவது மன்றி குடி கட்கு வரிகளைச்சுமத்திக் கொடுமைபுரிவ

துமக் கியல்பன்றென எதிர்த்துப் பேசின தினல், அவன் சிரசை என் கரத்திற்றுங்கிய வாளாயுதத்தால், அறுத் தெறிந்தேன். இன்னும் இந்நகரவாசிகளை யான் என்ன தொந்தரை புரியினும் யாவரெனைத் தடுப்பவர். இந்நகரில் என்னுடைய அரசுதானே.

மிர்துபாஷிணி:—பிராணேசா! யாது வார்த்தை பாஷிப்பதாயினீர். "குடைநிழ லிருந்து குஞ்சர மூர்த்தோர், நடை மெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்" அன்றியும், "அறத்திடு பிச்சைகூவி இரப்போர், அன்றைப் பொழுதர சாளினு மாளுவர்" என்பதற்கிணங்க, நாம் ஆதியில் வறுமையாளயாய்ப் பல துயரடைந்து சுயதேசத்தை விடுத்துப் பரதேசிபோற் கஷ்ட நிஷ்டூரத்துடன் இந்தக் கண்டிமா நகரத்தில் சொற்ப ஜீவனமாய்க் காலங் கழித்திருக்கையில் யான் சித்தசுத்தி வைராக்கியத்துடன் வள்ளிநாயகியின் விரதானுஷ்டானம் புரிந்தும், நீர் கதிர்காமத் தையணுகிய கந்தஸ்வாமியை சந்ததமும் சிந்தித்து, பக்தியானந்தமாய்ப் பூசித்துக்கொண் டிருந்ததால் கருணை நிதியின் கிருபாவீக்ஷண்ய கடைக்கண் பார்வை நம்மீதிலுற்று இந்நகரத்தில் உம்மை இராஜனாகவும், என்னை இராணியாகவும் நியமித்

தன. ஆதலின் அருமையான இப்பெருநிதியை தர்மத்திஞலே கைசோர விடாமல் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமன்றி, அதர்மத்திஞலே பறக்கடிப்பது நன்கல்ல, மமதையிஞ லழிந்த இரணியன் சரிதையை நீ ரறிகிலாததோ? பிராணபதி! தெய்வஞ்சிறிற் கை தவமாளுமென மனதிலுன்னி அனுதினமும், நன்மன தமைந்திருப்பீரா கில் நகரிற் கோர் பழுதுமின்றி சுகம்பெறுவீர்.

சீர்த்திசிங்கன்:—கலகலவெனசிரித்து பேதாய்! நின் அற்ப வார்த்தையைக் கேள்வியுற்ருேர் வியப்புற்றுப் பரிகாசியாரோ? மாதரசே! உலகாதிபனுக்கு ஒருவர் நிகராவரோ? இந்நகர வாசிகட்கு யான் வைத்தது சட்டம் இட்டது பிசைஷதானே செங்கோற்கு முன் சங்கீதம் செல்லா தென்பதுபோல அரசன் ஆக்ஞையை அவனியோர் தடுத்திடுவரோ? ஆதலின் என் மனதிற் கிசைந்த விதம் குடிகளை யான் என்ன செய்தாலும் செய்யலாம் இதைக் குறித்து நீ வீணிற் பலவிதமாய்ப் பேசாதே.

என, நவின்றமை வினவிய மிர்துபாஷிணி மனமெலிந்து, வள்ளி நாயகியின் மீது தியானமாயிருந்தனள். இங்ஙனம் நிற்க, சீர்த்திசிங்கனுனவன் துர்க்குணத்தை துணையாய் வகித்து அக்ரமத்தை

விர்த்தி செய்துக்கொண்டு செங்கோன் முறை தவறி கொடுங்கோன் மன்னனெனன, கண்டி தேசத்தினர் சண்டனேக் கண்ணுற்ற உயிர்போற் றுடித்து திகிலுற்று நடுங்குந் தன்மையாய், அநியாய அரசு புரிந்து வருகையில் ஓர் நாள் தனது வழக்கத்தின் படியே சிம்மாசனத் தமர்ந்து தேசவிசாரணை புரிவதாயினன்.

கீர்த்திசிங்கன்:—மந்திரி! நமது நகரிற்யொரு பழுதுமின்றி மங்களானந்தமாய் வருணன் கிருபையால் நன்மழை பொழிந்து செந்நெல் விளைந்து தேசம் செழிப்புற் றிருக்கின்றனவா? அன்றியும், இந்நகரத்தின ரனைவரும் எனது ஆக்கினைக் குட்பட்டு பகுதிபணம் குறையுறாது செலுத்து கின்றனரா?

ஆலப்பளை:—அரசே! கதிர்காமத்தையன் கிருபாவிசூஷண்யத்தால் இந்நகரத்திற்குப் பஞ்சமணுகாமல் மாதமும்மாரி பொழிந்து, செந்நெல், கோதுமை, கேழ்வரகு, சோளம், வரகு, எள்ளு, மொச்சை, கடலை, துவரையென்னும் நவதானியங்களும் விளைந்து செழிப்புற்றிருக்கின்றன. அன்றியும், இந்நகரத்தின் சிங்கள வம்ஸத்தினரும் சோனகரும் தானதர்ம பரோபகாரம் புரிந்து மனேல்லாசமா யிருக்கின்றனர். அன்றியும், இந்நகவசித்திடும் சதுர் வருணுதிகளும் கிரமந்தப்

பாமல் அவரவர் தொழிலினைமேவி பிராமணர் வேத மோதுவதும், வைசியர் வர்த்தகம் புரிவதும், வேளாளர் தான்யாதிகளைப் பயிரிடுவதும், சூத்திரர் அடிமைத்தொழிற் புரிவதுமாய்க் கண்டிநகர் ககனபுரியென விளங்குகின்றன. ஆனல், குடிகட்கு வரிகளைச் சுமத்தியதே பெருங் கஷ்டம் அதைச்சிறிது தணிந்திடில் நலமாயிருக்குமென தமது திருவுள மிரங்கவேணும்.

கீர்த்திசிங்கன்:—மந்திரி! உமக்கு யாதேனும் மதியுளதோ? குடிகட்கு வரிகளை அதிகப்படுத்திடில் பொக்கிஷத்தில் திரவியம் சேருமென் றுணர்கிலாயோ? அன்றியும், வரவு குறைந்து சிலவு அதிகரிப்பதால், இன்னும் வரிகளை ஒன்றிற் கிரண்டாய் அதிகப்படுத்தி வசூல் செய்யவேண்டும். அரண்மனை உத்தியோகஸ்தர்கட்கு இவ்வளவு சம்பள மென்னத்திற்கு பாதிக்குப்பாதி குறைத்து விடும். சிலரை நீக்கிவிடும். ஒருவனே பல தொழிலைப் பார்வையிட்டுக் கொள்ளலாம். மாட்டு மந்தையைப் போல அநேகர் சூழ்ந்திருப்பது என் மனதிற்குக் கிஞ்சிற்றேனும் சம்மதமில்லை.

ஆலப்பனை:—அரசே! முன்னமே குடிகட்கு வரியதிகமென சகிக்க முடியாமல் தத்தளிக்

இன்றனர். பின்னும் வரிகளைச் சுமத்திடில் தாங்கமுடியுமோ? அரண்மனை உத்தியோகஸ்தர்கட்குச் சம்பளம் குறைவென அன்வஸ்திரத்திற்கு பஞ்சமுற்றவரா யிருக்கின்றனரே இன்னும் குறைத்திடில் ஜீவிப்பதெவ்விதம்? இவையனைத்தும் சற்று நிதானமாய் யோசித்தருளல் வேண்டும்,

சீர்த்திசிங்கன்:—மந்திரி! நீ ரென்ன அறிவிலிய அமைச்சனு யிருக்கின்றனை, குடிகள் பொருள் சேகரிக்கப் பற்பல விதமாய்ப் பாசாங்கு செய்தால், யாமும் அதற் கேற்றபடியே சம்பாதிப்பது மதியின மன்றோ? அவர்கள் எவ்விதமாய் கெட்டழிந்தாலும் நமக்கென்ன? வரிசெலுத்தத் தவறிடில் பற்பலவித தொந்தரை புரிந்தாயினும் பணத்தை வசூலித்துக்கொள்ள வேண்டுமன்றி, சும்மா விடக்கூடாது சம்பளம் குறை வென்பவரை உடனே நீக்கிவிடும். பத்து பேர் வேலையை ஒருவன் பார்த்துக் கொள்ளலாம்.

என, நவின்றமை யனைத்துங் கவனித் துணர்ந்த ஆலப்பனை மந்திரி ஆச்சர்யமுற்று அற்பருக்கு வாழ்வு வந்தால் அநியாயத்தைத் துணைவகித்து அக்ரம புரிவரென்பதுபோல பஞ்சத்திற் சிக்கிக் கஞ்சிக்கிக் காற்றாய் பறந்து கஷ்டநிஷ்டூர மடைந்த வறுமையாளனுக்கு இராஜரீகம் கிடைத்தா

லன்றோ? இவ்வளவு கொடுமை புரியலாயினன். இனி தடுத்துச் சொன்னால் நம்மையும் சிரசாக்கினைச் செய்திடுவானென மனமிரண்டு, மௌனமுற்றிருந்தனன் அப்பால், அந்திப்பொழு தானவுடனே கொலுகலைந்து, அரசன் முதலானோரும் அவரவரிருப்பிட மேகினர்.

இங்ஙனம் நிற்க, மறுநாள் அருணோதயத்தில் அந்நகர வாசிகளனைவரும் மனவிசாரமுற்றவராய் கீர்த்திசிங்கன் துர்க்குணத்தினாற் புரியும், குரூர பயங்கர கொடுங்கோன் முறைக்குச் சகியாதவராய் மனந்திகைத்து, யாவரும் ஒன்றாய்க்கூடி ஆலோசனை புரிந்து இவ்விபரீதத்தை ஆலப்பனை மந்திரியிடம் புகல்வோம், அவராயினும் அரசனை சீர் திருத்தம் செய்தாலாச்சுது இல்லையாகில், இந்நகரத்தை விடுத்து மறுநகரிற் சென்று ஜீவிப்போமென மனந் துணிந்து மந்திரியின் மாளிகையில் வந்து விசன முற்றவராய்க் கலவரத்துடன் நின்றிருக்கையில் சேவகரால் கேள்வியுற்ற ஆலப்பனை வியப்புற்று குடிகாள்! நீங்கள் யாது காரணமாக இத்தகைய பரிதாப நிலைபுடன் கண்ணீர்த் ததும்பக் கவலை யுற்றவராய் வருகலாயினீரென வினவுதலும் அன்னோர் புகல்வதாயினர்.

குடிகள்:—ப்ரபு! யாங்கள் இத்தனை நாளாய் யாதொரு மனக்குறையுமின்றி இந்நகரிற் பிழைத்திருந்தோம். இனி எம்மால் நிர்வகிக்க

முடியாது கொடுங்கோன் மன்னன் வாழும் நாட்டிற் கடும்புலி சூழுங் காடுநன்றே என்பது போல, துர்க்குண வேந்தன் அரசியற்றும். இந்நகரில் வசிப்பதிலும் மறுநகரேகி ஜீவிப்பது நலமென யோசிப்பதாயினோம்.

ஆலப்பளா:—குடிகாள்! நீவி ரிசைப்பதைக் கவனிக்கின் வியப்புறுந் தன்மை யன்றோ? இந்நகரில் உமக்கென்ன குறைநேர்ந்தன. அன்றி, அரசனாற் றீதுற்றனவோ? யான் கவனித்துணர்கவிபரமாய்ப் புகலுக.

குடிகள்:—மஹாப்ரபு! யாங்க ளெவ்விதம் மொழிகுதும் சொல்வதற்கோ நாவெழவில்லை. ஆயினும் நின்சமுகம் புகன்றிடில் எம்மனோர் துயரகலுமென் றிசைப்பதாயினோம் தயாநிதி! இந்நகத் திறைவனாகிய கீர்த்திசிங்கன் ஆதியில் மிகவும் உத்தம குணத்தினனா யிருந்தனன். தற்சமயமோ வெனின் துர்க்குணத்தைத் துணையாய் வகித்து பற்பல அக்ரம் புரிந்து, பக்தியென்பது கிஞ்சிற்றேனுமின்றி தேவாலய மஹோற்சவங்களை நடத்தாமலும், ஆதுலர், அந்தணர், ஜங்கமர், சந்யாசி, யோகீஸ்வரரானோ ஊரில் வாலாகாதென துரத்துவதும், சதாகாலமும் மாதர்மையலிற் சிக்கியவனாய் கண்ணுற்ற கன்னியரை கைவப்படுத்த முயல்வதும்,

மறத்திடில் சிரசாக்கினை விதிப்பதும், வரிகளை அதிகப் படுத்துவதும், சிறுபிழை புரிந்திடினும் பெருங் குற்றமாய் மதித்து, கொலைஞர்களை விடுத்து கொல்லச் செய்வதும், கை காலைத் துணிப்பதும் கண்ணைப் பிடுங்குவதுமாய்ப் பற்பல விபரீத அநியாய அக்ரமம் புரிந்து பரதவிக்கச் செய்கின்றனன். ஓர் நாள் நற்குணநிபுணகிய பிரமித்தனை யென்பவர் அவனுக்கு நன்மதி புகன்று குடிகளை வருத்தாதீரென் றிசைப்ப திடீரென அவர் சிரசைக் கட்கத்தினுற் றுணித்தனன் அவன் இத்தியாதி கொடுமை புரிகின்றனனே யாங்களெவ்விதமாய் இந்நகரிற் ஜீவிப்பது.

ஆலப்பனை:—குடிகாள்! நீங்கள் யாதொரு மனவருத்தமு மெய்தாதீர். இவ்வற்பனுகிய கீர்த்திசிங்கனே வெனின் தனது குலத்திற் கேற்ற மதியமைந்தனு யிருக்கின்றனன். கஞ்சிக்குக் காற்றுய்ப் பறந்த பஞ்சைப் பயலுக்கு அகஸ்மாத்தாய் அரசுரிமை கிடைத்தால் மனேகர்வத்தைத் துணையாய் வகித்து, பாப புண்ணிய மின்னதென்றுங் கவனித்துணராமல் யாவரையும் * மசகம் போல் மதித்து, கெர்வத்தினுல் றுள்ளிவிழுகிறுன்.

* மசகம்- கொசு.

உமது சகாய மெனக்கிருக்குமாகில் அவன் மமதையைப் பக்குவமாய் அடக்கிவிடலாம். ஆனால், நாம் பாஷித்த சமாச்சாரம் பிறர் செவியிற் புகுதலாகாது. இவை யனைத்தும், இரகஸ்யமாக நமது மனதிற்றானே இருக்க வேண்டும்.

குடிகள்:—மஹாப்ரபு! எம்மைச் சார்க்குந் தயாநிதிபோன்ற உமது மனதின்படியே நடந்துக் கொள்வோமன்றி தவிர்த்திலோம். எவ்விதமாயினும் யாங்கள் துயரின்றி நகரிலுய்ய கிருபைகூர்ந்தருள்வீர்.

ஆலப்பனை:—யாதும் பயமுறாதீர் கருணாகரன் கிருபாவிசேஷண்யம் ஆனால், கீர்த்திசிங்கனுக்குச் கிஞ்சிற்று மதிபுகன்று வருகிறேன்.

குடிகள்:—ப்ரபு! வெகு ஜாக்கிரதையாய் தப்பித்துக்கொண்டு வருவீர். பிரமித்தனைபோ லாவி யகன்று யணுகுவீராகில் ஆபத்தாய்விடும்.

ஆலப்பனை:—யான் அரசனிடம் வெகு தந்திரமாய்ப் பாஷித்துத் தப்பித்துக்கொண்டு வருவேன்.

குடிகள்:—ஆனால், வள்ளிநாயகனாகிய கதிர்காமத் தையனை தியானித்துக்கொண்டு செல்வீர்.

என, நவின்று அவரவரில்லத்திற் கேகினர். அப்பால், ஆலப்பனையானவன். அரண்மனையில்

வந்து அரசனைப் பணிதலும் முன்னோன் வினவுத லாயினன்.

கீர்த்திசிங்கன்:—மந்திரி! யாது விசேஷம்? நின் வருகையைத் தெரிவிப்பாய்.

ஆலப்பனே:—அரசே! குடிகளின் மனத்துயர் அதிகரித்து விட்டன. முன்னிருந்ததைவிட அதிகமான வரிகளைச் சுமத்திவிட்டீராம், கற்பு வாய்ந்த கன்னியர்மீது மையலுற்று நீர் அழைத்தால் அவர்கள் சம்மதியாவிடில் சிரச்சேதம் செய்கின்றீராம். சிறுபிழை செய்தாலும் பெருங்குற்றமாய் மதித்து, கண்ணைப் பிடுங்குவதும் கைகாலைத் துணிப்பதும் கொலை புரிவதுமாய் பற்பலவித அக்ரமம் புரிகின்றீராம். இனி எவ்வாறு இந்நகரிற் ஜீவிப்பதென கண்ணீர்த்ததும்பக் கதறியழுது முறையிடுகின்றனர். ஆதலின், குடிகளை வருத்திடிற் பழுதுறுமன்றோ? பதிவிரதைகளை இச்சித்துமையலுற்றால் பாபமல்லவோ? வரிகளைச் சுமத்திடில் எவ்விதமாய்ச் செலுத்துவர்? இவை யனைத்தும் தாம் கவனித்தருளல் வேண்டும்.

கீர்த்திசிங்கன்:—சபாஸ்! ஆலப்பனே நன்றாய்ச் சொன்னீர். வெகு ஆச்சர்யமாய்த் தோற்றுதே, குடிகட்கு வரிகளைச் சுமத்தாவிடில் பொக்கிஷம் நிறையுமா இவ்வருஷம் துரைத்

தனக் காரியங்களில், அதிக சிலவு பிடித்தி ருக்கின்றதே, இவையனேந்தும் நீர் கவனித் துணர்கிலிர்போற் காண்கின்றது, உமக்கு இராஜாங்கத்தின் மீது கிஞ்சிற்றாயினும் கியாபக மில்லே. என்றாலும் குடிகள் தமது சவுக்கியத்திற் கியன்ற விதமாய்ப் பற்பல வித பாசாங்கு செய்வது வழக்கந்தானே. வரிகளைக் குறைத்திடில் இந்நகரத் தரசன் போ லெங்நகரிலுங் கிடையா தென்பார். யான் அவர்களைத் தொந்தரவு செய்கிறே னென்று உம்மிடத்தில் முறையிட லாயின ரே, யானென்ன உமக்கு பயந்தவனே? ஒரு நிமைப் போதில் உம்மையும் அவர்களையும் கொன்று விடுவதற்கு என்னு லாகாதோ? யானென்ன யாருக்காயினும் பயந்தவனே? தேவர்கட்கும் அஞ்சாதகீர்த்திசிங்க னென் றால், காசினி யெங்கும் கிடு கிடு வென நடுங்கித் தத்தளிக்கின்றனவே, அற்பனுகிய நீயாயெனக்குமதி புகல்வதாயினே, சரி! சரி! நன்றாயிருக்கின்றது வேடிக்கை, கற்புநிலே தவறாத கன்னியரும் உலகிலுளரோ? பெண் ணாய் ஜனித்திடில் ஓர் புருஷனுடன் வாழ வேண்டு மன்றோ? யானென்ன ஆண்பிள்ளை யல்லவா? யான் இச்சித்திடில் மறுப்பது மனேகர்வந்தானே அவர்களைக் கொன்றா லென்ன பாபம் பயிரிடுங்குடிகள் வரிசெலுத்

தாமல் திரவியங்களை மறைத்து வைத்துக் கொண்டு ஏமாற்றினால் அவர்கள் கண்ணைப் பிடுங்கினுலென்ன · கைகாலைத் துணித்தா லென்ன ஈதனைத்தும்பாபமாகுமோ தயாநிதி போன்றசாந்த மனதமைந்த என்குணத்தை நீர் இத்தனைநாளாய்க் கவனித்தும் அற்பர்க ளாகிய நகரவாசிகளின் வார்த்தையைக் கே ள்வியுற்று வந்தீரே! நின்மனதில் என்னை யாரென்று கவனித்தனை, ஜாக்கிரதையாய்த் தப்பித்துக்கொள், இத்தருணமே, இந்தக் கட்கத்தினுல் உன்னை சித்திரவதைச் செய் திடுவேன். அருகில் நிற்காமல் ஓடிப்போ வாய்.

என, நவின்றமை யனைத்துங் கேள்வியுற்ற ஆல ப்பனை மனமிரண்டு நடுநடுங்கி, நமனைக் கண் ணுற்ற நல்லுயிர் போலத் திகிலுற்று, அம்மம்மா இத்தினம் யான் தப்பிப் பிழைத்தது கர்த்தவ்ய மாகிய கதிர்காமத்தையன் கிருபாவீக்ஷண்யமும் பெற்றதாயின் வயறுசெய்த புண்ணியமும், மனை யாளின் மங்கிலிய பாக்கியமும், நமது உயிரைக் காப்பாற்றிய தென மதித்து, இனி இந்நகரமெவ் விதமாய் தத்தளிக்குமோ, ஆ! விதிவசமே ஆதி யில் உத்தமனுகிய பிரமித்தனை யென்பவரை இந் நகரின் மன்னனு யமைத்திடில் இத்தகையதுன்ப மணுகாதே ஐயோ! கேடு வரும்போது மதிகெட்

டுவரு மென்பதுபோல, முள்ளிக்கொடையும், திசாநாயகனும் புரிந்த விபரீத கலகத்தினுல் யானையின் துதிக்கையில் மலர்மாலை கொடுத்த னுப்பவும், அது அற்பனுகியகீர்த்தி சிங்கன் கழுத்திற்சூடி அரசனு யமைத்ததும், அத்துன் மார்க்கன் இத்தியாதி அநியாயம்புரிவதும் கவ னித்திடில் இந்நகரிற்கு யாதோ அனர்த்தகா லம் விளையும்போற் காண்கிறதேயென மன விசார மடைந்து கலவரத்துடன் சற்றுநேரம் யோசித்து இவனைத் தந்திரமாய்ச் சமாதானப் படுத்த வேணுமென்று பரிதாப நிலையுடன்புகல்வ தாயினன்.

ஆலப்பனே:—அரசே! சிட்டுக்குருவியின் மீதுராம பாணந் தொடுப்பதுபோல வீரப் ப்ரதாபம் பொருந்திய வள்ளலெனும் மகாராஜா மிக வும், ஏழையாகிய அடியேன்மீது இத்த கையவெஞ்சினமுறுதல் நன்கல்ல,யானென் செய்வேன். நகரவாசிக ளுபத்திரவத்தால், நின் சமுகம் நவில்வதாயிற்று, இவ்விஷயத் திற் சிற்றமின்றி மன்னித்தருளல்வேண்டும் தயாநிதி,

கீர்த்திசிங்கன்:—மந்திரி! யானென்ன அத்தகைய குரூர குணத்தினனு, என்மன துமக்குத் தெரியாததோ, நகரவாசிகள் குற்றம் புரிந் திடில்மன்னித்துக்கொண்டிருந்தால், இராஜ

ரீகத்திற்கு ஒழுங்காகுமா, குடிகட்கு வரிக ளைச் சுமத்தாவிடில் துரைத்தனக் காரியத் தின் செலவிற்கு யென்ன செய்வது நீரே யோசித்துப் பாரும்.

ஆலப்பளை:—ஆம்! மஹாராஜா சொல்வதும் சரி யாகத்தான் இருக்கின்றது.

கீர்த்திசிங்கன்—நல்லது, இவ் வருஷத்தில் சகல கிராமங்களிலு மிருந்து திறைபணம் வந்து விட்டதா,

ஆலப்பளை:—அரசே, சப்ரகாமம் தவிர மற்ற கிராமங்களி லிருந்து மூன்று மாதத்திற்கு முன்னதாகவே பகுதிப்பண மனைத்தும் குறைவின்றி வந்துவிட்டது. ஆனால், சப்ர காமத்தில் காலமழை தவறி கழனிகளெல் லாம் உலர்ந்துவிட்டதால், அந்நகரவாசிகள் அன்ன தரித்திரத்தால் அலைச்சற் பட்டுத் தத்தளிக்கின்றனர்.

கீர்த்திசிங்கன்:—அதைக் குறித்து பரிதாபமாய்ப் பேசவேண்டாம். அவர்கள் எவ்விதமாய்க் கெட்டழிந்தாலும், நமக் கென்ன? நமது கப்பத்தைச் செலுத்தாவிடில் வெகுவித தொந்தரை செய்து பயங்கரப்படுத்தி பண த்தை வசூலித்துக்கொள்வோம்.

ஆலப்பளை:—சரி! மஹாராஜாவின் மனோ பீஷ்டம் அவ்விதமே யாவரையேனும், சப்ரகாமத்திற்கு அனுப்புவீர்.

கீர்ந்திசிங்கன்:—மற்றவ ரென்னத்திற்கு நீரே சென்று வசூல்செய்துக்கொண்டு வாரும்.

என, புகன்றவை யுணர்ந்த ஆலப்பளையும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து, அரண்மனையிலிருந்து தனது மாளிகையில் வந்து ஓர் விதமாய் மனவிசார முற்றிருப்பதைதனது பத்தினியாகிய குமாரியாமி கண்ணுற்று, பிராணபதி!நீர் யாதுயராலிவ்வித மனமயக்க மெய்தலாயினீ ரென்க, பெண்ணே, இத்தினம் காலையில் குடிகள் வந்து என்னிடம் முறையிட்டதைக் குறித்துஅரசன்பாற் புகன்றேன், அத்துன்மார்க்கன் சிஞ்சிற்றும் சம்மதியின்றி, தனது குலத்தளவேயாகுங் குணம் என்பதுபோல, குடிகளை வருத்தப் படுத்துவதிற் குறையணுகா திருக்கின்றன னெனினும் என்மீதும் வீணிற் கோபித்துக் கொண்டானென்க. குமாரியாமி திடுக்கிட்டு பிராணேசா, குடிகளைப் பற்றி நீரேன் விசாரிக்க வேண்டும் யாவரெவ்விதமாணலும் நமக்கென்ன வந்தது, நாமேன் வீணுய் அரசனுக்கு பகையாக வேண்டும் இந்நகரத்தரசன் மனதை யறிந்திருந்தும் நீரேன் அகப்பட்டுக் கொள்ளுகிறீர். வானரத்தினிடம் சிரசைக் கொடுத்தால் பேனைப்பார்த்தாலும் பார்க்கும்

காதைக் கடித்தாலும் கடிக்கும் என்பதுபோல, கீர்த்திசிங்கன் அரசனுக்குசுதேயென்று அன்பாய்ப் பாஷித்தால் சிரசாக்கினை செய்வானே, துஷ்ட சகவாசம் பிராணசங்கட மென்பதுபோல, இப் பாதகனிடம் உபாயமாய்த் தப்பித்துக்கொள்வதே சாமார்த்தியமென் றுணர்வீ ரெறனள். மனைவியின் வார்த்தையைக் கேள்வியுற்ற ஆலப்பனை ஆலோசனை புரிந்து, மாதே! நீ புகல்வதும்சரியே ஆனால் குடிகளை வருத்தும் மன்னனுக்கு மதி புகல்வதே மந்திரிகட் கியல்பென, மநுஸ்மிருதி முறையிடுவதால் யானவனைச் சீர்திருத்தம்செய்ய முயன்றேனென்றனன், குமாரியாமி நகைத்து பிராணபதி! கர்த்தபம் செவியிலெத்தகையபுத்தி புகட்டினும் சித்தத்தி லுணராதென்பது போல அற்பனுகிய அரசனுக்கு நன்மதி புகட்டினும் நாகம்போற் கரவுடைய மனத்தினனுய்க் கொல்லத் துணிவானென்றனள்.

அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற ஆலப்பனையும் சரிதானென மனதில் வதித்து பெண்ணே! யான் சப்ரகாமத்திற்குச்சென்று, கப்பம் பெற்று வர வேண்டுமென அசன் ஆக்ஞாபித் திருக்கின்றனன். ஆதலின், யான் சென்று வருகிறேன் நீங்கள் வெகு ஜாக்கிரதையா யிருப்பீரென்க, குமாரியாமி மனந் திகைத்து, பிராணபதி. நீர் சென்று விட்டால் யாங்களெவ்விதம் தனித்திருப்பது.

திறைப்பணம் கொணர வேறொருவரை யப்பனு லாகாதோ வென்னலும், மாதே! அரசன்குணத் தைக் கவனித்தும் நம்மிஷ்டம்போல மற்றொரு வனையனுப்பினாற் கோபித்துக்கொள்வான். ஆகை யால், யான் சென்று அந்தக் காரியத்தை நிறை வேற்றிக்கொண்டு சீக்கிரமாய் வருகின்றேன். அஞ்சவேண்டா மென்று தைரியம் புகன்று தனது பத்தினியின் தங்கையை அருகிலழைத்து இரஞ்சிதா! நீ பருவதிசையடைந்த கன்னி யா கையால், உன் தமக்கையாரை விட்டுப் பிரியாமல் வீட்டிற்றானே பிள்ளைகளுடன் விளையாடிக் கொ ண்டிருப்பாய், யான் சப்ரகாமத்திற்குப் போய் வருகிறேனென்று சிலவு பெற்றுக்கொண்டு கண் டிநகரை விடுத்து பிரயாணமாயினன்.

அப்பால், இரஞ்சிதபூஷணியானவள் தமது தமக்கையுடனும் பிள்ளைகளுடனும் இல்லத்திற் றானே மனோல்லாசமாயிருக்கையில், வினாசகாலே விபரீதபுத்தி யென்பதுபோல தனது அத்தான் புகன்ற வார்த்தையும் மனதில் வகித்திடாமல், தனது சேடியருடன் நந்தவனத்திற் சென்று மலர்பறித்து வருகிறேனென்று தன் தமக்கையா கிய குமாரியாமிடம் சிலவு பெற்றுக்கொண்டு பூங்காவிற்குச் செல்வதாயினள்.

## Scene 2.

**இடம்.** **நந்தவனம்.**

**கதாநாயகர்.**

இரஞ்சிதபூஷணி தோழிகள், முள்ளிக்கோடை,
கீர்த்திசிங்க மஹாராஜன்:

இங்ஙனம் நிற்க, குமாரியாமியின் சகோதரியாகிய இரஞ்சித பூஷணி தனது சேடியருடன் நந்தவனத்திற் சென்று தாமரைப் பொய்கையிலிறங்கி ஜலக்கிரீடை புரிந்து மனோல்லாசமாய்ப் பந்தாடல் பாச்சிகையாடல் முதலாகிய பற்பல விநோத திருவிளையாடல் புரிந்து அந் நந்தவனத்தில் அடர்ந்து செழிப் புற்றிருக்கும் விருக்ஷங்களிற் காய்த்துக் கனிந்திருக்கும் மா, பலா, கொய்யா, வாழை, அன்னுசி, கிச்சிலி, மாதுளை, இலந்தை முதலாகிய இனிமைசேர் கனிவர்க்கங்களைப் பறித்துப் புசித்து, நந்நீரருந்திக் களை தெளிந்து, அச்சோலையிற் புட்பித்திருக்கும் மன மலர்களிற் கொஞ்சம் பறித்துக்கொண்டு செல்வோமென யாவரும் ஒன்றாய் வருகையில் இரஞ்சித பூஷணி ஆச்சர்யமடைந்து புகல்வ தாயினள்.

இரஞ்சித பூஷணி:—சேடியர்காள்! இவ்வனத்திற் கலங்காரமாய் புட்பித்திருக்கும், மணமலர்

களின் விநோதங்களைக் கண்ணுற்றீரா, ஆ! ஹா! என்ன ஆச்சர்யம், இதோபார்த்திரா; மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, செண்பகம், அல்லி, அசோகு, ரோஜா, தவனம், மகிழம், குரிவேர், பாரிஜாத முதலாகிய நறுமணம் வீசும் மணமலர்களின் விநோதங்களைக் கண்ணுற்ற என்மனம் பிர்மானந்த மெய்தின. ஆதலின் நாம் இவற்றிற் கொஞ்சம் பறித்துக்கொண்டு செல்வோம் வருவீர்.

என, இரஞ்சிதபூஷணி தனக்கிஷ்டமான மலர்களைப்பறித்துக் கொண்டிருக்கையில் அந்திப்பொழுதுமறைந்தது, சந்திரோதயம் தோன்றி எங்கணும் பகற்காலம்போற் பிரகாசித்திருப்பதைக் கண்ணுற்ற சேடியரனைவரும் வியப்புற்று, இனி தாமதிக்க லாகாதென இரஞ்சித பூஷணிக்குப் புகல்வதாயினர்.

வனஜாக்ஷி:—அம்மணி, யாமிங்ஙனம் தாமதிக்க லாகாது, அஃதேனெனின் இங்ஙனம் யாவரேனும் ஆண்பிள்ளைகள் வந்தால் விபரீதங்களாய்விடும், அன்றியும், உனது அத்தானும் அருகிலில்லை உன் தமக்கையார் எங்கள்மீது கோபிப்பார் துரிதமாய் இல்லத்திற் கேகுவோம் வருவீர்.

இரஞ்சிதபூஷணி:—ஏன் இவ்வளவு அவசரப்படுகிறீர் இன்னுஞ் சற்றுநேரம் இந் நந்தவனத்

தைச் சுற்றிப் பார்த்து வாசனை வீசும் மண மலர்களிற் கிஞ்சிற்று பரித்துக் கொண்டு செல்வோம் தாமதிப்பீர்.

என, பாஷித்துக் கொண்டிருக்கையில், கீர்த்தி சிங்கராஜன் கொலுகலேந்த வுடனே ஆடை ஆப ரண சிங்கார அலங்கிர்தனாய் ஓர் வெண்புரவியின் மீதமர்ந்து இரண்டாவது மந்திரியாகிய முள்ளிக் கொடை யென்பவனுடன் நந்தவனத்தை நாடி வருகையில் அங்ஙனம் சேடியருடன் மனோல்லாச மாய் மலர் பறித்திருக்கும் இரஞ்சித பூஷணி யைக் கண்ணுற்று, மையலுற்றவனாய் மதிமயங்கி திக்ப்ரமையுற்று, ஆலோசிப்ப தாயினன்

கீர்த்திசிங்கன்:—ஆ! ஹா!! சித்தசன்தேவியினும் சிறப்புறும் தேஜஸமைந்த முகவஜீகர மில கும் இத்தியாதி ரூபசுந்தரியையும் பிர்ம்மன் சிருஷ்டித் திருக்கின்றன னன்றோ, என்ன அழகு, என்ன சுந்தரம், காள மேகத்தை நிகர்த்த கருங் கூந்தலில் வானத்தி விலகும் மதிரவிபோன்ற சந்திரபிறை, சூரியபிறை யணிந்திருக்கும் சிங்காரமும், பூரணச் சந்தி ரோதயம் போன்ற நெற்றியில், தகத்தகாய மாய் விளங்கும் திலதப்பொட்டின் ப்ரகாச மும், வள்ளைக் கொடியில் மின்மினிப் பூச்சு கள், உலாவுதல்போற் றுலங்கும் நவர்த்ன கசித மயமான ஆபரணாதிகளும் குமிழ

மலர்போன்ற நாசியின் அலங்காரமும் சேற் கண்டைபோன்ற இருவிழிகட்கும் மையெ ழுதிபுருவந் துலங்கும் விநோதமும், கொவ் வைக் கனிபோன்ற இதழிற்கிசைந்த முல்லை யரும்பெனத் துலங்கும் பல்வரிசையும், “பொற்பதுமைக்குச் சித்திர மெழுதியது போல” அழகானந்த சிங்கார மமைந்த திரு மேனியில் இந்திரவர்னப் பட்டாடையை யுடு த்திக் கானமயிலினம்போ லிந் நந்தவனத்தி லுலாவுகின்றனளே. ஆ! ஹா!! இவளென்ன அந்தரத்தில் வசிக்கும் கந்தர்வ ஸ்திரீயோ? அன்றி, நான்முகன் இவளைச் சிருஷ்டித்து என்னைப்போன்ற வாலிபரை மயக்கி மரண மூர்ச்சை செய்ய அனுப்பினனோ? நாம், இத் தரணியி லுதித்தது லாயபயனென்? இத்தருணமே இம்மாதரசியைக் காந்தர்வ மணம் புரிந்துக் களிப்புற்றிருத்தலே சுகா னந்தம். ஆனால் அருகிற்சென்று விசாரிப் போம்?

என, தன்மனதிற்றானே யோசித்துக்கொண்டு யாதுந் தோற்றாமல் பித்தனைப்போற் பிதற்றிக் கொண்டிருப்பதைக் கவனித்த முள்ளிக்கொடை யானவன் வியப்புற்று வினவுதலாயினன்.

முள்ளிக்கோடை:—அரசே! யாது விசேஷம்? சற்று நேரத்திற்கு முன் நன்றாயிருந்தவர்

இத்தருணம் ஓர்வித மதிமயக்க முற்றவராய் என்னென்னமோ பாஷித்துக்கொண்டு பிதற்றுவதாயினீரே. ஈதென்ன ஆச்சர்யம்?

கீர்த்திசிங்கன்:—மந்திரி! யான் யாதெனப் புகல்வேன். அதோ நமதுநேரில் பார்த்தனையா, அழகானந்த முகவஜீகர தேஜஸமைந்த மாதரசி யானவள் பொற் ப்ரகாச திருவுருவந் துலங்க தெய்வகன்னிபோல நவரத்ன கசிதமயமாய்த் துலங்கும், ஆடை ஆபரணதிக ளணிந்து கான மயிலினம்போ லுலாவிக்கொண்டு என் மனதை மயக்கி மையலிற் சொக்கி மரண மூச்சைசெய்ய மனோல்லாசமாய் சேடியருடன் மலர் பறித்துக்கொண் டிருக்கின்றனள். மந்திரி, இம்மாதரசியின், வாசஸ்தானமும் தாய் தந்தையின் நாமதேயமும் உனக்குத் தெரியுமா? இவ்வளவு ரூப லக்ஷணத்துடன் உலகிற் ஜனித்து, எவர்களை மயக்கி மறலி யுலகுக்கு அனுப்ப வந்தனளோ வென, யான் மதித்திடினும் தற்சமயம் யோசிக்கில், என்னைக் கொல்ல வந்தாற்போ லிருக்கின்றனவே. அடடா, என்ன அழகு என்னசிங்காரம்?

முள்ளிக்கோடை:—அரசே! நீர் இந் நகரத்தைப் பரிபாலனம் புரியும் மன்னனு யிருந்தும் நகரவாசிகளை இன்னாரென கவனைத்துணர்கிலீர்

போலும் பாஷிக்கின்றீரே. உமக்குத் தெரியாததோ? இம்மாதரசி யானவள் பிரமித்தனையின் அருந்தவப் புத்திரி, ஆனுல், இன்னும் விவாகமாகவில்லை.

கீர்த்திசிங்கன்:—ஆ! ஹா!! அப்படியானுல மெத்த சந்தோஷம், ஐயோ! பாபம் இஃதுண்மை எனக்கு முன்னமே தெரிந்திருந்தால் மஹா நற்குணம் பொருந்திய பிரமித்தனை யென்பவனைசிரச்சேதம்செய்யேனே. அவன்என்ன குற்றம் புரிந்தாலும் மன்னித்து, என் உயிர்த்தோழனுய் மதித்திருப்பேனே. அடடா! என்னஅநியாயம் செய்துவிட்டேன். அவன் மரணத்தைக் கேள்வியுற்ற இம்மாது என்னமாய் அழுதுத் துடித்தனளோ? யாதொன்றையும் தீர விசாரியாமல் செய்வதெல்லாம் பிறகு மன வருத்தத்திற் கிடமாகு மென்பது உண்மை முடிந்தனவே

என, மன மயக்கமுற் றிருக்கையில் இரஞ்சித பூஷணி தனது சேடியருடன் நந்தவனத்தை விடுத்துத்தனதில்லத்திற் கேகினள். அப்பால், கீர்த்திசிங்கன் இனிஅந்தக் கன்னிகையை நாமே மணம் புரிவோமென்னும் பேராவலுடன் கண்ணைத் திறந்து நந்தவனத்தை யுற்றுப்பார்த்து நடனசிங்கார தேஜஸமைந்த மாதைக் காண்கிலேனே யென வருத்தமடைந்து, இனி எவ்விதம் சகிப்ப

தென விசனமுற்று, திரவியத்தை யிழந்த வறுமையாளன் போற் சித்த ப்ரம்மையுற்று மனங் கலங்கி ஆற்ருெணு துயரெய்தி யவனுயினும் மனதைரியம் விடாமல், இனி எவ்விதமாயினும் அந்த சுந்தர வடிவமைந்த கன்னியை மணம் புரிந்து சுகானந்தமாய் வாழ்ந்திருப் போமென ஆவலுற்றவனுய் தனது மந்திரியுடனே மாளிகை யில் வந்துவிட்டனன்.

---

### Scene 3.

இடம் அரசன் மாளிகை.

கதாநாயகர்.

இராஜன் கீர்த்திசிங்கன்

இராஜபத்தினி மிர்துபாஷிணி

மந்திரிகள் திசாநாயகன், முள்ளிக்கோடை.

தூதுவர், இரஞ்சிதபூஷணி, தோழிகள், குமாரியாமி.

---

இவ்வனம் நிற்க, கீர்த்திசிங்க மஹாராஜன் இரஞ்சித பூஷணியின் மீதுற்ற ஆசையினல் மதி மயங்கி மாளிகையில் வந்து மலரணை மஞ்சத்திற் சயனித்துக்கொண் டிருக்கையில் இராஜபத்தினி வியப்புற்றவளாய் அருகில் விசாரிப்பதாயினள்.

மிர்துபாஷிணி:—பிராணபதி! இத்தினம் யாதோ? ஓர்வித மனமயக்கத்துடன் அமுதருந்தாமலும், நித்திரை புரியாமலும் விசாரமுற்றவராய் முகமயர்ந்து நாவுலர்ந்து ஓர்விதமாயிருக்கின்றீரே என்ன விசேஷம்?

கீர்த்திசிங்கன்:—மாதே! என்னைத் தொந்தரை புரியாதே. யான் பகற்பொழுதில் அஸ்வ சவாரிசெய்த அலுப்பினுல், என்மேனி யலுத்து மயக்கமா யிருக்கின்றன. சற்றுநேரம் பொறுத்து அன்னம் புசிக்கின்றேன் இத்தருணம் என்னைத் தொந்தரை செய்யாதே.

மிர்துபாஷிணி:—சரி! சரி!! நீர் அஸ்வ சவாரி செய்யப்போயினதும் உண்மையே. யான் அதனை ஒப்புக்கொண்டேன் அங்ஙனம் யாரோ ஓர் கன்னிகையைக்கண்டு மையலுற்று மதிமயங்கினீர்போற் காணப்படுகின்றது. உமது குணமெனக்குத் தெரியாததோ?

கீர்த்திசிங்கன்:—பெண்ணே, யான் உண்மையை புகன்றிடினும் செவியிற் கொள்ளாமல் யாதோ ஒன்றை நினைத்துக்கொண்டு வீண் வார்த்தையால் விபரீதமா யுளறுகிறுய்சற்று நேரம் நித்திரை புரிந்து மயக்கந் தெளிந்தபிறகு அன்னம் புசிப்பேன் அப்பாற் செல்வாய்,

என, புகன்றவை யுணர்ந்த இராணியும் ஓர் விதமான சந்தேகக் கலவரத்துடன் போய் விட்டனள். அத்தருணம் கீர்த்திசிங்கன் இரஞ்சித பூஷணியை நினைந்துநினைந்து மனமுருகி மதன் விடும் மலர் வாளினுல் மனமயக்கமுற்று நித்திரையின்றி நினைவுதடுமாறி ஓர் சேவகனை அருகிலழைத்து, நீ இத்தருணமே சென்று, திசாநாயகனை அதிதீவிரமாய் அழைத்துக் கொண்டு வருவாயென்க, அவனும் அரசன் ஆக்ஞையைச் சிரமேல் வகித்தவனுய் வாய்வேக மனோவேகத்துடன் திசாநாயகன் வீட்டிற் சென்று மஹாப்ரபு, நமது அரசன்உம்மை சீக்கிரமாய் அழைத்துவரச் சொன்னுரென் றியம்புதலும், அன்னோன் அதிசயித்து, அஃதென்ன விசேஷமென்று அத்தூதுவனுடனே ஓடிவந்து அரசே, இந்நேரத்திலெனை யழைப்பித்தகாரணம் யாதோ தெரிவிப்பீராகில் நிறைவேற்ற சித்தமாய்க் காத்துக்கொண் டிருக்கிறேனென்ன, கீர்த்திசிங்கன்மனோல்லாசமெய்தி சந்தோஷத்தினுல் வாய்குளறி எனதன்பிற்கிசைந்த மந்திரி, யான் இந்நகரில் ஓர்கனியைக் கண்ணுற்ற ஆவலுற்றுநின்சகாயத்தாற் கிடைக்குமென யோசித்திருக்கின்றேன். உம்மால் முடியுமாவென மன்னன் மனதின் மர்மரகஸ்ய மின்னதென்று கவனித்துணர்கிலாத மந்திரி சிரித்து கனியென்முல் பழந்தானே இது கிடையாதாவென மதித்து, அரசே, உமது இஷ்டத்தின்படி

யே கொண்டுவருகிறேன் விபரமாய்ப் புகல்வி ரென, வினவுதலும், அரசன் நவில்வதாயினன்.

கீர்த்திசிங்கன்:—மந்திரி! யான் அந்திப்பொழுதில் அஸ்வசவாரி செய்துக்கொண்டு நந்தவன மார்க்கமாய்ச் செல்கையில், அங்ஙனம் அந் தரமகளீரெனுங் கந்தர்வஸ்திரீயை நிகர்த்த அழகானந்த முகவஜீகர தேஜஸமைந்த ஓர் கன்னிகை நவரத்ந பரணங்களணிந்து தன துசேடியருடன் மனோல்லாசமாய் கான மயி லினம்போல மலர்பறித்துக் கொண்டிருப்ப தைக் கண்ணுற்ற யான் மதிமயங்கி காந்தர் வமணம் புரிவோமெனும் பேராசையால் அம்மாது யாரென அருகிலிருந்த முள்ளிக் கொடையை விசாரித்தேன். அவர் பிரமித் தனையின் குமாரத்தியென்றும் அவட்கு இன்னும் மணமாக வில்லையென்றும் சொல் லிக்கொண் டிருக்கும்போதே தன்னுடன் வந்திருந்த பெண்களுடன் நந்தவனத்தை விடுத்துத் தனதுமாளிகைக்குப்போய்விட்ட னள். அம்மாதரசியை நீர் எவ்விதமாயினும் அழைத்து வந்திடில் எனது உயிர்நிலைக்கும் ஆனால், இந்த விஸ்வாசத்தை எனதுயிர் பிரி யும் வரையிலும் மறந்திலேன் கவனிப்பீர்,

திசாநாயகன்:—அரசே! யான் யாதெனப்புகல்வே ன். தனது மனதில் அம்மாதரசியை மதித்து

மனமயங்கி திகைப்பது நன்கல்ல, வீணிற் பாபமும் பழியும் நேர்ந்துவிடும் அஃதே னெனில் கற்புடைய் கன்னியின் மீது ஆசைப் படுவது சரியல்லஅவளோ தெய்வபக்தியிற் சிறந்தவள், அன்றியிம் ஆலப்பனேயின் மைத் துனி அவரிதை யறிந்தால் அவமானமும் ஆபத்தும் நேரிடும், உமக்கு மஹாராணி யிருக்கமற்ற பெண்களின்மேல் ஆசையென் னத்திற்கு இனிஅந்தப் பெண்ணின் மீதுற்ற இச்சையை மறந்துவிடும், அற்பசுகத்திற்கு இச்சித்தால் ஆயுள்வரையினும். உலக நிந் தனேயாய் விடும். நீவி ரென்மீது * முனிவு றுது கவனித் தருளல் வேண்டும்.

கீர்த்திசிங்கன்:—மந்திரி, நீ மொழிந்தவை வினவி டில் எவ்வாறுளதெனின், நாவரண்டு ஆவி போகுது தாகந்தணிய ஜலங்கொண்டுவா வென்றுல் சீதளத்தினுல் ஜலதோஷமுண் டாகும் வேண்டாமென்று தடுப்பதுபோல போக்குக் காட்டுகிறீரே, இதுஞாயமாகுமா? இனி அந்தப்பெண்ணுடன் சுகித்திடாமல் ஆவியகன்று அந்தகன்பதி யணுகில் இந்த இராஜ்ய மென்னுடன் வருமா? என் பிரா ணனேயே அந்தக் கன்னியின் பாத காணிக் கையாகஅர்ப்பணம் செய்திருக்க எனக்குப்

---

* முனிவுறுதல்-கோபித்துக்கொள்வது.

பழியும் பாபமும் வருமென யோசிப்பது மதியீனமன்றோ? இனி காலதாமதஞ் செய்தால் எனது ஆவி நிலைப்பது அரிதாகுமென மதிப்பீர்.

என, மனமயக்கமாய்ப் புகன்ற மன்னன் வார்த்தையைக் கேள்வியுற்ற திசாநாயகன் சற்று யோசித்து அரசே! உமதிஷ்டப்படியே தூதுவரையனுப்பி அந்தப் பெண்ணின் கருத்தை யறிந்து வரச்சொல்லுவோ மென, அரசனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்தனன். அத்தருணம், மந்திரியானவன் அருகிலிருந்த தூதரையனுப்பி, மஹாராஜாவின் கருத்தை ஆலப்பளையின் மைத்துனனியாகிய இரஞ்சிதபூஷணிக்குத் தெரிவித்து அவள்மனதை எவ்விதமாயினும் கலைத்து இவண் அழைத்து வருவீரென் றுக்ஞாபித்தனன். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற தூதுவர்களும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து, ஆலப்பளையின் மாளிகையணுகி குமாரியாமி தனித்திருக்கும் சமயம் பார்த்து திடீரென இரஞ்சித பூஷணியின் முன்வந்து அம்மணி, உம்மை மஹாராஜா அழைத்து வரும்படியாய் ஆக்ஞாபித்தன ரென்றனர். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற அக்கன்னிகை யோசித்துச் சொல்வதாயினள்.

இரஞ்சித பூஷணி:—என்ன ஆச்சர்யம்? இந்நேரத்தில் யாதுகாரணமாக அரசனென்னை வர

வழைக்கலாயினர்? இதைக் கவனித்திடிர் சந்தேகமா யிருக்கின்றனவே,

தூதுவர்:—அம்மணி! சந்தேக மொன்று மிலது உமக்கு இனி நற்காலந்தான்.

இரஞ்சித பூஷணி:—அதைக் குறித்து உங்கட் கென்ன, வந்தது, உமது அரசன் என்னை அழைக்கவேண்டிய தென்ன? பெண்கள் தனித்திருக்கு மிடத்தில் அச்சமின்றி வந்து நாணமின்றி பேசலாயினீர். சீ! சீ! அப்புறம் போவீர்.

தூதுவர்:—சபாஷ்! நல்லவார்த்தை சொன்னீரே யாங்கள் வந்தது என்னத்திற்கு கவனித் துணராமற் பாஷிக்கின்றனையே! நீயுன் தோழிப் பெண்களுடன் அந்திப்பொழுதில் நந்த வனத்தில் விளையாடிக் கொண்டிருக்கையில், கீர்த்திசிங்க ராஜன் நின் முகார விந்தத் தைக் கண்ணுற்று மதிமயங்கி காதலுற் றிருக்கின்றனர் இனி தாமதியாமல் அதி தீவிரமாய் வந்து, அவருடன் சுகித்து மன மயக்கத்தை யகற்றிச் செல்வதுடன் கடமை யென்றறிகிலாயோ.

இரஞ்சித பூஷணி:—ஆ, வனஜாக்ஷி இஃதென்ன அற்பவார்த்தை பாஷிக்கின்றனரே, ஐயோ என் மனம் நடுங்குகின்றதே.

வனஜாக்ஷி:—அம்மணி, என் வார்த்தையை மறுத்து, நந்தவனத்தில் அந்திப்பொழுது வரையினும், தாமதித்ததினு லன்றே? இத்தகைய ஆபத் தெய்தியது, இனி இதைக் குறித்து விசனப் படுவதா லாயபயனென்?

இரஞ்சித பூஷனி:—அம்மா, நந்தவன மென்றிருந் தால் போனுலென்ன? வந்தாலென்ன? இவ் விதமாகவர நேரிடும்.

தூதுவர்:—அம்மணி நாங்களென்ன செய்வோம், அரசன் ஆக்ஞாபித்தவிதம் வந்தழைப்ப தாயினேம் அன்றியும், நீர் அரசனை மணந்து மஹாராணியானல் சகல சுதந்தர வைபவமும் நீ பெற்றிருப்பாயன்றி, எமக்குக் கிஞ் சிற்றேனும் கொடுப்பாயோ, வலியவந்த லக்ஷ்மியைக் கழுத்தைப்பிடித்துத் தள்ளுவதுபோல, தெய்வாதீனமாய் ராணியாவதை மறுத்திடாமல் வாரும்.

இரஞ்சித பூஷணி:—ஐயா, உங்கட்கென்ன நாணமில்லையா, ஆண் பிள்ளைகளென முகத்தில் மீசை வைத்துக்கொண் டிருக்கின்றீரே. நமது சிங்கள வம்ஸத்தினர் உயிர் நீங்கினும் கற்புநிலை தவறுவரோ, அவன் மாநிலம் புரக்கும் மகிபனுயினும் நமக்கென்ன, அற்பமாகிய வடுகனிடம் உமது வம்ஸத்தினளாகிய என்னை அழைத்துக்கொண்டு

போக மனந்துணிந்து வந்தீரே உமக்கு ரோஷமில்லையா, குலத்தளவே யாகுங் குணமென்பதுபோல் அவன்தான் அற்ப நினைவு கொண்டாலும், நீங்கள் மறுத்திடக்கூடாதா? உமதுசகோதரியைப் போலென்னை மதிக்கலாகாதோ?

தூதுவர்:—அம்மணி, நீர் புகல்வதும் நீதியே. நீ கற்புநிலை தவறாத புனிதவதி யென்பதற்கும் ஆக்ஷேபணையில்லை, யாங்களோ அரசன் ஆக்ஞாபித்த விதவே உமக்குத் தெரிவித்தோம், இனி உமது இஷ்டத்தைத் தெரிவிப்பீர்.

இரஞ்சித பூஷணி:—சீ! சீ! அவன் கெட்டான். அந்த வடுகப்பயல் அரசனானால் தானென்ன யான் ஒருக்காலும் சம்மதியேனெனப் புகல்வீர்

என, நவின்றமை யனைத்துங்கவனித்தத் தூதுவர்கள் வியப்புற்று அம்மம்மா! இவள் மஹா உத்தமி இத்தகைய நற்குண மமைந்து கற்புநிலை தவறாத கன்னியா யிருப்பதினாலன்றோ? மதிரவி தோற்றமும், வாயுவின் சகாயமும்வருணன் கிருபையும்விளங்கு கின்றனவென மனதாற்றுதித்து, சிங்கஸவம்ஸ லக்ஷ்மியை நிகர்த்த மங்கள குணகரி, யாங்கள் போய்வருகிறோமென் றவணிருந்து மீண்டு கீர்த்திசிங்கன் மாளிகையில் வந்து நமஸ்

கரித்து, அரசே! எம்மாவியன்ற வரையினும் புகன்றும், அம்மாது கிஞ்சிற்றும் சம்மதியாமல் வடுகராஜனுக்கும் சிங்கள மாதருக்கும் சரிப்படாதென மறுத்து விட்டனள் ஆதலின், கிட்டாதாயின்வெட்டெனமற என்பதுபோல அந்தப்பெண்ணின் ஆசையை மறந்துவிடுமென்ற வார்த்தையைக் கேள்வியுற்று, திரிபுர தகனன்போற் கோபித்துச் சொல்வதாயினன்.

கீர்த்திசிங்கன்:—ஆ! ஹா!! என்ன ஆச்சர்யம் பார்த்தீரா, என்னை இந்நகரத்தின் மன்னனெனவும் மனதிற்கிஞ்சிற்றேனும் நினையாமல் சம்மதியேனென்று புகன்றனளா? சரி, சரி, யானென்ன அற்பனு, இத்ததியே அவளை இவனழைத்து வந்து, இந்தக் கட்கத்தினுல் வெட்டி யெறிந்தும், இன்னும் அவள் வம்ஸத்தினரையும், சித்ரவதை செய்து கொல்வதற்கும் என்னுலியலாதோ, நல்ல திருக்கட்டும்.

என வீராவேசத்துடன் கோபாக்னி ருத்திரன் போற் கர்ஜ்ஜித்து, அறுசுவை பதார்த்த திவ்யன்ன சுகபோஜன மருந்தி தாம்பூல மணிந்து வாசனை திரவியங்களைத் திருமேனியிலணிந்து மலரணை மஞ்சத்திற் சயனித்தும் நித்திரை வருகாமல் மதன்விடும் மலர் கணையால் மனமயங்கி, தென்றற்காற்று வீசுதலினுல் சந்திரனும் வெப்ப

மாய் எனது மேனியை வருத்து கின்றனனே. நறுமணம் வீசும் மலர்மாலேயும் சருகென உலர் வதாயினவே, இனி எவ்விதமாய் ஆவி தரிப்பே னென இரஞ்சித பூஷணியை நினைந்து நினைந்து மனமுருகி அன்றிரவை ஓர் யுகமென மதித்து நித்திரை யற்றிருந்தனன்.

இங்ஙனம், அரசன் மனது அங்கஜன்கணே யால் திப்ரமையுற்று திகைத்திருக்கையில், தூது வர்கள் புகன்ற அநியாய வார்த்தையைக் கேள்வி யுற்ற இரஞ்சித பூஷணி மனந்திகைத்து ஆ! விதி வசமே யானும் ஓர் பெண்ணுய் ஜனித்த கொடு மை போதுமெனக் கண்ணீர்த்ததும்ப விசனப் படுகையில் அருகிலிருந்த சேடியர் மன தைரியம் புகல்வதாயினர்.

வனஜாக்ஷி.—அம்மணி, நீரேன் இத்தகைய மன வருத்த மெய்துவதாயினீர் அரசனனுப்பிய தூதுவர்கள்தான் போய் விட்டனரே இனி இதைக்குறித்து யோசிப்பதா லாயபய னென்?

இரஞ்சித பூஷணி.—அம்மா, உலகாதிபனுக்குக் கிஞ்சிற்றேனும் மதியின்றி தூதரையனுப்பி என்னே வரவழைக்கத் தகுமா, ஐயோ உத் தமகுலத்திற் ஜனித்த எனது கற்புநிலைதவ றுதல் நீதியா?

ஆனந்தவல்லி.—அம்மணி, கற்புடைய மகளிர்மீது காதலுற்றவரும் ஜீவிப்பரோ? திரேதாயுகத்தில் இலங்கேஸ்வரனுகிய இராவணன் பதிவிரதாசிரோன்மணியான சீதையம்மன் மனநெருப்பினுல் புத்திர மித்திர சகோதர வம்ஸத்தினருடன் ஆவி யிழந்து அந்தகன்பதியணுகவில்லையா, அதைப்போல இந்தக் கீர்த்திசிங்கனுக்கும் அழிவுகாலம் நேரிட்டாற்போற் காணப்படுகின்றன.

இரஞ்சிதபூஷணி.—அம்மா, நீர் புகல்வதுண்மையே, ஆனுல் அரசன் அன்று கொன்றுல், தெய்வம் நின்று கொல்லு மென்பதுபோல இவன் புரியும் அக்கிரமத்திற்கு பகவான் தண்டிப்பதும் உண்மையே, அவனே இந்நகரத்தரசனுச்சுதே யாதேனும் துன்பம் விளைத்தால் என்ன செய்வோம் ஐயோ! எனது அத்தானும் அருகிலில்லையே. அவர் சப்ரகாமத்திற்குப் போகும்போது என்னை வெளியிற் செல்ல வேண்டாமென்று எவ்வளவோ புத்திமதி சொல்லிவிட்டுப் போனுரே இந்தச் சண்டாளி கவனித்திருந்தால் இத்தகைய துன்பமணுகுமா, ஐயோ, பாழும் நந்தவனத்திற்குச்சென்று பழி தேடிக்கொண்டேனே இனியாது நீது விளையுமோ?

வனஜாக்ஷி.—அம்மணி, நந்தவனத்திற்குச் சென்றால் தானென்ன, அந்திப் பொழுதாகு முன் வந்துவிட்டால், இந்தத் துன்பம் வருமா, ஆயினும் பெரியதல்ல. இவ்விபரீதத்தை உன் தமக்கையிடம் சொன்னால் அவள் உன் கற்புநிலைக்கு பங்க மணுகாமற் காப்பாற்றுவள் மனத்துயரெய்தாதீர்.

என, புகன்றவையுணர்ந்த இரஞ்சித பூஷணியானவள் கிஞ்சிற்று மனதைரியத்துடன் களிப்புற்று, ஆம் ஆம், இதுதான் தகுதியான யோசனையென்று குமாரியாமி யிருக்கும் மாளிகையில் வந்து நின்று இவ் விதிவசத்தை எவ்விதமாய்ப் புகல்வதென, கண்ணீர்த் ததும்பக் கலவரத்துடன் தலையிரங்கி நிற்கையிற் குமாரியாமி கண்ணுற்று, ஆச்சர்ய மடைந்து ஆ! எனது அருமைத் தங்கா யாது மனவருத்தத்தால் கண்களில் அருவிபோல் நீர் சொரிய நிற்கின்றனை, யென வினவுதலும், இரஞ்சிதபூஷணி நிகழ்ந்தவை யனைத்தும் ஆதியோடந்தமாய்ப் புகன்று, அரசன் விடுத்த தூதரென்னை அழைத்ததற்கு யானவர்கட்குத் தக்க மதி புகன்று அனுப்பினேனே ஒருவேளை அவர்கள்போய்ச் சொன்னால் யாதேனும் துன்பம் புரிவானோ, வென அஞ்சுகிறே னென்றனள். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற குமாரியாமி தனது சகோதரியின் கண்ணைத் துடைத்து தங்கா,

இதைக் குறித்து நீ விசனப்படாதே, அவன்தான் மதியில்லாமல் அற்ப நினைவு கொண்டாலும் நாம் முனிவுறுமல் மன்னித் தருளல் வேண்டும். அந் தத் துஷ்டன் ஏதாயினும் தீது விளைக்க மனதி லெண்ணுவானாகில் யாம் எவ்விதமாயினும் தப் பித்துக் கொள்ளுவோம். ஆனால், எனக்கு அதி தீவிரமாய்த் தெரிவித்து விட்டனையே அதுதா னெனக்கு சந்தோஷமென இரஞ்சித பூஷணி யின் மனதைத் தேற்றினள். அத்தருணம் நிகழ்ந் தவையனைத்தும் கனவில் கண்ணுற்ற துன்பத் தைப்போல மறந்து, பெண்களனைவரும் அவர வர்க் கிசைந்த மஞ்சத்திற் சயனித்து நித்திரை செய்திருந்தனர்.

**Act 2, Scene 1.**

இடம் அரண்மனை.

## கதாநாயகர்.

கீர்த்திசிங்கன், முள்ளிக்கோடை,

குமாரியாமி, மிர்துபாஷினி.

---

இங்ஙனம் நிற்க. கீர்த்திசிங்கமஹாராஜனானவன் இரஞ்சித பூஷணியின் ஆசையினால் அனலிட்ட மெழுகுபோல, மனமுருகி அன்றிரவெல்லாம் நித்திரையின்றியவனாய் அருணோதயத்தி லெழுந்து, ஸ்நானபான நேமநிஷ்டை புரிந்து இனிமைசேர் கனிவர்க்கங்களுடன் மதுரமாகிய பலகாரபக்ஷணம் புசித்து தாம்பூலந்தரித்து, அத்தர், பன்னீர், புனுகு, ஜவ்வாதென்னும் வாசனைதிகளைத் திருமேனியிலணிந்து நவரத்தின கசிதமயமாய்த் துலங்கும் ஆடை ஆபரணங்களை அலங்கிர்தமாய்ப் புனைந்து, மனோல்லாசத்துடன் மந்திரி பிரதானியர் சூழ சிம்மாசனத்தி லமர்ந்து இராஜரீகம் புரிந்திடினும் இரஞ்சிதபூஷணி தனது கண்முன் நிற்பதுபோலவும், மறைவது போலவும், மனமயக்கமுற்றிருக்கையில், இராஜரீக துரைத்தன காரியங்களிலும் மனதைச் செலுத்தாமல் யோகீஸ்வராள் தமது மனதை சதாசிவன்பாற் செலுத்தியது போல கீர்த்திசிங்கன் மனதை இரஞ்சித பூஷணியின்

மீது செலுத்தி அம்மாதரசியை எத்தினம் மணம் புரிந்து சித்தங்களித் திருப்பேனென்று பாதவித்துத் தனது அருகிலிருந்த மந்திரியாகிய முள்ளிக்கொடையைப் பார்த்துச் சொல்லுவதாயின்.

கீர்த்திசிங்கன்.—மதியிற் சிறந்த மந்திரி! இந்த இரஞ்சிதபூஷணியின் மனோகர்வத்தைக் கவனித்தனையா? என்னை அரசனென்றுயினும் மதித்தனளா? என்னை விரும்பாதவள் என் நகரத்திலேன் இருக்கவேண்டும்? அந்தப் பாதகியின் சிரசை இருதுண்டாய் வெட்டி எறிந்துவிடுவேன். பேதையென் றஞ்சுகின்றேன். அன்றியும், பேதமையென்பது மாதர்க்கணிகல மென்பதுபோல அவளுக்கு மதியில்லா விட்டாலும். நாம் அவசரப்பட்டு கொன்றுவிடுவது நன்கல்ல. இன்னும் நன் மனதுடனே விசாரித்துபார்ப்போம், ஆனல், ஆலப்பளையின் மனைவியாகிய குமாரியாயியை வரவழைத்து அவளிடத்தில் என் வருத்தத்தைப் புகன்றிடில், அந்த உத்தமி எவ்விதமாயினும் அவளை என் மனதிற் கிசையச் செய்திடுவள். இதுதான் சரியான யோசனை, அதி தீவிரமாய் அம்மாதரசியை இவன் அழைத்து வருவீர்.

முள்ளிக்கோடை.—அரசே! தமது இஷ்டத்திற் கிணங்க தூதுவரை யனுப்பி அரைவிநாடி

யிற்றுனே, குமாரியாமியை அழைத்துக் கொண்டு வருகிறேன். ஆனல், நின்மனதின் சிற்றத்திற்கேற்ப கொலைபுரிய மதிப்பதைத் தவிர்ப்பத்திருவுள மிரங்கவேணும். அன்றி யும், பேதமைகுணமமைந்த குமாரியாமி இவண் ப்ராப்தமாகில் முனிவுறுது. இனிய வசனத்தால், அவள் மனதைக் கலைத்து உமதிஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்வது உத்தமம்.

என, நவின்றமையுணர்ந்த அரசனும் அவ்வி தமே நன்கெனச் சம்மதிக்க, முள்ளிக்கொடையா னவன் குமாரியாமியை அழைத்து வருவீரென்று சில தூதரை யனுப்பதலும், அவர்கள் அதிவிரை வாய் ஆலப்பனேயின் மாளிகையில் வந்து, குமாரி யாமியைப் பார்த்து அம்மணி உம்மை அரசன் அதிவிரைவாய் அழைத்துவரச் சொன்னர் வரு வீரென்க, அம்மாதரசி! அதிசயித்து என்னே மஹாராஜா யாதுகாரணமாக வரவழைப்பதாயி னர்? சரி! சரி!! இரஞ்சித பூஷணியின் மீதுற்ற ஆசையினல் நம்மிடம் புகன்று சரிப்படுத்திக்கொ ள்வதற்கு ஆலோசித்தனனே? ஆ! இஃதென்ன அறிவற்ற யோசனே! நல்லதிருக்கட்டும் நாம் சென்று அவன் மனக்குறிப்பை யுணர்ந்து அதன் பிறகு இவ்விஷயத்தைக் குறித்து யோசிப்போ மென, தன் தங்கையாகிய இரஞ்சித பூஷணியை அருகிலழைத்து அன்புடன் புகல்வதாயினள்.

குமாரியாமி —என தன்பிற்கினிய சகோதரி! அரசனென்னை அழைத்து வரும்படி ஆக்ஞாபித்தன னென்று தூதுவரென்னிடம் தெரிவித்தனர், யான் போகாமலிருப்பதும் சரியல்லவென்று அவன் முன் சென்றால், யாது வினவுவனோவென, சந்தேகமா யிருக்கின்றேன். அன்றியும், இத்தருணம் உன் அத்தானும் அருகிலில்லையே, யாது துன்பம் விளையுமோ? நல்ல திருக்கட்டும் யான்போய் வருகிறேன். கதிர்காமத்தையன் துணையிருப்பார். நீ யாதொன்றுக்கும் அஞ்சாமல், பகவத்யானமாயிருப்பாயம்மா.

என, புகன்றவையுணர்ந்த, இரஞ்சிதபூஷணி மனமெலிந்து, தமக்கா யானென்செய்வேன் அருகிலில்லையே நீர் அங்ஙனம் சென்று அவன் கருத்திற் கிணங்காவிடில் யாதேனும் கொடுமை விளைவிப்பானுகி லென்செய்வதென என்மனம் நடு நடுங்குகின்றனவே யென்க குமாரியாமி தனது சகோதரிக்குத் தைரியம் புகன்று, அம்மணி! நீ யாதொன்றுக்கும் அஞ்சேல், யான்சென்று தந்திரமாய்த் தப்பித்துக்கொண்டு வருகிறேனென்று, அரண்மனையை நாடி வருகையில், வழியிலெதிருற்ற இராணிமாளிகையில் வந்து, மிர்துபாஷிணியைப் பணிந்திடவும், அவள் வியப்புற்று அம்மணி நீ யென்ன இத்தகைய பரிதாப நிலையுடன் வருகலா

யினையோவென வினவுதலும், அம்மாது புகல்வ ராயினள்.

குமாரியாமி.—அம்மணி! ம்ஹாராஜா அஸ்வமீ தமர்ந்து நகர்வலம் வருகையில், எனது சகோதரியாகிய இராஞ்சிதபூஷணி நந்தவனத்திலுலாவக் கண்ணுற்று ஆவலுற்றவராய், தூதுவரை அனுப்புதலும் அவள் சம்மதியாமல் பற்பல நீதிவார்த்தைகளைப் புகன்று அனுப்பிவிட்டனள், பிறகு என்னையும் வரவழைக்கலாயினர். இதை யோசிக்கயாது துன்பம் விளையுமோவென என்மனதில் பயங்கரமாய்த் தோற்றுகின்றன. இவ்விபரீதத்திற்கு யானென் செய்வேன்.

மிர்துபாஷிணி.—அம்மா! ஈதென்ன அந்நீதம்? சரி! சரி!! இதற்காகத் தான் அவர் இரண்டுநாளாய் ஓர்வித மனமயக்கமா யிருந்தனர். பார்த்தனையா? அரசன் மனம் எவ்விதமாய் மாறிவிட்டன நல்லதிருக்கட்டும் நீ அவரிடம் சென்று அவர் மனதின்படியே சம்மதித்தாற்போல நன்மொழி புகன்று வந்துவிடு நான் அவரைத்தனியா யழைத்துத் தகுந்த மதியுரைத்துத் தடுத்து விடுகிறேன் நீ மனவருத்தமின்றி அஞ்சாமற் சென்றுவருவாய்.

என, மனதைரியம் புகன்று அனுப்பினள். குமாரியாமியும் அவ்விதமே நன்கெனச் சம்ம

தித்து அரண்மனையில் வந்து அரசனைக் கண்ணுற்று நமஸ்காரம் புரிந்தனள். கீர்த்திசிங்கராஜன் மனமகிழ்ந்து அம்மணி! நீ! மிகவும் புனிதவதியே எனக்கு உயிர் பிச்சை தரவந்த உத்தமியும் நீயே, இந்த ஆசனத்தில் வீற்றிருப்பா யென குமாரி யாமி தன் மனதில் பயங்கரமும் திகிலும் அச்சமும் வகித்து, அரசே! அன்னை, தந்தை, குரு, தெய்வமும் தேவரீரென சித்தத்தில் மதித்து ஜீவித்திருக்கும் இப்பேதையை யாது காரணமாக வரவழைக்கலாயினீரோ புகல்வீரென்றனள்.

கீர்த்திசிங்கன்.—அம்மணி! தமது குழந்தைகளும் தமது அருமை சகோதரியும் க்ஷேமமா? நின் மணாளன் சப்ரகாமத்திற்குப் போயினரே தனது க்ஷேமத்தை அடிக்கடி தெரிவிக்கின்றனரா? அவர் சென்று அதிக நாளாகின்றது சீக்கிரம் வந்து விடுவார். யாதுஞ் சஞ்சல மெய்யாதீர். ஆனால் உன் விஷயத்தில் எனக்கு மெத்த சந்தோஷம். அஃதேனெனில் நீ நல்ல விவேகி குடும்பத்தைச் செவ்வையாய்ப் பார்த்துக் கொள்ளுகின்றனையென்று கேள்வி யுற்றிருக்கின்றேன். ஆலப்பனையும், மெத்த நல்லவர் அவரை யான் முதன் மந்திரியா யமைத்துக் கொண்டதினாற்றான் இராஜ்ஜியம் சீர்திருத்தமாயிருக்கின்றன. தற்சமயமும் துரைத்தனக்

காரியத்தை முன்னிட்டு தான் போயிருக்கின்றனர். ஆனால் உமது வீட்டின் சங்கதியையான் சந்ததமும் விசாரித்துக் கொண்டிருந்தாலும் உங்களைக் கண்ணுற்று பேசவேண்டுமென ஆவலுற்று, வரவழைத்தேன் யாவரும் சுகந்தானே.

குமாரியாமி.—அரசே! யாவரும் உமது கிருபாவீக்ஷண்யத்தாலும், கதிர்காம வடிவேலன் அனுக்கிரகத்தினாலும் யாதொரு மனக்குறைவின்றி சுகக்ஷேமமாய்த் தான் ஜீவிப்பதாயினோம். தயாநிதி!

கீர்த்திசிங்கன்.—மெத்த சந்தோஷம்அம்மா இரஞ்சித பூஷணி உனது தங்கையா? ஆ! ஹா!! மெத்த விவேகியென்றுங் கேள்வி நல்ல குணசாலியாயிருந்தால் அதுபோதும் அவள் க்ஷேமம் எப்படி? சுகந்தானே.

குமாரியாமி —இரேஜேஸ்வரா! இந்நகரிலுமது கர்ப்பவசத்தின் பிள்ளைகளைப்போற் ஜீவித்திருக்கும் எங்கட்கு யாதொரு மனவருத்தமுமிலது. எனது சகோதரியாகிய இரஞ்சிதபூஷணியும், பிள்ளைகளிருவரும் சுகக்ஷேமமாய்த்தானிருக்கின்றனர். சப்ரகாமத்திற்குச்சென்ற என் மணாளரும் அடிக்கடி கடிதமூலமாய் அவருடைய க்ஷேமத்தைத் தெரிவிக்கின்றனர் மஹாப்ரபு.

கீர்த்திசிங்கன்.—ஆ! இரஞ்சித பூஷணியைச் சகோதரியாய்ப் பெற்ற உமக்கும் உமதுவம்ஸத்தினர்கட்கும் பெருமையுண்டாகுமன்றி சிறுமையிலது. அம்மணி! என்மனதிலோர் விருப்ப முள்ளது அதை நின்பாற் புகன்றிடில் எனதுயிர் நிலைக்குமென யோசிப்பதாயினேன். ஆனால், அவை சில அறிவிலிய அற்பருக்குத்தான் மனவெறுப்பா யிருந்திடினும், தயாநிதிபோற் சாந்த மனதமைந்த நீ மாத்திரம் அவ்விஷயத்திற் சிற்றமின்றி, என் மனதின்படியே சம்மதித்தால், எனதுயிருடலிற்றரிக்கும், ஆனால், இவ்விஸ்வாசத்தை உலகமுள்ளளவும் யான் மறந்திலேன்.

குமாரியாமி.—மாநிலம் புகலரும் கீர்த்திவாய்ந்த மஹாராஜ ராஜேஸ்வரா! நின்தேசத்தில் வசிக்கும் உமது அடிமைகளாகிய எங்களால் உமக்கென்ன காரியம் உண்டாகும்? அன்றியும், யானோ அற்பமாகிய பெண்ஜனனம். என்னால் முடியாத காரியத்தை வினவுதல் தமது திருவுளத்திற்குத் தகுதியோ?

கீர்த்திசிங்கன் —அம்மணி! அவ்விதம் சொல்லாதே இரண்டுநாளாய் எனதுயிர் தத்தளித்து' இன்றைக்கோ! நாளைக்கோ இன்னுஞ் சற்று நேரமோ யமனுலகணுவதென வழிபார்த்திருப்பதை, நின் பேருதவியினால் உயிர்

பிக்ஷையளித்துக் காப்பாற்றுவாயென மதித்துதான் வரவழைக்கலாயினேன் ஆனால், அப்படியொன்றும் விசேஷமான பெரிய காரியமல்ல, நின்திருவருட் பேருதவியினால் கிடைக்கப்பெற்று சுகானந்த மெய்துவது தான். அஃதென்னவெனின், யான் நேற்றை யதினம் ஓர் பெண்புரவியின் மீதமர்ந்து, மனோல்லாசமாய் நந்தவனத்தில் வருகையில் அங்வனம் உமது அருமைத் தங்கையாகிய இரஞ்சித பூஷணியானவள் தனது தோழியருடன் மலர்பறித்துக்கொண் டிருந்தனள் யான் கண்ணுற்று, மையலுற்றவனாய் மதி மயங்கி சோர்வடைந்தேன், ஆதலின் அந்த இரஞ்சிதபூஷணியை எவ்விதமாயினும் என் மனதிற்கிசையச் செய்வித்து என் காதலைத் தவிர்ப்பாயாகில் எனது, உயிர் நிலைக்கும். இதுதான் உன்னாலெக்குற்றன பேருதவி.

குமாரியாமி.—அரசே! மஹாராணியிருக்க நீர் இத்தகைய அற்பமாகிய அடிமை ஸ்திரீகளை இச்சிப்பது நன்கல்ல, இவ்வார்த்தையை யாவராயினும் கேள்வியுற்றால் நகைத்துப் பரிகாசிப்பத் தடையுளதோ?

கீர்த்திசிங்கன்.—அம்மணி! அவ்விதமாய் மதித்திடுதல் வீணெண்ணமென மதித்திடுவீர். இந்நகரவாசிகள் எனக்கடங்கியவ ரென்றிடி

னும், யானுனது தங்கையின் காதலால் உமக்கடங்கியவனானால், இந்தக் கண்டிமா நகரமும் உமது ஸ்கைவசந்தானே, ஈதுணரா மல் என்னென்னமோ பாஷிக்கின்றீரே. சரி! சரி!! நீர் ஸ்திரீஜாதி யாகையால் ஓர்விதமாய் மனமிரளுகிறீர், அப்படி யொன்றும் சந்தே கங் கொள்ளாதீர் யான் இந்நகரத்தின் அர சனும், இரஞ்சிதபூஷணியே மஹாராணியெ னவும் மதித்திடுவீர்.

குமாரியாமி.—ஐயா! என்னவார்த்தை சொல்வ தாயினீர். இழிவுற்ற மனத்தினர்போற் பேசு கின்றீரே. இதுநீதியா! யானே முன்பிறந்த வள் அவள் எனக்குப் பின்னால் ஜனித்து என்னிடம் வளர்ந்தவள். அவளிடத்தில் இத் தகைய அற்பவார்த்தையை யான் எவ்வித மாய் வெட்கமில்லாமற் சொல்வது, அவள் நற்குலத்திலுதித்து கற்புவாய்ந்த கன்னி யாச்சுதே. அன்றியும், ஒருவனை மணந்து இல்லறத்தியல்பிற்குகந்த பிதுரார்ஜ்ஜிதகர்ம விரதானுஷ்டானம் புரிந்து சம்ஸாரம் புரிப வனை அநியாயமாய்க் கொடுத்துவிடுதல் உத் தமர்கட்குரியனவா? யாவராயினும், அறிவி லிய துர்க்குணத்தினர் அக்ரமம் புரிந்திடில், ஆக்கினை விதிக்கும் அரசர்கட்கு இது யோ க்கியதையா? இனி இத்தகைய இழிவான

வார்த்தையை என் முன் நவில்வது நீதி யானதல்ல, மஹாப்ரபு! மன்னித்தருளல் வேண்டும்.

கீர்த்திசிங்கன்.—அம்மணி! இத்தகைய வெஞ்சின முற்றுக் கடு கடுத்துரைப்பது சரியல்ல. நீர் என்மேல் கோபித்துக்கொள்வதற்கும் சொந்தமுண்டு. யானுன் தங்கையின் சரசநாயகனுனதினால் மைத்துனன் முறையாய்ப் பாவிப்பதாயினீர் இதனால்யானும் சந்தோஷப்பட வேண்டுமன்றி குற்றம்பார்க்கிற் சுற்றமில்லை யென்பதுபோல, தப்பிதமாய் மதிப்பதுநன்கல்ல. இனியாகிலும் என் மையல் தணிய நின் சகோதரியை அழைத்து வருவீர்.

குமாரியாமி.—ஆ! ஈதென்ன அந்நீதம்? அரசே சொல்லத்தகாத வார்த்தையைச் சொன்னால் யார்தான் சம்மதிப்பர்? மதியிற்சிறந்து மநு நீதி வழுவின்றி இராஜரீகம் புரியும் மஹாராஜாக்கள் தமது வம்ஸத்தின் மாதர்களில் தம்மால் மங்கிலியமணிந்த பெண்களைத் தவிர மற்றவரைத் தமது சகோதரியைப் போல மதித்துக் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம், இடும்பை, வேட்கையென்னும் அஷ்டவித துர்க்குணத்தையும் அருகில் வரவொட்டாமற் றடுத்து, துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனஞய்க் குடி

கள்மீது கருணைவாய்ந் திருப்பாராகில் மாநிலம் புகலரும் மகிபரென மதி ரவி யுள்ளளவும்கீர்த்தி வாய்ந்திருப்பர். அஃதன்றிவேலி பயிரை யழிப்பதுபோல அரசனே நகரவாசிகளை அநியாயம் புரிந்து, கற்புடைய மாதரை பற்பல விதமாய் மதித்து சுகித்திடுதற் கிச்சித்தால் துரோக சிந்தனையன்றோ? ஈதனைத்தும் கவனித் துணராமல் வீண்பழி தேடிக்கொண்டால் ஈசனருள் புரிவரோ? அன்றியும் குலத்திற் கிசைந்த விதமன்றோ? பெண்களைக் கொள்வதும் கொடுப்பதும் மனிதர்கட்கியன்ற வழக்கம். அரசே! யாங்கள் சிங்கள வம்சத்தினராச்சுதே நீர் வடுக குலத்தினரா யிருந்தும் உமக்கும் எமக்கும் சம்பந்தஞ் செய்வது நீதியாகுமா? ஆதியில் இலங்கேசனாகிய இராவணன் கற்புநிலை தவறாத சீதையின்மே லிச்சித்ததாலன்றோ தனது புத்திரமித்திர சகோதர வம்சத்தினருடன் ஆவியகன்று அநியாயமாய் வாழ்நாள் குறுகி மரணமடைந்தனன். அன்றியும். பாஞ்சாலியின்மீது காதலுற்ற கீசகன்தனது சகோதரராகிய உபகீசகர்களுடனே யாவரும் பழிக்கும்படியாய் நிந்தையேற்று அவன்ஆசையற்று ஆவியிழந்தனன். ஈதனைத்தும் கவனித்துணராமல் அற்ப சுகத்திற்

கிச்சித்து குல நலமும் பாராமல் பலவித மாய்ப் பாஷிப்பது அபாயமன்றோ? இனி யொருக்காலும் இத்தகைய அற்ப வார்த்தை யை என்முன் பாஷித்திடாதீர்.

கீர்த்திசிங்கன்.—ஆ! அப்படியா! குமாரியாமி யாது வார்த்தைப் புகன்றனை? சபாஷ்! நீ பேதை யென்றல்லவோபொறுத்தேன் துன்மார்க்கி! நீயா யெனக்கு மதியுரைக்கலாயினை? இப் போதும் தானென்ன யான்நினைந்தால் அரை விநாடியிற்றானே உமதுசிங்கள வம்ஸத்தின ரனைவரும் கொன்றுவிடுவதற்குத் தடையுள தோ? கீர்த்திசிங்க ராஜனென்றால் எத்த கைய வீரப்ரதாபம் பொருந்திய மன்னரும் மனம் நடுங்கி உயி ரகல்வாரெனின் நீ யெவ் வளவு? இத்தருணமே இந்தக் கட்கத்தினால் உன் சிரசைவெட்டி நாய் நரிகட்கு விருந் தளிப்பேன். ஆயினும், இன்னுஞ்சற்று நிதா னிப்போ மென்று மன்னித்தேன். இந்தக் கண்டிமாநகரம் என்னுடையது தானே. என் மீது விருப்பமில்லாதவரை என் வாளா யுதத்தால் வெட்டி யெறிந்தால் தானென்ன யாரென்னைத் தடுப்பவர்? ஆலப்பனோ தானெ ன்ன எனக்கு மந்திரியல்லவா? யான் உன்னி டம் இவ்வளவு பரிதாபமாய் வேண்டிக் கொண்டும் என்னென்னமோ உளறுகின்ற

னையா? ஜாக்கிரதை! என்னை இன்னாரென் றறிகிலாயோ? உன் சகோதரியை யான் இச் சிப்பதற்கு நீங்கள் எவ்வளவு புண்ணியஞ் செய்திருக்க வேண்டுமென் றெண்ணாமல் வாயில் வந்தபடியா சாஸ்திர புராணங்களை இழுத்துப் போடுகின்றாய். சரி! இப்பொழு தாகினும் நீ என்ன சொல்லுகிறாய்,

என, கத்தியை ஓங்கிக்கொண்டு அருகிற்சென் றவுடனே குமாரியாமி மனமிருண்டு திகிலடைந்து ஆ! விதிவசமே அநியாயமாய் ஆவியிழந்தால் என் பிள்ளைக ளிருவரும் பரதேசிகளாய் விடுவரே என் மணாளனும் அருகிலில்லையே ஐயோ என் னைக்கொன்றுவிட்டு எனதுசகோதரிக்கும் யாதே னும் துன்பம் விளைப்பான்போ லிருக்கின்றனவே, ஆனால் நாமிதற்கோர் உபாயம் செய்யவேண்டு மென தனதிருகரமும் சிரமேற்குவித்து மாநிலம் புகலரும் கீர்த்திவாய்ந்த மகாராஜேஸ்வரா! நீர் என்மீது இத்தகைய வெஞ்சினமுறுதல் நன்கல்ல நானென்செய்வேன். இத்ததியோன் சென்று யென் தங்கையாகிய இரஞ்சிதபூஷணிக்கு உமது இஷ்டத்தைத் தெரிவித்து அவள் சம்மதமானால் அனுப்புகிறேன். யான் புகன்றவார்த்தையினால் யாதேனும் குற்றமிருக்கினும் மன்னித்தருள வேண்டும் தயாநிதி.

என, குமாரியாமி மிகவும் பரிதாப நிலேயுடன் புகன்றவார்த்தையைக் கேள்வியுற்ற காதகனுகிய கீர்த்திசிங்கன் தனது கோபத்தையடக்கி பிர்மானந்தமெய்தியவனுய்ச் சந்தோஷமுற்று சாந்த மனதுடன் புகல்வதாயினன்.

கீர்த்திசிங்கன்.—அம்மணி! இதுதான் உத்தமிகட்கியன்ற பெருதவிஅரசனுக்கு ஆபத்துற்ருல் அதனைத் தவிர்ப்பதுதானே சிலாக்கியம் ஆகையால், நீ இத்ததியேசென்று, உனது சகோதரியாகிய இரஞ்சிதபூஷணிக்கு வெகுவித ஆசை வார்த்தை சொல்லி என்னுடன் சுகித்திருக்கும்படி செய்வாயாகில் உமக்குச் சகல சுதந்தரவைபவமும் தந்து என் உயிரிருக்கும் வரையில் நீர் புரியும் விஸ்வாஸத்தை மறந்திலேன் ஆனுல் அதிசீக்கிரமாய்ச் சென்று அழைத்துக்கொண்டு வருவீர்.

என, புகன்றவையுணர்ந்த குமாரியாமி மனம் பதைத்து ஆ! விதிவசமே இத்துன்மார்க்கன் இத்தகைய அற்பநினேவுடன் அநியாயமாய் பாஷிக்கலாயினனே. இனிமறுத்திடில் மரண மெய்திடலாகும். ஆனல் இத்தருணம், தந்திரமாய்த் தப்பித்துக்கொள்ள வேண்டுமென மதித்து கீர்த்திசிங்கன் கருத்திற்கிணங்கிய விதமாய்ச் சம்மதித்தாற்போற் பாஷிப்பதாயினன்.

குமாரியாமி.—மஹாராஜேஸ்வரா! இந்த ஏழையின் மீது இத்தகைய வெஞ்சின முறுதல் தமது சித்தத்திற் குவமையுளதோ? தயாநிதி! யான் உலகின் நியாய நுட்பத்தைப் புகன்றேன் அன்றி, வேறிலது யான் இத்தருணமே சென்று என் தங்கையின் மனதிற்கிசைந்த விதமாய் நன்மொழிபாஷித்து, நின் கருத்தைப் புகன்று அம்மாதும் சம்மதித்திடில், நின்சமுகம், ஓர் தாதியைத் தூதனுப்புகிறேன். சந்தேகமெய்தாகிர். வள்ளலே! யான் போய் வரலாமா?

கீர்த்திசிங்கன்:—சபாஷ்! குமாரியாமி! இதுதான் நற்குணத்தினரியல்பு இவ்விதமின்றி என்னென்னமோ பாஷித்துக் கோபத்தை மூட்டினையே சரி! இனி என் கவலையற்றன. நீ! மிகவும் விவேகி! ஆனால், தீவிரமாயெனக்குச் சங்கதி தெரிவிப்பதுடன் காரியத்தை நிறைவேற்றவேண்டும், சீக்கிரம் செல்வாய்.

என, நவின்றனமையுணர்ந்த குமாரியாமி மனந் துடித்து, ஐயையோ! இனி நமது வம்ஸத்தினர் நம்மை இழிவாய் மதித்துப் பரிகாசிப்பரே. இன்றோடு குடிமுழுகிப்போச்சுதே என பயமும் திகிலும் மனதில் வகித்து, இந்த அனியாயத்தை மஹாராணியிடம் புகன்றாயினும் தப்பித்துக்கொள்வதற்கு முயற்சிசெய்வோமென, இராணியா

கிய மிர்துபாஷிணியின் மாளிகையிற் சென்று, ஆ! அம்மணி யாதெனப் புகல்வேனென திடரென்றலறி பூமியிற் சோர்ந்து வீழ்ந்து, கண்ணீர்த் ததும்பக் கதறியழுதனள். இராணி வியப்புற்று இதென்ன விபரீதமென வினவுதலாயினள்.

மிர்துபாஷிணி:—குமாரியாமி! சற்று நிதானி! நீ! அரசன்முன் சென்ற பிறகு நிகழ்ந்த சங்கதி யாது? அவருனை வினவிய தென்ன? அவ்வினாவிற்கு நீ யாது பதிலுரைத்தனை? யான் கவனித்துணர்க விபரமாய்ப் புகல்வாய்.

குமாரியாமி:—அம்மணி அரசனென்னையழைத்துமிகவும் வாஞ்சையுள்ளவர்போற் சாந்தமனதுடன் க்ஷேமலாபம் விசாரித்துக் கொண்டிருந்து, சற்றுநேரம் பொருத்து உன் தங்கையாகிய இரஞ்சித பூஷணியின் ஆசையினால் மதிமயங்கி மனமயக்க முற்றிருக்கின்றேன். இத்தினம் அவளை என்னுடன் சுகித் திருப்பதற்கு அனுப்புவாயென்றனர். யான் அதனைமறுத்து அரசே! ஈதுலகியல்பிற் கொவ்வாதென பற்பலவித நியாய போதனை புகட்டினும் செவியிற் கொள்ளாமல், எவ்விதத்திலேனும், இரஞ்சித பூஷணியை எனக்கிசையச் செய்திடுகவென்றனர். அக்கால் எனதுளம்சீற்றமெய்தி, வேந்தே! ஈதனைத்தும்பூதலம்புரக்கும் புரவலர்க்கியற்கையல்ல, நீர்

மணிமகுடம் சிரசேந்தி செங்கோற் கரந்தாங்கி இராஜகிரீகம்புரியும் இறைவனென கீர்த்தியுற்றிருந்தும், அற்பசுகத்திற் கிச்சித்து ஆயுள் வரையினும் பழியும் பாபமும் தேடிக் கொள்வது நன்கல்லவென்றேன். மன்னன் சினந்து பேதாய்! யான் நின்தங்கையின்மீது விருப்புற்ருல் நீதடுத்துரை யாடுகின்றனையாவென கரத்திற்கட்கமேந்தி சிரந்துணிதுதுமென ஓங்கினர் யான்மனமிரண்டு, அடிமையின்மீது முனிவுறுதல் தர்மமன்றென கெஞ்சி அஞ்சிநிற்க ஆனல், அம்மாதை அதிதீவிரமாய் அனுப்புகவென்றனர். யானும் பிராணபயத்தால் சம்மதித்து வருகலாயினேன், ஐயோ இஃதென்ன அந்நீதம்! பரஸ்திரீகமனம் பரலோக நாசமன்ருே? சீதையை இச்சித்த ராவணன் வம்ஷத்தினருடன் ஆவியொழிந்து நாசமாய்ப் போயினதையுங் கவனித்துணர்கிலாரோ! அன்றியும் நாம் இருதிறத்தினரும் ஓரினமாயிருப்பின் குற்றமன்றென தரணியோர் புகழ்ந்துரைப்பதிருணமாயினும் புரிவித்திடுவோம். யாங்கள் சிங்களரும் நீங்கள் வடுகருமாயிற்றே, காண்போரிகழ்ந்து பரிகாசியாரோ, அம்மாதின் பாற் புகன்றிடில் அவளும் என்ன மதித்திடுவள், அவளோ! கற்புநிலை தவருத கன்னியாச்சுதே ஈதனைத்தும் நினைந்திடில் என்

அங்கம் துடிக்கின்றனவே, என்மணாளன் இவணிருப்பினும். அவரேனும் அரசனுக்குகந்த நன்மதிபுகன்று, கூடாவொழுக்கத்தையகற்றுவர். இத்தருணம், அவரும் அருகிலில்லையே இனியாது தீதுவிளையுமோவென மனந்துடித்து விசன மெய்துகின்றேன் இனி எவ்வாறுய்வோம்.

மிர்துபாஷிணி:—குமாரியாமி! இவ்விஷயத்தைக் கருதி விசனமுறாதே யான் எவ்விதமாயினும் அரசன் மனதிலுற்ற எண்ணத்தை மாற்றிவிடுகிறேன். ஆனால் இந்த சங்கதியை மாத்திரம் உன் மணாளனுக்குச் சொல்ல வேண்டாம், யாவரேனும் கேள்வியுற்றால், அவமானமும் ஆற்றொணாபழியும் பரிகாசமும் நேர்ந்திடும். இனி நீ விசனமின்றி வீட்டிற் சென்று, ஜாக்ரதையாயிருப்பாய்.

என, புகன்றவையுணர்ந்த குமாரியாமி கின்சிற்று மனதைரிய முற்றிடினும், "தடைக்கஞ்சா பாம்புக் கோராணையில்லை, சாந்தமில்லா மூர்க்கருக்கோர் தருமமில்லை யென்பதுபோல" இழிவுற்ற குணத்தினனாகிய கீர்த்திசிங்கனானவன் இரஞ்சிதபூஷணியின்மீதுள்ள காதலால் யாது தீங்கு விளைவிப்பானோவென மனமிரண்டு தனதில்லத்தைநாடிச் சென்றனள்.

இங்ஙனம் நிற்க, இராணியாகிய மிர்துபாஷிணி யானவள் கீர்த்திசிங்கன் முன்வந்து பிராணபதி! தமதுமதி இவ்விதம் சிதறுண்டற்குக் காரணம் யாது? இன்னும் சிறுபிள்ளைபோற் கண்ணுற்ற கன்னியர்மீது காதலுற்று பூதலத்தோரிகழ வசை தேடிக்கொள்வதுஉமக்கீனமன்றோ? உமது சுகானுபவத்திற்கு யானில்லையா? நீவிர். இத்தகைய அற்பகாரியங்களில் மனதைச் செலுத்திடில் சரியொத்த மன்னர்கள் மதிப்பரோ? ஐயோ மதிப்பும் மானமும் அகன்றிடுமே என் மனவருத்தமாய்ப் புகன்றவை வினவிய வேந்தன் புகல்வதாயினன்.

கீர்த்திசிங்கன்:—மாதே! நீ என்ன யாதேனும் கனவு கண்டெழுந்து வந்தனையோ? யான் அத்தகைய துர்க்குணசேஷ்டையாதும் புரிந்திலனே, அரசர்கட் கியல்பின்றிய காரியத்திற் பிரவேசித்தே னென்றனையே. மாநிலம் புரக்கும் மன்னர் தன்மனதிற் கிசைந்த மாதர்கள் எச்சாதியிற்ஜனித்திடினும் மணம் புரியலா மெனும் நீதிசாஸ்திர முணர்ந்திலையே.

மிர்துபாஷிணி:—சரி!சரி! நின்முதன் மந்திரியாகிய ஆலப்பனை நகரை விடுத்துச் சென்றபிறகு நீவிர் அவன் குடும்பத்தை கர்ப்பவசத்தின் சிசுவைத் தாய் காப்பதுபோல ஆதரிக்கவேண்

டுமன்றி, வேலிப யிரையழிப்பது போல அவன் மைத்துனியாகிய இரஞ்சித பூஷணியின் மீது காதலுற்று குமாரியாமியை வரவழைத்து நின் தங்கையை என்வசப் படுத்தா விடில் கொலைபுரிகுதுமென கட்கத்தை ஓங்குதல் காசினி புரக்கும் காவலர்க் கியல்பாமோ?

கீர்த்திசிங்கன்:—மாதே! என்ன மதியின்றி பாஷிக்கின்றனை! அவளென்ன பிறன்மனைவியா? கன்னிதானே. காதலுற்றவரை மணம்புரிய வேண்டியவளென கருத்திலெண்ணி குமாரியாமியை வரவழைத்து விசாரித்தேன். அவள் சம்மதியாமல் தடுத்துறை யாடினதால் யான் சமயத்திற் கேற்றவிதமாய் பயமுறுத்தினேனன்றி கொன்றுவிட்டேனா?

மிர்துபாஷிணி:—என்ன ஆச்சர்யம்? உலகினைக் கடவுள் காப்பர், ஊரினை அரசர் காப்பரெனும் நீதிசாஸ்திரத்தை எள்ளளவேனும் மதியி லுன்னுமல், அன்னிய வம்சத்தினராகிய சிங்களஜாதிப் பெண்மீது இச்சையுற்று அவ் வில்லத்தில் நாதனில்லா தருணம் இவ்வித துணிவெய்தியது துரைத்தனத்திற் கினமன்றே! பிராணபதி, நம் தேசத்தின் கன்னியை கள்வரினின்றும், காமுகரினின்றும் காத்துக் கற்பி னிறுத்தவேண்டு மன்றி,

நீரே காதலித்து கற்பழிக்கக் கருதிடில் மற்றவரஞ்சுவரோ? கவனிப்பீர்.

கீர்த்திசிங்கன்:—மாதே! யானென்றும் அவ்வித அநீயாயத்திற் பிரவேசிக்கவில்லையே, அவள் சம்மதியாததால் யான்என தன்பிற்கிணங்க வற்புறுத்தினுல் அவையனைத்தும் குற்றமாகுமா! அவ்வித திங்குபுரிபவனு யிருந்தால் குமாரியாமியை வரவழைத்து ஏன் கேட்க வேண்டும்! ஈதுணராமல் நின் பேதமை குணத்தினுல் கோபித்துக் கொள்ளுகிருய்.

மிர்துபாஷிணி:—பிராணபதி! யான் சிற்றமெய்திலேன். தனக்கொருத்தியிருக்க அந்நிய ஸ்திரீயின்மீது ஆசை யுறுவது நன்கல்லவென மொழிதலாயினேன்.

கீர்த்திசிங்கன்:—பெண்ணே! நன்குரைத்தனே யாதாமொருவருக்கும் அநேக மனைவியர் "அந்தரமகளீரெனும் கந்தர்வ ஸ்திரீகளினுஞ் சிறப்புற்ற அழகானந்த முகவஜீகர தேஜஸமைந்தவர்களா" யிருந்திடினும்தன்கருத்திற்கேற்ப வேறு பெண்கள்மீது காதலுறுவது ஆன்ம வியல்பன்றே? ஆயினும் அவர்களிச்சைக்கு அம்மாது சம்மதியாவிடினும் எவ்வித தந்திரம் புரிந்தாயினும் தமதெண்ணத்தை நிறைவேற்றி சுகித்திருப்பர். யான் அவ்விதமாய் வாதுபுரிந்தேனே! இரஞ்சித

பூஷணி சம்மதித்தாலாச்சுது இல்லாவிடில் மறந்து விடுவேன்.

மிர்துபாஷிணி:—சரி! சரி!! பாஷிக்கும்போதே யுமதுளத்தின் கருத்து நன்குவிளங்குவதாயின. இனி யான் யாதெனப் புகலுதும்? நீவிர் இரஞ்சித பூஷணியை மறந்திடினும் இச்சை வகித்து இடுக்க ணுற்றிடினும் மறுப்பவர். யாவருளர்?

## ஆசிரிய விருத்தம்.

சீரிலகு பூர்விக புண்ணிய வசத்தினால்
சிறந்தபுக ழாயிலகிடும்
சிவனருளால் ராஜயோ கத்துடன் ஜன்மித்து
சிங்கார வடிவமைந்து
தாரிலகு மாந்தர்கட் கினிமைசேர் வேந்தனென
சாற்றிடும் பெருமைவாய்ந்து
தாரணியை யொருகுடையி லாண்டிடும் மகிபனுய்
சமர்த்தா யிருந்துமென்ன
நேரிகு தர்மநெறி வழுவாத மன்னராய்
நேமிதனி லுய்வராகில்
நெடுநாட்க ளாயுலகில் தசரதன் போலவே
நேர்மையா யரசுபுரிவார்
பாரிலகு உத்தமர் கற்பிலகுங் கன்னியர்
பக்தருடன் வேதியர்க்கும்
பலதுயர் விளைத்திடும் மன்னர்கட் குலகினில்
பகவா னருள் புரிவரோ!

என, மணாளன்மீது வெஞ்சின முற்றவளாய் மனம் வெறுத்து மாளிகை யணுகுதலும். மன்னன் வியப்புற்று, இவளேன் நம்மீது இத்தகைய முனிவுற்றேகின ளென, யோசித்திடினும் குமாரி யாமி யானவள் இரஞ்சித பூஷணியை இவண ழைத்துவந்து, நம்காதல் தவிர்ப்பாளெனபோராவ லுற்றிருந்தனன்.

---

* இவண்—இவ்விடத்தில்.

## Scene 2.

இடம் மந்திரியின் மாளிகை.

கதாநாய்பகர்.

இரஞ்சிதபூஷணி குமாரியாமி.
குணரத்னம் ஆலப்பளை.

இங்ஙனம் நிற்க, இரஞ்சிதபூஷணியானவள் தனது தமக்கையாகிய குமாரியாமி அரண்மனை யணுகி இன்னுந் திரும்பாத தற்கு காரணம்யாது அம் மன்னன் யாதேனும் துன்பம் விளைத்துக் கொலைபுரிந்தனனோ வென மனவிசாரத்துடன் தாயைப்பிரிந்த சேயைப்போற் கண்ணீர்த் ததும் பக் கதறி யழுதுக்கொண் டிருக்கையில் சேடியர் மனதைரியம் புகன்று அம்மணி? நீ இத்தகைய துயருறுவதேன். மந்திரியின் மனையாளாச்சுதே யென மன்னனழைத்திடில் யாது தீங்கெய்தும் வீணிற் சஞ்சலமெய்தாதீர். நின் சகோதரி இன் னுஞ் சற்று நேரத்திற்குள் வருவார் அஞ்சே லென, அம்மாது நவில்வதாயினள்.

இரஞ்சித பூஷணி:—சேடியர்காள் நீவி ரிசைப்ப தாலென் சஞ்சல மகலுமா? அற்பமதிவாய் ந்த துஷ்ட அரசன்பாற்சென்ற என் சகோ தரிக்கு யாது துயருற்றனவோ அன்றி, என் மீதிலுற்ற காதல்போ லென் தமக்கையின்மீ

தெய்திய தா லழைத்தனனோ! துன்மதிவாய்ந்த மன்னனுக்கு குலநல மேது மானபிமானந்துறந்த மகா பாதகனுச்சுதே, கற்புக்கஞ்சி சம்மதியாவிடில் சிரசாக்கினை புரிந்திடினும் அவனை யாவர் தடுப்பவர், எமக்கும் துணைவரில்லை. அவனுக்கும் எதிரியில்லை யென்பதுபோ லுளத்திற் கருதினனே.

என, ஆற்ருெணு மனவிசாரத்தினுற் கண்ணீர்த் ததும்பக் கதறி யழுதுக்கொண்டிருக்கும் தருணம் குமாரியாமி வருகையைக் கண்ணுற்று பசுவைக்கண்ட கன்றைப் போல ஆனந்த பரவசமெய்தி, அக்கா! அரண்மனையிற் சென்றனையோ யாது விசேஷம் நிகழ்ந்தன விபரமாய்ப் புகலுகவென வினவுதலும், மனவிசாரத்துடன் சொல்வதாயினள்.

குமாரியாமி:—தங்கா யான் அரண்மனையிற்சென்று கீர்த்திசிங்கனைக் கண்ணுற்று யாது காரணமாய் அழைப்பதாயினீரென வினவுதலும், அத்துஷ்டன் விஸ்வாசபூனைபோற்சாந்தமனதமைந்தவனுய், அம்மணி! நின் மைந்தரும் சகோதரியும், க்ஷேமமா! நின் மணுளன் தமது க்ஷேமத்தைத் தெரிவிக்கின்றனரா? நீங்களனைவரும் சுகந்தானே! நீ மெத்த விவேகி குடும்பரக்ஷகி! யென, நன்மொழி

பாஷித்துக் கொண்டிருந்து, அம்மணி? யான் இரஞ்சித பூஷணியின் ஆசையால், ஆவி சோர்ந்து மதிமயக்க மெய்தினேன். ஆதலின் அந்தக் கன்னியுடன் சுகித்திருந்தால் எனதுயிர் நிலைக்குமென பற்பலவிதமாய்ப் பிதற்றலாயினன். யான் மறுத்து, அரசே! ஈதனைத்தும் அரசர்கட் கியல்பன்றென தடுத்துரையாடியதால் அம்மூர்க்கன் கிஞ்சிற்றேனும் பழிபாபத்திற் கஞ்சாமல் வெஞ்சினமுற்று, பேதாய்! இரஞ்சித பூஷணியை என்மனதிற் கிசையச் செய்யாவிடிலோ நின்றதலை துணிப்பேனென தன் கரத்திற் றுங்கிய கட்கத்தை யோங்கினன் யான் மனமிரண்டு அரசே? என்மீதித்தகைய முனிவுறுதீர் யான் இத்தருணமே சென்று என் தங்கைபாற் புகன்று அவள் சம்மதித்தால் அனுப்புகிறேனென்று தப்பித்துக்கொண்டு ஓடிவந்தேன்.

இரஞ்சித பூஷணி:—அக்கா? நீ யாதொன்றுக்கும் அஞ்சேல், எனது கற்புநிலைமைக்குக் கதிர்காமத்தையணுகிய கருணாகரன் காவலிருந்து காப்பாற்றுவர். அன்றியும், நாம் அரசன்பாற் செல்லாவிடின் அவனே இங்ஙனம்வருவான் அத்தருணம் யான் அவனுக்கு அநேகவித நீதிவாக்கியங்க ளனைத்தும் போதி

த்துஅத்துஷ்டனின் துர்க்குணத்தை யகற்றி அவன் மனோகர்வத்தினாலுற்ற மமதை யனைத்தும் பருதியைக் கண்ணுற்ற பனிபோற் பறந்து வெட்கித்தலை குனிந்து விசனத்துடன் அரண்மனைக்குச் செல்லும்படியாய்ச் செய்துவிடுகிறேன்.

குமாரியாமி:—என தன்பிற்கிசைந்த சகோதரி! நீ புகல்வது விவேகிகட் குவமையன்றி, அத்தகைய அவிவேக அஞ்ஞான அற்பமதி வாய்ந்த அறிவிலிய துர்க்குண வேந்தனுக்கியலாது. அன்றியும் அவன் அங்ஙனம் வந்திடில், பேதமைகுண மமைந்த பெண்கள் என்ன சாமர்த்தியஞ் செய்வோம்? அவனோ ஜீவகாருண்ய மியன்றதியன். பிறர் வருத்த முணராப் பேயன். நியாயநுட்ப நீதிசாஸ்திர நூலுணரா பாதகன் மானுபிமானம் விடுத்த மனோ கர்வி. பிறர்மனை புகாமை யறமெனத் தகும் என்பதைக் கிஞ்சிற்றும் கருத்திலுன்னுத காதகன் பதிவிரதா தர்மங் கவனித்துணராமல் பலரையும் இச்சிக்கும் பஞ்சமா பாதன் கஞ்சிக்குக் காற்றாய் பறந்து, கண்டி நகரில் அண்டிப் பிழைக்கவந்து, புதுவாழ் வெய்திய விபரீதத்தால் அநியாயம் அக்ரமம் புரியும் துர்க்குணனச்சுதே அத்தகைய பாதகனுக்கு நீ! நீதியோதுதல் பூதலம் பொ

றுக்குமா? மாதர்கள் பூஜிதம்பெறும், ஓதரும கீர்த்திவாய்ந்த கற்புக் கரசியே.

இரஞ்சிதபூஷணி:—தமக்கா! நீ நவில்வ துணர்ந்த என துளமானது நடுக்கமெய்தி பயங்கர மாய்த் தோற்றுதே இனி எவ்வாருலகிலுயிர் தரிப்பது? மானம் போவதைவிட மரண மெய்துவது நன்கன்றே?

குணரத்னம்:—அம்மா! நீங்களிருவரும் இவ்வித மாய் ஒருவர்முகத்தை யொருவர்பார்த்துக் கொண்டு மனவிகார மெய்வதுதா லாயபய னென்? இன்னுஞ் சற்றுநேரம் வரையினுங் காலதாமதம் செய்வீராகில், அற்பமதிவாய் ந்த அக்ரமத்தை பந்தத்வம்போற் பாவித்து பழிபாபத்திற் கிணங்கிய வேந்தனல் விப ரீத ஆபத்திற் சிக்கி, அலேச்சல் படுவிர். ஆகையால், இனி யாதொன்றுங் கவனித் திடாது, சப்ரகாமத்திற்குச் சென்றிருக்கும் உனது அக்தானே அதி தீவிரமாய் வரவ ழைப்பீராகில் மிகவும் நலமா யிருக்கும். ஏனெனில், அவரோ முதன்மந்திரியா யிருப் பதினல் அரசனுக்கு யாதேனும் நன்மதிப் புகன்று மறுத்திடுவர். அன்றியும் ஆண் பிள்ளை யில்லாவீடு அலகை குழிகாடொக்கு மன்றே? ஆதலின் காட்டுக்குச் சிங்க மிருப் பதுபோல வீட்டுக்கு ஆண்பிள்ளை யிருந்தால்

யாதொரு ஆபத்தும் நேர்ந்திடாமற் காப் பாற்றுவர். இத்தருணம் அவரில்லாமையினு லன்றோ உமக்கித்தகைய துன்ப மெய்தின.

குமாரியாமி:—தங்கா சுயம்பாகியெனும் சமயற் காரனுகிய குணரத்னம் புகன்றவை யுண்மை யே. சமயத்திற் கேற்றவிதம், நன்மதி போ திப்பதாயினன். ஆகையால், காலஹரணம் புரியாமல் அதி தீவிரமாய் உனது அத்தான் இவண் வருகவென, ஓர் நிருபமெழுதினு லும் யாரிடத்திற் கொடுத்தனுப்புவது? மற் றவர்களானுல் வெளிக்கு வந்துவிடும். இந்த இரகஸ்யம் யாவர்கட்காயினும் தெரிந்து அர சன் கேள்வியுற்றுல் ஆபத்தெய்துமன்றோ ஆகையால், இவனையே அனுப்புவோம்.

இரஞ்சிதபூஷணி:—ஆம்! ஆம்!! இவன்தான் மிக வும் நல்லவன் மர்மத்தை வெளிவிடாமல் அத்தானை அழைத்து வருவான்.

குமாரியாமி:—சரி! அப்படியானுல் மெத்த] சந் தோஷம்.

குமாரியாமி, தன்மணாளனாகிய, ஆலப்பனைக்குக் கடிதமெழுதுவது.

## ஆசிரிய விருத்தம்.

### சீட்டுக் கவி.

தேவரீ ரென்பிராண நாயகர் திருவடி
    தெரிசித்து திக்கு நோக்கி
தெண்டஞ் சமர்ப்பித்து நின்மனையாளன்புடன்
    தெரிவிப்ப தென்ன வென்றால்
ஆவலா யென்தங்கை தோழியுடன் பூங்காவில்
    அன்புடன் சென்றிருக்க
அரசனவ ணேகியம் மாதுதனை இச்சித்து
    அனுப்பிய தூதர் வந்து
காவலன் சங்கதி கன்னிமுன் புகலவும்
    கடுஞ்சினத் தாற் றூரத்த
கபடமா யெனையழைத் துன்தங்கை யெந்தனின்
    காதல் தீர்த்தா லெனதுயிர்
பூவுலகில் நிற்குமென வேண்டினான் யானும்
    புகட்டினேன் மதி யனைத்தும்
பொல்லாத பாவியெனைகொல்வதற் கெண்ணினான்
    புறப்பட்டு வருகுவீரே.

இங்ஙனம்,

தமது பத்தினியாகிய,

குமாரியாமி.

குமாரியாமி:—அப்பா! குணரத்னம்! தற்சமயம் நீ தானெங்கட்கு சகோதரனென மதித்தோம் இந்த இரகஸ்ய மர்மத்தை எவர்கட்கும், புகலாமல், அதி தீவிரமாய் சப்ரகாமத்திற் சென்று, என் மணாளன் கரத்தில் இந்நிரு பத்தைத் தந்து அழைத்து வருவாய்.

என புகன்று அவனுக்கு அறுசுவை பதார்த்த திவ்யான்ன சுகபோஜனமளித்து, கட்டுசாதமும் நிருபமும் அவன் கரத்திற் றந்து, அப்பா! நீ சப்ர காமத்திற்குச் செல்லுந் தருணம் யாவரேனும் கண்ணுற்று, எங்ஙனம் செல்கிறாயென வினவி டில் உண்மையை மறைத்து உபாயமாய் வேறு விதமாய் போக்குக் காட்டித் தந்திரமாய்ச் சென் றுக் காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு வருவா யென்றனள்? அவனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து கண்டிநகரை விடுத்து கானக மார்க்க மாய் நடந்து, சப்ரகாமத்தில் வந்து ஆலப்பளை யைப் பணிந்து மஹாப்ரபு! எஜமானி இந்நிருபத் தை நும்பாற்றந்து அதிவிரைவாய் அழைத்து வருகவென்றனர், ஆனல், இவற்றில் வரைந்துள தாய சங்கதி யனைத்தும் வெளிவிடாது மர்ம இர கஸ்யத்தை மனதிற்றானே கவனித்துணர்வீரென கண் சைகைக் காண்பித்தலும் ஆலப்பளை வியப் புற்று ஆ! இஃதென்ன ஆச்சரியம் சாக்ஷியாய்த் தோற்றுகின்றனவே, இத்தகைய மர்ம சங்கதி

யாதுளதென, ஓரிடத்திற் றனிமையாய்ச்சென்று கடிதக் கருத்தைக் கவனித்தோர்ந்து கண்களில் அருவிபோல் நீர் சொரிய மனக்கிலேச முற்றவ னாய்ச் சற்றுநேரம் யோசித்து, அடா பாபி! கீர்த்திசிங்கா! ஆதியிலுன் சுயதேசத்தை விடுத் துக் கண்டி தேசத்திற் பிழைக்கவந்த காலத்தில் யான் உனக்கு எவ்வளவு உதவிசெய்தேன். அந்த பேருதவியை மறந்து எங்கட்கே இடுக்கண் புரிய எண்ணினையன்றோ? அடா துரோகி நீ யநுபவித்த துன்பத்தை மறந்து மனோகர்வியானையன்றோ பாதகா? யானுனக்கு எவ்வளவோ நன்மைபுரிந்து நகரினைப் புரக்கும் நராதிபனாய் நற்பதவியி லமர்த் தினேனே அதற்காகவா சத்துருவைப்போன்ற துர்க்குண மமைந்து இத்தகைய அற்பகினைவுடன் யானில்லாத தருணம் கற்புநிலை தவறாத என் மைத்துனியை இச்சித்துமன்றி, என் பத்தினி யையுங் கொல்லத் துணிந்தாய் காதகா! சரி! அடடா! இன்னதென்றறிகிலாத உன்னைக் காப் பாற்றி, தேசாதிபதி யாக்கினால், அதுதானா செய் வாய் இன்னும் பலவித கொடுமைபுரிந்து என்னை யும் கொல்லத் துணிவாயன்றோ?

## விருத்தம்.

வல்லியங் கனைக்கண்டஞ்சி மரந்தனி லேறும் வேடன், கொல்லிய பசியைத் தீர்ந்து ரக்ஷித்த குரங்கைக் கொன்றான், நல்லவர்க் குதவிசெய் தால் நலமது மிக்க தாகும், புல்லர்கட் குதவி செய்தால் உயிர்தனை போக்குவாரே.

என்னுந் தன்மையாய் உத்தமர்கட்குச் சகாயம் புரிந்திடில் எத்தேச காலமும் மறந்திடாமல், ஆபத் தெய்திடினும் ஆதரிப்பர். ஆனால் துர்க்குணத்தினர்க்கு உதவி புரியின் ஏற்கெனவே தீது விளைத்துக் கொல்லத் துனிவரென்பது உண்மையாயிற்றே. என்ன ஆச்சரியம்? இட்டின மரத்திற்றுனே கூர்பார்க்குந் தன்மை போல நம்மாற் ஜீவித்து நராதிபனான மனோகர்வத்தினால் நம்மீது இவன் சமர்த்தைதக் காண்பிக்க லாயினர்போற் காண்கின்றனவே நல்லதிருக்கட்டும். இன்னும் ஒரு மாதத்திற்குள் இவன் இராஜரீகத்தை இழந்தும் பழயபடியே அன்னவஸ்திரத்திற்கு அலைச்சற்பட்டு அழிந்துவிடாமற் போவானாகில் யான் என்ன சிங்கள வம்ஸத்தினனு? என்பெயர் ஆலப்பளீயா? என்னைப்பெற்றவள் பதிவிரதையா? என் பத்தினியும் உத்தமியா பாரடாவென சபதமிட்டு இவ்விபரீத அநியாயத்தை வெளிற் சொன்னால் வெட்கக் கேடென தலைகுனிந்த வண்ணமே கண்ணீர்த் ததும்பத் தனக்குத்தானே சொல்லிக் கொண்டு தன்னைத் தேற்றுவா ரில்லாமையால் ஆறுரு விசனமுற்றவனுயினும் இனி தாமதித்தால் ஆபத்தெய்துமென வெளியில் வந்து குளிர்ந்த ஜலத்தினால் முகங் கழுவிக்கொண்டு, அங்ஙனமிருந்த உத்தியோகஸ்தரிடமும் மர்மத்தை புகலாமல் யான்ஓர் கார்யார்த்தமாகஅரண்மனை யணுகவேண்டுமென, அவர்களிடம் தந்திரமாய்ப்

புகன்று சமயற்காரனாகிய குணரத்னத்தை அழைத்துக்கொண்டு வாய்வேக மனோவேகமாய்ச்செல்லும், அஸ்வங்கள்பூட்டிய தேரின்மீதமர்ந்து சப்ரகாமத்தை விடுத்துக் கண்டிமாநகர்மனுகி, தமது மாளிகையில் வந்தனன். இவன் வருகையைக் கண்ணுற்ற குமாரியாமி ஓடிவந்து பிராணபதி யான் வரைந்தனுப்பிய நிருபத்தை வாசித்தீராவென, கண்ணீர்த் ததும்பக் கதறியழுதனள்.

ஆலப்பனே:—குமாரியாமி! நீயாதும் மனத்துயரெய்தாதே. அந்தக் கீர்த்திசிங்கனுக்கு அழிவு காலம் வந்துற்றதால் இத்தகைய துர்செய்கை புரிய மனதிலுன்னி மதிமோசமாயினன். ஆயினும், அவன் கெட்டான். இனி அவனுக்கு இந்நகரில் இராஜரீகம் ஏது? மந்திரியைப் பகைத்த மன்னர்களுமுலகிலுளரோ? யான் துனிந்தால் அவனெம்மாத்திரம்! இனி அவனை சும்மா விடக்கூடாது. கொன்றாலன்றி துயரகலாது. இத்தருணம் நமக்கிடுக்கன் புரிய மதித்தவன் குடிகட்கும் பற்பலவிவ குரூரபயங்கர கொடுமை புரிந்து கண்டிமாநகரத்தைக் கானகமாய்ச் செய்வான்போற் காண்கிறது. ஆகையால், அவனுடன் யான்நேரிற்போய் யாதும் பேசலாகாது சிலசேனை சைன்யங்களைத் துணை சேர்த்துக்கொண்டு வந்து அவனைச் சித்ரவதை செய்யவேண்டும்.

குமாரியாமி:—பிராணபதி! அந்தத் துர்குணனாகிய கீர்த்திசிங்கனைத் தூணிற் பிணைத்து கட்டி விட்டு, அவன் சதையை அறுத்து அறுத் தெரிந்து சித்ரவதை செய்தாலும் தோஷ மணுகாது, ஐயோ அந்தச் சண்டாளன் இராஜனானதும்போதும், இந்நகரவாசிகளின் பாடு எமதண்டனையாய் விட்டதே ஆ! ஹா? என்ன ஆச்சரியம் என்னை அரண்மனையில் வரவழைத்து என்னென்ன அநியாய வார்த் தைகளைப் பாஷித்தனன் யாதோர் தெய்வா தீனமாய்த் தப்பிப் பிழைத்து உமது கண் முன் உயிருடனிருக்கின்றேன். சற்று தாம தித்தால் என் சிரசைத் துணித்திருப்பான். இதை நினைக்குந் தோறும் பயங்கரமா யிருக் கின்றன.

ஆலப்பனோ:—பெண்ணே! உமக் கித்தகைய ஆபத் தெய்தியதற்குக் காரணமென்ன.

குமாரியாமி:—பிராணபதி! என் தங்கை இரஞ்சித பூஷணியானவள் தனது சேடியருடன் ஓர் நாள் நந்தவனத்திற்குச்சென்று மலர்பறித் துக் கொண்டிருக்கையில், பார்த்துவிட்டா னும் அதனால் மதிமயக்கமாய் விட்டதென்று சில தூதரை யனுப்பு அழைத்துவரும் ஆக் ஞாபித்தனன் அதற்கென் சகோதரி வெஞ் சினமுற்று வேந்தனாலெனக்கென்ன! வீட்

டைவிட்டு ஓடிப்போவீர் நாணமின்றிய துஷ்டர்காளென, துரத்திவிட்டனள் மறுதினம் அருணோதயத்திலென்னை யழைப்பித்து குமாரியாமி நின்தங்கையை என்னுடன் சுகித்திருக்சச் செய்வாயென்று வற்புறுத்தினன் யான் சீற்றமெய்தி இனி இத்தகைய அற்பவார்த்தை என்முன் பாஷித்திடாதீரென பற்பலநீதி வசனங்களுரைத்தேன். ஆ! அப்படியாவென, ஆக்ரமித்துப் பற்கடித்துக் கோபாக்கினி ருத்திரன்போற் சினந்து நின் தங்கையை இங்ஙனம் அனுப்புகின்றனையா? நின்சிரசை வெட்டி யெறியவாயென கரத்திற்றாங்கிய கட்கத்தை யோங்கினன், யான் பயந்து சமயத்திற் கேற்றவிதம் சம்மதித்தாற்போல ஆகட்டுமென்றுசொல்லி தந்திரமாய் தப்பித்துக்கொண்டு வந்தேன் என் தங்கையோவெனின் யாது நீதுவிளையுமோவென திகிலுற்றவளாய் திகைத் திருக்கின்றனள். இனி நீர் அவளுக்குத் தைரியம் புகலாவிடில் பிராணன் வைத்திருப்பது அரிதென் றுணர்வீர்.

ஆலப்பனை:—அம்மா! இரஞ்சிதபூஷணி! இங்ஙனம் வா! நீ யேன் மனவருத்த மெய்துகின்றனை? யான் அதற்காக யாதேனும் ஓர் உபாயந் தேடாமற் போவேனோ? யான் நினைத்தால்

அவனை ஒரு நாழிகைக்குள் அழித்துவிடே னே? ஆனல், சமயம்பார்த்துக்கொண்டிருக் கின்றேன் அஞ்சவேண்டாம். குமாரியாமி இனி இதைக்குறித்து நாம் வீணெண்ணங் கொள்வதினற் பயனில்லை. இத்தருணமே யான் கொளும்பு தேசத்தின் ஆங்கிலேய ரிடம் சென்று, இவனுடைய துர்க்குண சேஷ்டையைப்புகன்று அவர்களை அழைத் துக் கொண்டுவந்து இவனை கொன்றுவிட் டால்தான் உத்தமமாயிருக்கும்.

குமாரியாமி:—பிராணபதி நீவிர்புகன்றவை யுணர்ந் திடில் வெகுவேடிக்கையாயிருக்கின்றனவே, முன் பின் பழக்கமின்றிய ஆங்கிலேயரின் மனக்குறிப்புணராமல், நமது அவசரத்திற் கியன்றவிதம் சென்றால், அவர்களும் அதற் குச் சம்மதித்தாலாச்சுது அவ்விதமின்றிநம் மையே திருப்பிக்கொண்டால் நாமென்செய் வது, பிறகு என்னவிளையுமோ? ஏதாய்முடி யுமோ? இந்த சங்கதி கீர்த்திசிங்கனுக்குத் தெரிந்துதானல் அவனென்ன தீதுபுரிவா னே? ஆகையால் "வாய்த்தவீடும் போய், அடுப்பு நெருப்பும்போய்" மயங்கத்தக்க யோசனைசெய்தால், அவனியோர் பழித்தற் கேற்ப ஆபத்தெய்துமன்றே ஆனல், என் மனதிலோர் ஆலோசனை தோற்றுது, அதெ

ன்னவெனின், இத்தகைய துர்க்குணத்தி னன் அரசுபுரியும், இந்நகரத்தைவிடுத்து மறுநகரேகி ஜீவித்திருப்பதே உத்தமமென் றெண்ணுகிறேன்.

ஆலப்பனே:—அடடா! என்ன ஆச்சர்யம்? "கொசுவுக்குப்பயந்து கோட்டையை விட்டோடியது போலவும், எலிக்கு பயந்து வீட்டைவிட்டோடியதுபோலவும், இந்த அற்பனுகிய கீர்த்திசிங்கனுக்கு பயந்தா நாம் இந்நகரத்தைவிடுத்து மறுநகரம் சுகங்கேடிக் கொண்டால் நகரவாசிகட் கென்னசெய்வது யோசனையின்றி பாஷிக்கின்றனேயே. தர்மகுணம் எனக்கு நன்றுய்த்தெரியும். இனியான்அவர்களை எவ்விதமாயினும் அழைத்துவந்து கீர்த்திசிங்கனை தொலைத்துவிடுகிறேன், பெண்ணே நமக்கு கெடுதிசெய்ய நினைந்த அந்தத் துர்க்குணனை சித்ரவதைசெய்துக் கொல்லாமற் சும்மாவிடக்கூடாது.

என, புகன்றவையுணர்ந்த குமாரியாமியும் சரி! அவ்விதமே செய்குவீ ரென்றனள் அப்பால், ஆலப்பனே தனது பிள்ளைகளை அருகிலழைத்து கண்மணிகாள்! யான் சென்றுவருகிறேன் பத்திரமாய் உமது தாயாரைவிடுத்து வெளியில் வருகாமல் வீட்டிற்றுனே விளையாடிக் கொண்டிருப்பீ ரென, அவர்கள் எமதன்பிற்கினிய தந்தையே!

நீரென்னஒருமாதமாய் வீட்டிற்றங்காமல் ஊரெல்லாம் சுற்றிக்கொண்டு வருகிறீர். இவ்வித அவசரமாய் எந்ததேசத்திற்கு பிரயாணமாகலாயினீர். யாங்களும்உம்முடனே வருகிறோம். அழைத்துச் செல்வீரென்றனர். ஆலப்பளீ ஆனந்தபரவசமடைந்து, அப்பா! புத்திரர்களே யான் லங்கைக்குப்போய் வருகின்றேன். நீங்கள் இங்குதானே இருப்பீரென்க. அந்தச்சிறுவர் பேராவலுடன் தந்தையே நீர் இலங்கைக்குப் போவதால், அந்த ஊரில் சைனாப்பதுமைகளும் பீங்கான்பொம்மைகளும், இன்னும் விதவிதமான சீமைசாமான்களு மிருக்கும் அவைகளெல்லா மெங்கட்கு வாங்கிக்கொண்டு வரவேண்டு மென்றனர். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற ஆலப்பளீயும் அவ்விதமே உமக்கிஷ்டமான பொருள்களனைத்தும் வாங்கிக்கொண்டு வருகின்றேன். நீங்கள் தினந்தோறும் வித்யாசாலைக்குச் சென்று, கல்வி கற்று நல்ல பிள்ளைகளென்று உலகத்தினர்மெச்சுந் தன்மையாய் அறிவிற்சிறந்தவரா யிருப்பீரென்று ஆசீர்வதித்து, தனதுபத்தினியாகிய குமாரியாமியைப் பார்த்து பெண்ணே! யான் சென்று வருகிறேன். நீ யாதொன்றுக்கும் அஞ்சேலென தைரியம் புகன்று, இரஞ்சித பூஷணியை அழைத்து, அம்மணி! யான் வருகிறவரைக்கும், யாதொரு மனவருத்தமுமின்றி வீட்டைவிட்டு வெளியில் செல்லாமல் ஜாக்கிரதையா யிருப்பாயம்மாவென நன்

மொழிபுகன்று, அவர்கள்பாற் சிலவுபெற்று நகர வாசிகள் கண்ணுருவிதமாய் தான்வந்த சங்கதி யாதொருவருக்குந் தெரியாமல் வெகு தந்திர மாய் கண்டிமா நகரத்தைவிடுத்து கானகமார்க்க மாய்க் கொளும்பு தேசத்தை நாடிச் சென்றனன்.

## Scene 3.

இடம். அரண்மனை.

### கதாநாயகர்.

| | |
|---|---|
| கீர்த்திசிங்கன். | திசாநாயகன். |
| தூதுவர்கள். | முள்ளிக்கோடை. |

இங்ஙனம் நிற்க, கீர்த்திசிங்க மஹாராஜனுன தனது அன்பிற்கிசைந்த இரஞ்சித பூஷணியைக் குமாரியாமி அழைத்து வருவாளென வழிபார்த்திருந்தும் வரக்காணுமையால் மனவிசாரமுற்று அந்த அழகானந்த தேஜஸமைந்த சிங்களப்பெண் எத்தினம் வருவாளென மஞ்சத்திற் சயனித்து கண்ணுறக்கமின்றி சித்தம் மெலிந்து அன்னம் புசியாமலும், நித்திரைப் புரியாமலும் மனமயக்கமாய் மூன்றுநாள் வரையினும் பித்தனைப்போற் பிதற்றிக் கொண்டிருக்கையில், ஓர்நாள்மெல்லென எழுந்து, ஸ்நானபான நேமநிஷ்டையாவும் புரிந்து ஆடையாபரண சிங்கார அலங்கிர்தனுய் மணிமகுடஞ் சிரசிற்சூடி செங்கோலைக் கரத்திற்ருங்கி மந்திரி பிரதானிபருடன் இராஜரீகம் புரியுந் தருணமும் இரஞ்சித பூஷணியின் நினைவை மறவாதவனுகையால் அந்தக் கன்னிகைத் தனது கண்முன் நிற்பதுபோலத் தோற்றுவதும் மறைவது

மா யிருப்பதால், மனமயங்கி பித்தனைப்போற் பிதற்றிக்கொண்டு தனதுஅருகிலிருக்கும் அமைச்சனை வினவுதலாயினன்.

கீர்த்திசிங்கன்:—என தன்பிற்கிசைந்த மந்திரியாகிய திசாநாயகா? என்ன ஆச்சர்யம்? குமாரியாமி தனது தங்கையை இவண் அனுப்புதுமெனஉறுதிவாக்கியம் புகன்றேகினளே யாது காரணத்தா லின்னமும் அனுப்ப வில்லை. அன்றியும், அந்த இரஞ்சித பூஷணியின் ஆசை எனதுளத்தைத் தகிக்கச் செய்துப் பிராணனை வருத்துதே இன்னும் தாமதித்தால் நலமோ? 'உயிர் நீங்கினபின் அறுசுவைப் பதார்த்த திவ்யான்ன சுகபோஜனம் படைப்பது' போல, யான் மதன் கணையால் மனமயங்கி மரணமுற்றபின் வந்தாலென் செய்வது, ஐயோ! இன்னமும் வரவில்லையே சரி! சரி!! பொய்மொழி பாஷித்துப் போயினளோ?

திசாநாயகன்:—அரசே! குமாரியாமியை அற்பமாம் மதித்திடாதீர் எத்தருணமும் பொய்மொழி புகலாள். யாதேனும் அசந்தர்ப்ப முற்றது போற் காண்கிறது யாவற்றையும் கவனித்தன்றோ பேசவேண்டும். ஆதலின் அம்மாதினிடம் தூதர்களை யனுப்பி இவளழைத்து வந்து விசாரித்துக் கொள்வோம்.

என, நவின்றமையுணர்ந்த கீர்த்திசிங்கராஜன் சற்று நிதானித்து, மந்திரி! நீர் சொல்வதும் உண்மையே. ஆகையால், உமது கருத்தின்படியே தூதரையனுப்பி இரஞ்சித பூஷணியை உடனே அழைத்துவரும்படி ஆக்ஞாபிப்பீரென திசாநாயகனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து, சில தூதரை யழைத்து அடா நீங்கள் இத்தருணம் முதன் மந்திரியாகிய ஆலப்பளேயின் வீட்டிற் சென்று இரஞ்சித பூஷணியை அனுப்புகிறேனென்று அரசன்முன் சொல்லிவிட்டுப் போன குமாரியாமியின் மனக்குறிப்பைத் தெரிந்துக் கொண்டு வருவீரென்றனன். அவர்களும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து அரண்மனையை விடுத்து குமாரியாமியின் முன்வந்து வினவுதலாயினர்.

தூதுவர்;—அம்மணி! நீர் உமதுதங்கையை அழைத்துக்கொண்டு வருவதாய் அரசன்முன் புகன்றுசென்றீராம். இதுவரையிலும் தாமதமேனென வினவுதலாயினர்; யாது காரணமோ தெரிகிலோம்.

என, தூதுவர்கள் புகன்றவைக் கேள்வியுற்ற குமாரியாமியானவள் அவர்களைப்பார்த்து அப்பா யான் அரசன்பாற் புகன்றதுண்மையே யன்றி பிசகல்ல. ஆகினும், யானென் செய்குதும் யான் இங்கு வருவதற்குள் அம் மாது எங்ஙனமோ

ஓடிப் போயினள். இந்நகர் முழுதும் சுற்றி சுற்றி அலைந்து தேடிப் பார்த்துங் கண்ணுறுமற் கவலை யுற்றிருக்கின்றேன், இருந்தாலன்றோ அனுப்பு வேன். காணமற்போன கன்னியைக் குறித்து வீணிற் சஞ்சல மெய்துவதா லாயபயனென்? நுன் மன்னன்பாற் சென்றிச்சங்கதியைப் புகலுக வென் றனுப்பினள். அவர்களும் அவ்விதமே நன் கெனச் சம்மதித்து அரண்மனை யணுகி அரசன் பாற் குமாரியாமி புகன்றவை யனைத்தும் விபர மாய் மொழிந்தனர். அவ் வார்த்தையைக் கேள் வியுற்ற வேந்தன் மதன்வாளினால் மனந்திகைத்து மதிமயங்கி, ஆ! ஹா!! ஐயோ! அவள்மேற் காத லுற்றுகலங்கும்படி யாயிற்றே முன்னமே தெரிந் திருந்தால் கைப்பிடியாய்ப் பிடித்திழுத்துக் கொண்டுவராமல் விட்டு விடுவேனோ! இனி என் செய்வது? ஆசையுற்ற என்னை மோசஞ்செய்து ஓடிவிட்டனளே, நல்லதிருக்கட்டும். அத்துன் மார்க்கியின் சிரசைக்கொய்து அவள் வம்சத்தின ரையும் நாசஞ்செய்யாமல் விடுவேனோவென, பற் களை நெறநெறவெனக் கடித்துமீசை துடித்திடும் படியாய்க் கர்ஜ்ஜித்துத் தூதரை யனுப்பி முள் ளிக் கொடையை வரவழைத்துச் சொல்வதா யினன்.

கீர்த்திசிங்கன்:—மந்திரி! பார்த்தனையா? குமாரியாமி செய்த நயவஞ்சக மோசத்தை.

முள்ளிக்கோடை:—அரசே! யாது விசேஷம்? உண்மையை யானென்றுங் கவனித்தி லேனே.

கீர்த்திசிங்கன்:—இனி கவனிப்பதென்ன சிங்களச் சிறுமியின் வஞ்சகத்தை நினைந்திடில் என் மனம் தகிக்கின்றனவே.

முள்ளிக்கோடை:—மாநிலம் புகலரும் கீர்த்திவா ய்ந்த மஹாராஜ ராஜேஸ்வரா! நீவிர் இத்த கைய சீற்றமெய்துங் காரணம் யாதோ? யானே சந்தேக மெய்தலாயினேன். ஆக லின், நிகழ்ந்தவை யாதோ? முனிவுறுமற கூறுமின்.

கீர்த்திசிங்கன்:—நிகழ்ந்தவை என்ன மோசந்தான். ஆ! ஹா!! மந்திரி உலகிற் ஜனித்த மாந்த ருள் குமாரியாமியைப்போற் குரூர வஞ்சக ருளரோ? என்ன ஆச்சரியம்? அடடா! இரஞ்சித பூஷணியை எவ்விதமாயினும் அனுப்புகிறே னென ஆசைவார்த்தைச்சொ ல்லி என்னை கார்த்திருக்கச் செய்து விட்டு மாளிகையிற் சென்று அந்தப் பெண்ணை மறைத்து வைத்துக்கொண்டு எங்ஙனமோ ஓடிப்போயின ளென தூதர் பாற்பொய் மொழி புகன்று அனுப்பிவிட்டனள் பார்த் தனையா? இனி அவளைச் சும்மாவிடலாமா? இத்தருணமே பிடித்திழுத்து வந்து தலை

யைத்துணிக்காவிடில் யானென கீர்த்திசிங்க ராஜனு நல்லதிருக்கட்டும்.

முள்ளிக்கோடை:—அரசே! சற்று நிதானிப்பீர். யாதொன்றையும் தீர விசாரியாமல் செய்வது சரியல்ல உண்மையை நன்றாய்க் கவனித் துணர்வோம். ஆலோசியாமல் அவசரப்பட்டால் ஆபத்தாய் முடியும்.

கீர்த்திசிங்கன்:—இனி என்ன ஆலோசனை அவனை இழுத்துவந்து சிரசாக்கினை செய்வதுதான்.

என, கோபாக்கினி ருத்திரன்போற் சிற்றமெய்திய மனத்தினனாய்ப் புகன்றவை யுணர்ந்த முள்ளிக்கொடைமனமிரண்டுந்திகிலடைந்து அப்பப்பா! இவனென்ன முனிவிற் காளியை நிகர்த்த மூர்க்கனு யிருக்கின்றனனே. இனி எது ஆலப்பனையின் குடி முழுகிப்போய் விட்டதற்குச் சந்தேக மன்றெனினும் அருகிலிருக்கும் நமக்கும் ஆபத்தெய்துமென பயந்து, தன திருகரத்தையும் சிரமேற் குவித்து, அவனியோர் புகலருங் கீர்த்தி வாய்ந்த அரசர்க்கதிபதியே தமது திருவருு எவ்விதமாயின் தடுப்பவர் யாவருள ரென சமயத்திற் கேற்றவிதமாய் முகஸ்துதி செய்தனன். பழி பாவத்திற் கஞ்சாத பாதகனாகிய கீர்த்திசிங்கன் திரிபுரதகனன்போற் கோபத்தினாற் சிரித்து நல்ல திருக்கட்டுமென மீசையை முறுக்கிக்கொண்டு வீராவேசமா யிருந்தனன்.

## Act 3. Scene 1.

தேசம் சிலோன்.

### கதாநாயகர்.

ஆங்கிலேயமந்திரி, சேவகன், ஆலப்பளை.

இங்ஙனம், கண்டி நகரிற் ஜீவிக்க வந்து யாதோ பூர்விக புண்ணிய வசத்தினுல் இராஜாதிபதியாய் அரசுரிமை புரியும் மஹா கர்வியாகிய கீர்த்திசிங்கன் நினைவு இவ்வித அநியாய விபரீத சேஷ்டையா யிருக்கையில், அவனுடைய முதன் மந்திரியாகிய ஆலப்பளையானவன் தனது மைத்துனியின் மீது காதலுற்றது மன்றி தன் பத்தினியையும் கொல்லத்துணிந்த பாதகனை இத்தருணத்திலேயே இங்கிலீஷ் துரைத்தனத்தாரால் வெல்லும்படிச் செய்து, கண்டியை ஆங்கிலேயர் வசப்படுத்த வேணுமென ஆவலுற்றவனாய் மாக்ஷிமை தங்கிய சிலோன் தேசத்தைச்சேர்ந்த கொளும்பு நகரிலிருக்கும் கவர்ணர் கச்சேரியில் வந்து, அங்ஙனம் காவலிருக்கும் சேவகனுக்கு வந்தனம் புரிந்து ஐயனே யான் கண்டிமா நகரத்திலிருந்து வந்தேன். துரையவர்களைக் காணவேண்டுமென சேவகனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து கச்சேரியிலிருக்கும், ஆங்கிலேய மந்திரியின் பாற் புகல, தர்மகுணம் வகித்த அம்மஹானுபாவர் மிகவும் தயாளமுடன் ஆலப்பளையை அருகில் வரவழைத்து வினவுதலாயினர்.

ஆங்கிலேயமந்திரி.—ஐயா! நீர் யாவர்? நின் நாமதேயம் யாது? நீ வசிப்பது எந்நகர்? நின் தொழிலென்ன? யாதுகாரணமாக இங்ஙனம் வருகலாயினீர்? நின் மனக் குறிப்பனைத்தும் துரையவர்கள் சமூகம் நவின்றிடில் மிகவும் தயவாய்க் கேட்பார்.

ஆலப்பளை:—தர்மகுணத்திற் சிறந்த மஹாகனம் பொருந்திய ஆங்கிலேய துரையவர்களே. யான் கண்டிராஜனுக்கு முதன்மந்திரியாகிய ஆலப்பளை. நான் தமது சமூகம் நாடிவந்த காரணம் யாதெனில், எமது அரசனாகிய கீர்த்திசிங்கன் கொடுங்கோன் முறையாய் நீதிதவறி அநியாய அரசு புரிவதாயினன் அதைப்பற்றி அரசாங்கத் தியல்பிற்குரிய சில காரியங்களைப் பேசவேண்டுமெனும் ஆசையினால் தமது திவ்யசமூகம் நாடிவந்தேன்.

67773

ஆங்கிலேயமந்திரி:—அப்படியா! சரி! இதைப்பற்றி பின்னால் ஆலோசிப்போம். ஆனால், தற்சமயம் உமது கருத்தென்ன? தெரிவிப்பீராகில் துரைவர்களிடம் புகல்வேன் அவரும் அவற்றிற் கேற்ப நிறைவேறுவதாயிருப்பின் சம்மதிப்பார்.

ஆலப்பளை:—துரையவர்களே! எமது கண்டிதேசத்தில் முன்னம் இராஜரீகம் புரிந்திருந்த

அரசன் மரணமெய்தினபின் அவர்க்குப்பின் சந்ததி யின்றியதால், அரசுரிமைக்கு யாவரையாயினும் ஒருவரை நியமித்தல் வேண்டுமென மனதிலெண்ணி யானையின் துதிக்கையிற் பூமாலையைத் தந்து அதுயாவர் கழுத்திற் சூடுகின்றனவோ அவர்களை மஹாராஜனகச் செய்குவோ மெனும் ஏற்பாடு புரிதலும் அவ்வேழம் எங்களனைவரையும் விடுத்து அரண்மனையிற் சாமானிய தொழிற் புரியும் கீர்த்திசிங்க னெனும் ஓர் வடுகன் கழுத்தில் மலர்மாலை சூடியதால் அவனையே அரசனக நியமித்து யாங்களனைவரும் மந்திரிகளா யிருக்கையிற் சிலநாள் வரையினும் நன்மனதுடன் இராஜரீகம் புரிந்திருந்தனன். ஆனல் அற்பனுக்கு ஐஸ்வரியம் வந்தால் அக்கிரமத்திற்குறை யனுகா தென்பது போலச் செங்கோன் முறைதவறி கொடுங்கோன் முறை புரிதலாயினன். இதனைச் சகிக்க முடியாமல் நகரவாசிகள் வெகு துயருற்று விசனமெய்தலாயினர்.

இலங்கைமந்திரி:—இஃதென்ன ஆச்சரியம்? அரசனுனல்தானென்ன அநியாயமாய் அக்ரமம் புரிவதேன்? இதனைக் கேள்வி யுற்ரோர் வியப்புறுந் தன்மையன்றோ?

ஆலப்பனே:—மஹாப்ரபு! அந்த கீர்த்திசிங்கராஜன் சந்ததமும் லாகிரி வஸ்துக்களருந்தி மதோன்மத்தனுய்த் தன்னைப்போன்ற மனிதரையெல்லாம் மசகம்போ லெண்ணி மரியாதையின்றி தூஷித்திகழ்வதும், கற்புநிலை தவமுத கன்னியரை இச்சித்துத் தன் மனதிற்கிசையாவிடில் தலை துணிப்பதும், குடிகட்கு வரிகளைச் சுமத்தி பலவித குரூர் பயங்கர துன்பத்தை விளைவிப்பதும் சிறுபிழை செய்தோரையும் இருபிளவாய் வெட்டி எறிவதுமாயிருக்கையில் சாந்த மனதமைந்த மஹா உத்தமனுகிய பிரமிந்தளேயென்பவர் அவன் மனதைச் சீர் திருத்தம் செய்வதற்காகத் தகுந்த நன்மதி புகல, அவரையும் கொன்றுவிட்டனன்.

ஆங்கிலேயமந்திரி.—சரி! அவ்விதமாயின் நகரவாசிகள் எவ்விதமாய் சகித்திருப்பர்.

ஆலப்பனே.—ப்ரபு! இந்த அனியாயத்தை யென்னென்று சொல்வது யாதொரு தீங்கும் புரிந்திலாத மாந்தரைப் பகைஞரைப்போலெண்ணி, கண்ணைப் பிடுங்குவதும், மலையிலிருந்து உருட்டுவதுந்தான் தண்டனையன்றி, குற்றத்திற் கியன்றவிதமாய் ஆக்ஞாபித்தற்கிடையாது. ஆதலின், இதனைச் சகியாத குடிகள் மனவருத்தமுற்று என்னிடம்முறை

யிட்டனர். யான் அரசன்பாற் புகல. யாதொன்றையும் செவியி லேற்காமல் தீதுள்ள துர்க்குணத்தையே துணைவகித்து ஆற்ருெணு சீற்றமெய்துகின்றனர். ஆனல் சற்று தடுத்துரைத்திடில் சிரந்துணித்திட தாமதியார்.

ஆங்கிலேயமந்திரி.--நல்லது! இனி இதைக்குறித்து யாது ஆலோசனை புரிவதாயினீர்? உமதுளத்தின் கருத்தைப் புகன்றிடில் யாமதற்குத் தகுந்த ஏற்பாடு செய்வோம்.

ஆலப்பனே.—ஆலோசனை யென்ன! உலக ரக்ஷகரைப்போல் சாந்த மனதமைந்த தர்ம குணத்தினராகிய நீவிர் கருணைக் கூர்ந்து உமது சேனு சைன்யங்களுடன் கண்டி தேசத்தில் வந்து கீர்த்திசிங்கனைக் கொன்றுவிட்டு நீங்களே அந்நகரினைப் பரிபாலனஞ்செய்து எங்கட்கு யாதொரு துன்பமுமின்றி ஆதரித்தருளல் வேண்டும்.

என, புகன்றவை யனைத்துங் கேள்வியுற்று இலங்கை மந்திரியானவர் மனமகிழ்ந்து ஐயா ஆலப்பனேயே இனி நீர் யாதொரு வருத்தமுமெய்தாதீர். இந்தச் செய்தியை துரை அவர்களிடம் தெரிவித்து உமது மனதின்படியே முடித்து விடுகிறேனென்று தமது ஆங்கிலேய துரையவர்களின் சமுகம் ஆலப்பனே நவின்றவை யனை

த்தும் விபரமாய் இங்கிலீஷ் பாஷையினாற் புகன்றனர். அந்தத் தயாநிதியாகிய துரையவர்களும் சரி! அவ்விதமானால் அவற்றிற் குகந்த ஏற்பாடு செய்வோமென சமயம்பார்த்திருக்கையில் ஆலப்பளையும் அந்தக் கொளும்பு தேசத்திற்றானே சந்தோஷ மாகத்தான் வசித்திருந்தனன்.

## Seene 2.

இடம். அரண்மனே.

### கதாநாயகர்.

கீர்த்திசிங்கன், திசாநாயகன், முள்ளிக்கோடை, சோமநாதசெட்டி, குமாரியாமி.

இங்ஙனம் வரும் விதியைக் கவனித்துணரா மல் மனேல்லாசமாய் ஆனந்த மெய்தும் ஆலப் பளேயின் நினேவு கனவிற் சண்ணுற்ற காக்ஷியைப் போன்றிருந்த கண்டிதேசத்தில் இராஜரீகம் புரி யும் கீர்த்திசிங்க மஹாராஜன் தனது முதன் மந் திரியாகிய ஆலப்பளே சப்ரகாமத்திற்குச் சென்ற வன்இன்னுந் திரும்பாததற்குக் காரணம்யாதென அருகிலிருப்போரை விசாரிப்பதாயினன்.

கீர்த்திசிங்கன்:—மந்திரி! இஃதென்ன ஆச்சரியம் சப்ரகாமத்திற்குச் சென்ற ஆலப்பளே இது வரையிற் றிரும்பாததற்கு காரணம்யாதோ? கப்பம் வாங்கச் சென்றவன் இத்தனே நாளாய் தாமதிப்பதேன்.

திசாநாயகன்:—அரசே! யானும் அவ்விதமே யோ சிப்ப தாயினேன். ஆனல் முள்ளிக்கொடை அதிகாரத்தை விசாரித்தால் தெரியவரும்.

என, புகன்றவை யுணர்ந்த அரசன் சற்று யோசித்து சரி! அப்படியானல்அவரை அதிதீவிர

மாய் வரவழைப்பிரென தூதர்களால் இரண்டா வது மந்திரியாகிய முள்ளிக்கொடையை வரவ ழைத்து விசாரிப்பதாயினன்.

கீர்த்திசிங்கன்:—மந்திரி! ஆலப்பனையானவர் சப்ர காமத்திற்குச் சென்று கப்பம் வாங்கிக் கொண்டுவரச் சென்றவர் இத்தனை நாளாய் ஏன் திரும்பவில்லை? எவ்வளவு நாளாயிற்று! போனவர் அப்படியே போய் விட்டாரோ? அன்றியும் பகுதி வாங்கிக்கொண்டு வரப் போனவர். அந்நகரிற் தாமதிக்கவேண்டிய தென்ன? இதைக் கவனித்திடில் வியப்புறுந் தன்மை யன்றோ? சரி! சரி!! நாமெவ்விதஞ் சென்றாலும் நமது அரசன் என்னசெய்யப் போகின்றானென்று மதித்தாற்போ லிருக் கின்றது. இனி தாமதித்திடாமல் சேவகரை யனுப்பி உடனே வரவழைத்திடுவீர்.

முள்ளிக்கோடை:—அரசே! அவரை வரவ ழைப்பதற்கு தடையில்லை நின் சமுகத்தில் யான் புகலும் மனுவொன்றுளது, கவனித் தருளல் வேண்டும்.

கீர்த்திசிங்கன்:—ஆ! இஃதென்ன ஆச்சரியம்? நீ சொல்லும்போதே ஓர்வித சந்தேகமாய்த் தான் தோற்றுது சரி! சரி!! அஃதென்ன சூதோ உண்மையைப் புகல்வாய்.

முள்ளிக்கோடை:—வேந்தே! சப்ரகாமத்திற்குச் சென்ற ஆலப்பனை இத்தனை நாளாய்த் தாமதித்திருப்பதற்குக் காரண மென்ன? அங்ஙனம் யாதோ சூது விளைந்ததுபோற் காண்கிறது. அன்றியும், அவருடைய துர்க்குணமனைத்தும் உமக்கு யான் தெரிவித்திருந்தும் கவனித்திலிர் இராஜதுரோகம்புரியும் உலுத்தகுணம் அவரிடத்தி லியற்கையா யமைந்திருக்கின்றன. அதனாற்றான்பகுதிபணம் வாங்கிக்கொண்டு வருகிறே னென்று சப்ரகாமத்திற்சென்று அங்ஙன மிருக்கும் சில பிரபுக்களோடு யாதேனும் சதியாலோசனை புரிந்து உன்மனம் வஞ்சித்து இந்நகரின் அரசுரிமையை மறுமன்னர் வசமாக்கி விடுவதற்குத்திய ஆலோசனை செய்துக்கொண்டு தருணம் பார்த்திருக்கின்றனர்போற் காணப்படுகின்றன. இனியேனும் அவர்மேற் கிஞ்சிற்று ஞாபகமா யிருக்கவேண்டும்.

கீர்த்திசிங்கன்:—ஆம்! ஆம் அதற்கென்ன சந்தேகமா? நீர் புகன்றவாக்கியத்தி லணுவேனும் பிசகிலா திருக்குமென்றே உண்மையாய் நம்பினேன். ஆனல் அவன் அவ்வித மித்ரபேதஞ் செய்தபின் உலகி லுயிர்த்திருப்பானோ?, இதோ பார்த்தனையா! என் கரத்திற் றுங்கிய தென்ன? கவனித்திலாயோ? இக்

கட்கத்தினால் அவன் சரீரத்தைச் சித்ரவதை செய்து நாய்நரிகட்கு விருந்தளிக்காமற்போனால் யானென்ன வடுக வம்ஸாதிபனாகிய கீர்த்திசிங்க ராஜனா? நல்ல திருக்கட்டும். இனி தாமதித்திடாமல் தூதரை யனுப்பி அதி துரிதமாய் அவனை இங்ஙனம் வரவழைப்பீர்.

என, புகன்றவை வினவிய விஸ்வாச பாதகனாகிய வம்ஸத்துரோகி யெனும் முள்ளிக்கொடையென்பவன் சற்று யோசித்து துர்க்குணத்தைத் துணையாய் வகித்து இதுதான் தருணம் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டுமென்பதுபோல ஆலப்பனையின்மீது வீண் பழி சுமத்தி மித்ரபேதஞ் செய்துவிட்டால் அரசன் அவனைத் துரத்திவிட்டு நம்மையே! முதன் மந்திரியாக்கிக்கொள்வான், சர்வதிகாரமும் நம்முடையதாகவே யிருக்குமென்றெண்ணி பழிபாபத்தைதையும் கருதாமல் கீர்த்திசிங்கராஜன் ஆக்ஞாபித்தவிதம் தூதர்பாற் புகன்று அவர்களை சப்ரகாமத்திற்கு அனுப்பிவிட்டு, ஓர் கடிதத்தில் அடா கீர்த்திசிங்கா! நீ மஹா கர்வியா யிருக்கின்றனை ஆகையால் இன்னும் பத்து தினத்திற்குள் உனது பிள்ளைகளின் தலையை அறுத்து உரலிலிட்டு, உன் மனையாளின் கையினால் இடிக்கச்செய்த பின்னர், அவளையும் குளத்திற் றள்ளிக் கொன்றுவிட்டு,

உனது இராஜரீகத்தையும் ஆங்கிலேயரிடம் ஒப்பித்து உன்னையும் சித்ரவதை செய்து கொன்று விடுகிறேன். பாரடா வடுகப்பயலே இவ்விதம் யான் செய்யாவிடில் யானுமொரு சிங்களவனுவென்று ஆலப்பனை யெழுதினதுபோல அவன் பெயரையும் குறிப்பிட்டு திருட்டுத்தனமாய் சப்ரகாமத்திற்சென்ற தூதர்கள் வருகிற வழியிலிருக்கும் ஓர் மரத்தில் ஒட்டிவைத்துவிட்டு யாருக்குந் தெரியாமல் மிகவும் நற்குண மமைந்த உத்தமனைப்போல அரண்மனையில் வந்து அரசனருகில் வீற்றிருந்தனன்.

இங்ஙனம், முள்ளிக்கொடையின் நயவஞ்சக அபிப்ராய மோச மிவ்விதமிருக்க, "பட்டவிரலிற் படும், கெட்ட குடியே கெடு" மென்பதுபோல, சிலகுணாளனை ஆலப்பனை குடிக்கு அனர்த்த காலம் வந்துற்றுற்போல பற்பல தேசத்திலுஞ் சுற்றித்திரியும் இரத்தின வியாபாரிகள் கண்டி நகரத்தில் வந்து இராஜவீதியில் விலை கூறிக் கொண்டு செல்லுந் தருணத்தில் கீர்த்திசிங்கராஜன் சேவகரை யனுப்பி அவர்களை வரவழைத்து வினவுதலாயினன்.

கீர்த்திசிங்கன்:—ஐயா நீர் எந்த தேசத்தின் வர்த்தகர், எதோஉம்மிட மிருக்கும்படியான உபர்ந்தநவரத்தினங்களைக் காண்பிப்பீர்.

சோமநாதச்செட்டி:—அரசே! யாங்கள் வசிப்பது மதுரை தேசம், அநேக தேசங்களிலும் வியாபாரஞ் செய்துக்கொண்டு கொளும்பு தேசத்திலும்வந்துஅந்நகரிற் சிலநாளிருந்து இந்நகரில் வருகலாயினேம் எம்மிட மிருக்கும் இரத்தினங்கள் யாவராலும் புகழ்ந்துரைக்கும்படியானஉசிதமானதென்றெண்ணுவீர்கள். உமக்குச் சந்தேகமே யிருந்தால் கையி லெடுத்துப்பாரும்.

கீர்த்திசிங்கன்:—சரி! சரி!! நல்ல திருக்கட்டும் அந்தக் கொளும்பு தேசத்தில் யாதேனும் அதிசயமுளதோ? கண்ணுற்ற வரையிலும் தெரிவிப்பீர்.

சோமநாதச்செட்டி:—அரசே! யாங்களும் அதனை ஆவலாய் புகலுதுமென கருத்திலுன்னி வந்துற்றேமெனினும், இராஜ சமுகமதனை செவியிற் கொள்ளாரென சந்தேகித்திருந்தோம். மஹாராஜா கேட்கும்போது சொல்லத்தான்வேண்டும் அஃதுயாதெனில் கண்டிநகரத் தரசன் முதன்மந்திரியாகிய ஆலப்பனே யென்பவர் தமது அரசன் அநியாய அரசுரிமை புரிகிறதால் கொளும்பில்வந்து, ஆங்கிலேயரைத் துணைபற்றிச் சென்று, கண்டிவேந்தனை நீக்கிவிட்டு, ஆங்கிலேயர் அந்நகரினைப் பரிபாலனஞ் செய்ய வேண்டு

மென, சதியாலோசனைபுரிவதால் இன்னுஞ் சில தினத்திற்குள், இங்கிலீஷ் ராணுவங்கள் கண்டிதேசத்துக்குச் சண்டைசெய்யப் போகிருரென்றும் அந் நகரவாசிகள் ஒருவருக் கொருவர் பாஷித்துக் கொண்டிருக்கின்றனர்,

என, நவின்றமை யனைத்துங் கேள்வியுற்ற கீர்த்திசிங்க ராஜன் 'நாகம்போற்சீறி' பற்களை நெறநெற வெனக்கடித்து, மீசைதுடிக்கக் கர்ஜ்ஜித்து பெருமுச்சுவிடுத்து, ஆ! ஹா!! மந்திரி பிரதானியரே கேள்வியுற்றீரா? எனக்கு முதன் மந்திரியாயிருந்து எனக்கே கெடுதிசெய்ய நினைந்தனன். இனி யவனைச் சும்மாவிடலாமா வென அரண்மனையை அதிரும்படியாய் வீராவேசத்துடன் கூச்சலிடுகையில் அருகிலிருந்த வம்ஸ துரோகியாகிய முள்ளிக்கொடை யென்பவன் இதுவும் ஓர்நல்லகாலத்தின் இலக்ஷணந்தானென மதித்து வெஞ்சமர்க்கஞ்சாத வீரப்ரதாப விஜயபுஜபல ரணரங்கசூரனெனும், வேந்தனே! உன்னைஜெயிப்பவ ருலகிலுளரோ? ஆயினும் தூதர்கள் சப்ரகாமத்திற்குச் சென்றிருக்கின்றனர். அவர்கள் வந்தபின்உண்மை யனைத்தும் விபரமாய்க்கவனித்துணர்ந்து அவற்றிற் குகந்த ஏற்பாடுசெய்வோம் சிற்றமெய்தாதீ ரென்றனன். அப்பால் கீர்த்திசிங்கன் அந்த வியாபாரிகளிடம் தனக்கிஷ்டமான

இரத்தினங்களை வாங்கிக்கொண்டு அதன் கிரயத்தைத் தந்து அனுப்பிவிட்டனன்.

இங்ஙனம் இவர்கள் நிலை இவ்விதமிருக்க சப்ரகாமத்திற்குச் சென்ற தூதர்கள் ஆலப்பளையை அந்நகரமுழுதும் தேடினுங் காணுமல் அவர் கொளும்பிற்குச் சென்ற காரணத்தையும் அந்நகரவாசிகளாற் கேள்வியுற்று கண்டிமாநகரத்தை நாடிவருகையில் வழியிலெதிருற்ற மரத்தில் ஒட்டி வைத்திருக்கும் கடிதத்தைப் பக்குவமாய்ப் பேர்த்தெடுத்துக்கொண்டு அரண்மனையில் வந்து, கீர்த்திசிங்கனைப் பணிந்து, சங்கதி யனைத்தும் புகன்று கடிதத்தையுங் காண்பித்தனர். அதைக் கண்ணுற்ற கீர்த்திசிங்கன் அருகிலிருந்த முள்ளிக்கொடை கரத்திற் றந்து இதனை வாசிப்பீரென்க. அந்தப் பாதகன் இனி நமதெண்ணம் நிறைவேறியதென மனமகிழ்ந்து மனோல்லாசமாய் வாசிப்பதாயினன், அடடா கீர்த்திசிங்கா! உனது மனோகர்வத்தினல் அநியாயமாய் கொடுங்கோன் செலுத்துவதால் யானுன் கர்வத்தை அடக்கி, உன் பிள்ளைகளின் தலையை யறுத்து உரலிலிட்டு உனது மனையாளின் கையினல் இடிக்கச்செய்து, அவளையும் குளத்திற் றள்ளிக்கொன்று, உனது இராஜரீகத்தையும் ஆங்கிலேயரிடம் ஒப்பிவித்துவிட்டு உன்னையும் சித்ரவதை செய்துக் கொன்றுவிடுகிறேன் பாரடா! அற்ப

னாகிய வடுகப்பயலே இவ்விதம் யான் செய்யாவிடில் யானுமொரு சிங்களவனா இப்படிக்கு ஆலப்பளை கையெழுத்து என்று எழுதியிருக்கின்றனவென்று வாசித்துக் காண்பித்தவுடனே கீர்த்திசிங்கனுக்கு ஆற்றொணா கோபம் அதிகரித்து, ஆக்ரமித்து அடடா! ஆலப்பளை நீ இவ்வித துர்க்குணத்தினாலென்னை வெல்வதற்கெண்ணினாயோ துஷ்டா! இதோ பாரென் சாமர்த்தியங் காண்பிக்கின்றேன். மந்திரி முள்ளிக்கொடை நீர்கொலைஞரை அனுப்பி ஆலப்பளையின் மனைவி மைந்தரை அதி தீவிரமாய் இவணழைத்து வருக வென்னலும், சமயமெப்போ தென்று கார்த்திருந்த வம்ஸ துரோகியாகிய அந்த பாதகனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்துக் கொலைஞர்கட்கு கீர்த்திசிங்கன் மனக்குறிப்பை புகன்றனுப்புதலும், அவர்கள் ஆலப்பளையினுடைய மாளிகைக்கு வருகலாயினர்.

இங்ஙனம் இவர்கள் இது இவ்வித அநியாய விபரீத வேடிக்கையா யிருக்கையில் கலகத்திற்கு காரணமா யிருந்த இரஞ்சித பூஷணியானவள் நித்திரை புரிந்திருக்குந் தருணம், துர்க்கினவு கண்டு வாய்குளறி திடீரென்றெழுந்து, அருகிலிருந்த குமாரியாமியைப் பார்த்து தமக்கா! இத்தினம் யானோர் சொற்பனங்கண்டேன் அஃதெவ்வாறெனின். ஒரு சிங்கம் ஓர் பசுவைப் பற்றி

யிழுத்துக் கொண்டுபோய் அதன் கன்றுகளைக் கொன்று அதன் தாயினுல் மிதிக்கச் செய்தது. பிறகு இரண்டு பூதகங்கள் ஓடிவந்து அந்தப் பசு வின் கழுத்திற் கல்லைக்கட்டி குளத்திற் றள்ளி னது அந்தக்கொடிய சிங்கத்தை ஓர் காளை முட் டித் தள்ளி ஜெயித்து சிறைபட்டுப்போனது போ லவும் கண்ணுற்று அலறியயந்தெழுந்தேன் இதன் காரணம் யாதொன்றுமே தெரியவில்லையே யெ ன்று பாஷித்துக்கொண்டிருக்கையில் கொலைஞர் கள் ஓடிவந்து அம்மா குமாரியாமி! மஹாராஜா உன்னையும் உன் பிள்ளைகளையும், அதிவிரைவாய் அழைத்து வரச்சொன்ஞர். கிஞ்சிற்றேனும் தாம திக்க லாகாது, புறப்படுவீரென்றனர். குமாரி யாமி சந்தேகித்து, ஐயா எங்களை யாதுகாரண மாக அரசன் வரவழைக்கச் சொன்ஞர் நீங்கள் சொல்லும்போதே பயமா யிருக்கின்றனவே யெனக் கண்ணீர்த் ததும்பக் கதறியழுதனள். அந்தக் குரூர குணமமைந்த கொலைஞர்களோ வெனின் பழிபாவத்திற்கும் அஞ்சாமல் எங்களைக் கேட்க வேண்டாம். அரசனை வந்து கேட்டுக் கொள் சிக்கிரமாய் வராவிடில் அடித்துத் தூத் திக்கொண்டு போவோமென, குமாரியாமி மன மிரண்டு நடுநடுங்கி தனது சகோதரியாகிய இரஞ் சித பூஷணியைப் பார்த்து, அம்மணி என்னகால விபரீதமோ? யான் கொலைஞர்களுடன் அரண் மனைக்குப் போகிறேனென்று பிள்ளைகளுடன்

புரப்பட லாயினன், இரஞ்சிதபூஷணி மனந் துடித்து ஐயையோ! இதற்குத் தானோ ஆகாத கினவு கண்டேன். அக்கா! தெய்வச் செயல் இப்படியாகவா முடிந்தது? ஆ! கதிர்காம வடிவேலா! தர்மமும் பறந்ததா? வெனக் கண்ணீர் சொரிந்து கதறி யழுகையில் குமாரியாமி மிகு மென்மேலும் துக்கமதிகரித்து தங்கா! நீ யாதொன்றுக்கும் அஞ்சாதே யானும் பிள்ளைகளும் அரசனுடைய காலில் விழுந்து கேட்டுக் கொள்ளுகிறேமென்று புறப்பட்டு வருகையில் தனது மணாளனை நினைந்து ஐயோ பிராணேசா முன்னமே இந்நகரைவிடுத்து எந்நகரிலேனும் ஓடிப்போய் ஜீவித்திருப்போமென்றாலுந் தடுத்தீரே இனியானென் செய்வேன். ஐயோ தங்கா! உன் அத்தானும் அருகிலில்லையே யானுனை எவ்விதமாய் விட்டுப் பிரிவேன் ஆ! பரமேஸ்வரா! அம்பிகை பாகா! அனுதாரக்ஷகா! நீரே துணையென்று, மஹா பயங்கரத்துடன் மாளிகையை விடுத்து அரண்மனையில் வந்து அரசன் பாதத்தில் பிள்ளைகளும் தானும் வீழ்ந்துப்பணிந்து, ஆதரித்திரக்ஷிப்பீர் தயாநிதியென பிரார்த்தித்தனர்.

அந்தப் பாதகன் கிஞ்சிற்றும் மனமிரங்காமல் சீ! எட்டி நில் துஷ்டி! உன் மணாள னெங்கே யென்று அதட்டினன். அம்மாது மெய் நடுங்கி வாய்குளறி மஹாப்ரபு! அவர் இங்ஙனமில்லை

கொளும்பில் இருக்கிறாரெனத் தெரியவருகிற தென்றனள். அத்தருணம் கீர்த்திசிங்கன்கோபத் தினுற் சிரித்து, அவன் ஏன் அந்த தேசத்திற்குப் போயினனென யாது காரணமோ தெரியாதென் றனள். நல்லது அவனெழுதின கடிதம் உனக்குத் தெரியுமாவென ஐயா! உங்களிருவருக்கும் நிகழ் ந்த கலகம் யாதோ யானுணர்கிலே னென்றவுட னே. கீர்த்திசிங்கன் இவள் திருட்டுத்தனமுள்ள சிங்களச் சிறுமியாதலால் மறைத்துச் சொல்லு கிருள். அடா கொலையாளிகளே இவள் பிள்ளை களின் தலைகளையும் யறுத்து இந்த உரலிலிட்டு இவள் கையினுலிடிக்கச் செய்து, பிறகு இவள் கழுத்திற் கல்லைக்கட்டி குளத்தில் அமிழ்த்துவி ரென்றனன் இந்த அநியாயவார்த்தையைக் கேள் வியுற்ற மஹாராணியாகிய மிர்துபாஷினி வயறெ றிந்து மனஞ்சகியாமல் கொலைஞரைத் தடுத்து, பிராணேசா! நமக்கும் பிள்ளைகளிருக்கின்றன சிசு ஹத்தி செய்வது பாதகமல்லவோ இந்தக் குமாரி யாமி யென்ன தீங்கு செய்தாளென்று இத் தகைய தண்டனை விதிப்பதாயினீர்? ஐயோ, உல கத்தில் ஸ்திரீகத்தி, சிசுஹத்தியைவிட வேறே பாபமுளதோ? வேண்டாம் நமக்கு ஆதியில் நன் மைசெய்து நற்பதவி லமர்த்திய ஆலப்பளையின் மீது முனிவுறுகிர், இது அவருடைய கையெழு த்து மல்லவே, யாவரோ துர்க்குணத்தினர் சூது விளைத்தனர் போற் காண்கின்றதென பற்பல

விதமாய் மொழிந்தனள். அவள் வார்த்தையை யுங் கேளாமல் அடா கொலைஞர்களே இன்னும் ஏன் தாமதிக்கின்றீர், சீக்கிரமாய் சிரசைவெட்டி உரலிற் போடுங்க ளென்றனன்.

---

## கண்டிராஜன் கொலைஞர்களால் குமாரியாமின் பிள்ளைகளின் தலைகளையறுத்து உரலிலிட்டு அவளால் இடிக்கச்செய்வது.

அத்தருணம் கொலைஞர்கள் ஓங்கிக்கொண்டு அந்தப் பிள்ளைகளை வெட்ட வருகையில் அம்மா வென்று கதறியழுது அரசன் காலில் விழுந்து ஐயா எங்களைப்போ லுமக்கும் பிள்ளைகளில்லையா எம்மைக் கொல்ல வேண்டாமென்று சொல்லு வீரையனேயென கண்ணீர்சொரிந்து பரிதாபமாய் அழுததைக் கண்ணுற்ற குமாரியாமி மனந் துடித்து அரசே! என்னையாகிலும் கொன்றுவிடு வீர் இவர்களை வெட்டாதீரெனத் தடுத்தும் கிஞ் சிற்றும் மனமிரங்காத கீர்த்திசிங்க னுடைய உத்திரவின்படியே கொலைஞர்கள் அவ்விரண்டு பிள்ளைகளின் சிரசை கத்தியினு லறுத்துவிட்டார். உடனே கீர்த்திசிங்கன் அந்தத் தலைகளை உரலில் போட்டு பெற்றவளின் கையால் இடிக்கச்செய் யும் தருணம் அவள் மனம்பதைத்து பரமேஸ்

வானே தியானஞ் செய்து கொண்டிருக்கையில் அந்தப் பிள்ளைகளின் பிராணன் அந்தர மார்க்கத்தில் சிவத்தியானமா யிருந்தன. பிறகு குமாரியாயின் கழுத்தில் கல்லைக்கட்டி குளத்தில் தள்ளச் செய்தனன், அப்போது சிவப்ரகாசாவென திடீரென குதித்து ஊற்றைச் சரீரத்தை விடுத்து திவ்யசரீரம் பெற்று அற்ப வாழ்வை வெறுத்து நித்யானந்தபேரின்ப வாழ்வைப்பெற்றனள். இந்த அநியாயத்தைக் கண்ணுற்றோ ரனைவரும் பரிதாபத்துடன் விசன மடைந்தவராய்க் கண்ணீர்த் ததும்பக் கதறியழுதுக் கொண்டிருந்தனர், அத் தருணம் தோழிப்பெண்க ளோடிவந்து இரஞ்சித பூஷணியின்முன் திடீரென்றலறி வீழ்ந்து, அம்மணி! குமாரியாயியும் பிள்ளைகளும் மரணமுற்றாரென நிகழ்ந்தவை யனைத்தும் விபரமாய் புகன்றவையுணர்ந்த அந்த கன்னிகை! ஆ! கதிர்காமவடிவேலா இந்நகரத்திலிவ்வித அநியாய முற்றதுன் திருவிளையாடலோ? ஐயோ பிள்ளைகளைவெட்டி உரலிலிட்டு இடிக்கும்போது என் சகோதரியின் மனம் என்னமாய்த் துடித்ததோ? வென்றழுது அம்மா தோழிப்பெண்களே! என் தமக்கை விழுந்திறந்த விடத்தை யாகிலும் காண்பிப்பீரென அவர்களுடன் குமாரியாயி விழுந்திறந்த குளத்தின் கரைமீதுவந்து, ஆற்றொண்ணு விசன மடைந்து அக்கா! இதோ யானும் வருகிறேனென்று திடீரென ஜலத்திற்குதித்து பிராணனை

விடுத்தனள், அத்தருணம் இவர்கட்காகத் தெய்வலோகத்தி லிருந்துவந்த புஷ்ப விமானத்தில் குமாரியாயியும் பிள்ளைகளும் இரஞ்சிதபூஷணியும் அமர்ந்து நகரவாசிகள் கண்டு நமஸ்காரம் படும் படியாய் மண்ணுலகம் விடுத்து விண்ணுலகத் திற்போய்ச் சேர்ந்து என்றைக்குமே அழியாத நித்யானந்த பேரின்பவாழ்வைப் பெற்றிருந்தனர்.

இங்ஙனம், இவ்வித அற்புதானந்த ஆச்சரியக் காக்ஷியைக் கண்ணுற்ற கீர்த்திசிங்கராசன் மனமிரண்டு அடடா என்ன மோசமாயினோம், இவர்களை அநியாயமாய்க் கொலைபுரிந்துப் பழி தேடிக் கொண்டோமே, இவர்கள் உத்தமசீலரான படியினாலே விமானத்தி லமர்ந்து விண்ணுல கடைந்தனர், இம் மண்ணுலகில் யாமிருப்பது என்ன நிச்சயம்? நமது ஆவியகன்று அந்த கன்பதி யணுகில் யாதுதண்டனை நேரிடுமோ? சிசுஹத்தி ஸ்திரீ ஹத்திச் செய்பலாகாதெனநமது மனையாளும் பலவிதமாய்த் தடுத்தும் அவிவிலிய மூர்க்கத்தினால் அநியாயமாய்ப் பழிதேடிக் கொள்ளுதலாயிற்றேயென விசனமுற்றிருந்தனன்.

இவன் நிலை இவ்விதமிருக்குந் தருணம் முள்ளிக்கொடை யானவன் மனம் பதைத்து, அடடா! இக்தென்ன விபரீதமாயின? நாமொன்று

நினைக்கத் தானென்றாய் முடிந்த காரணம்போல், அரசன் ஆலப்பனையை உத்தியோகத்தி லிருந்து நீக்கிவிட்டு நம்மை முதன் மந்திரியா யமைத்துக் கொள்வானெனும் விண்ணப்பையினாலெழுதி மரத்தி லொட்டிவைத்த கடிதத்தினால் விபரீத கலகம் விளைந்து அற்பனாகிய கீர்த்திசிங்கனால் ஆலப்பனை யின் குடி முழுகினதுமன்றி,சிசுஹத்தி ஸ்திரீஹத் திக்கு முள்ளிக்கொடையே முதற்காரண மாயின னெனும் பழிபாவம் நேர்ந்தனவே. இவ் விபரீ தத்திற்கு யாதுசெய்வேன். அரசன் அன்று கொன்றால் தெய்வம் நின்றுகொல்லு மென்பதுப் போல, அந்தப் பாதகன் யாதொன்றையும் தீர விசாரியாமல் ஆலப்பனையின் மனைவி மைந்தரை அநியாயமாய்க் கொலைஞர்களாற் சித்ரவதை செய்வித்தனன். ஆனால் அவர்கள் மாசற்ற குண த்தினராகிய பக்த சிரோன்மணிக ளானதால் ஊற்றைச் சரீரமானதை விட்டு திவ்யசரீரம் பெற்று தேவலோக மிருந்துவந்த புஷ்பவிமா னத்தில் அமர்ந்து யாவரும் நேத்திரானந்தமாய்க் கண்ணுற் றகமகிழுந் தன்மையாய்ச் சொர்க்க பதவியிற்போய்ச் சேர்ந்தனர். இனிநாம் தாம திக்கலாகாது, அதிதீவிரமாக ஆலப்பனைக்கு தெரியப் படுத்தவேணும். இல்லாவிடில், நம்மீது சந்தேகங் கொள்வாரென்று மனம் பதைப்புற்று கண்டிதேசத்திலுற்ற விபரீத தொடு வழக்கினால் நேர்ந்தக் கொலை சங்கதி யனைத்தும் ஓர் நிருபமா

னது எழுதி தூதவரிடம் தந்து, அத்தருணமே கொளும்பு தேசத்திற் சென்று ஆலப்பளைகையிற் றந்து நிகழ்ந்தவையனைத்தும் விபரமாய்ப் புகல்வீ ரென் றனுப்பினன்.

இங்ஙனம் இவ்வித அநியாய ஆபத்தா யிருக்கையில், கொளும்பு தேசமதி லிருக்கும் ஆலப்பளை துர்க்கினவு கண்டு திடீரென்றெழுந்து யாதொன்றுந் தோற்றுமையால் அருகிலிருந்த சினேகிதரைப் பார்த்து, நேயர்காள்! இனி யாது துன்பம் விளையுமோ கவனித்திலேன் அஃதென்ன வெனின், யான் கண்ணுறங்கி நித்திரை புரியுந் தருணம் எனது வீட்டில் இரண்டு பூதங்கள் நுழைந்து, ஒரு பசுவைப்பற்றி இழுத்து கன்றுக் குட்டிகளின் கழுத்தை யறுத்து அந்தப் பசுவின் கழுத்திற் கல்லைக்கட்டி குளத்திற் றள்ளிக்கொ ன்று விட்டதைப்போற் கினவுகண்டே னென, விசனமுற்று மனந்திகைத் திருக்கையில் முள்ளிக் கொடையினு லனுப்பிய தூதர்கள் வந்து நிரு பத்தைக் கரத்திற்றந்து! மஹாப்ரபு! துர்க்குணத் தினனுகிய கீர்த்திசிங்கன் நினைத்ததுபோற் செய் துவிட்டனன். அந்த அநியாயத்தை சொல்லவும் நாவெழவில்லை. இந்தக் கடிதத்தைப் பாருமெ னப் புகன்றதைக் கேள்வியுற்ற ஆலப்பளை திடுக் கிட்டு என்ன கொடுமை புரிந்தனனோ வென கடிதத்தில் வரைந்திருப்பதை வாசித்து ஆ!

எனது மனைவி மைந்தர்கள் உயிரிழந்தனரோ வென, மண்மேற் சோர்ந்து விழ்ந்து மரணமூர் ச்சை யாயினன். அருகிலிருந்தவர்கள் திடுக்கிட்டு ஆ! இஃதென்ன ஆச்சரியமென அவனையெடுத்து உட்காரவைத்து நந்நீரருந்தச்செய்து களைதெளி வித்து நிகழ்ந்தவை யாதென விசாரித்துக் கடி தத்தி லிருப்பதையுங் கண்டுணர்ந்து யாவரும் மனக்கிலேசமுற்று, இனி யாதும் விசன மெய் தாதிரென ஸ்தைரியம் புகன்று ஆலப்பனையை அழைத்துக்கொண்டு கவர்னர் கச்சேரியில் வந் தனர்,

அத்தருணம் ஆங்கிலேய துரையவர்கள் ஆச்சர்யமுற்று ஐயா! ஆலப்பனை இத்தனைநாளாய் மகாசந்தோஷ ஆனந்தசாகரத்தில் மூழ்கிய மனத்தினனாய் மனோல்லாசமாய் யிருந்தனையே. இன்றைக்கென்ன இத்தகைய மனசஞ்சல அழு குரலாய் வந்தனை யென வினவுதலும் ஆலப்பனை திடீரென பூமியிற்சோர்ந்து விழுந்து ஐயா! தர்ம துரை அவர்களே! யானோ மனைவியையும் மைந் தரையுமிழந்த மகாபாவி யானே னென்று கதறி அழுது கடிதத்தைக் கையில் தந்தனன். துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் புரிவதற்காகத் தொல் லுலகிற் பிறந்து இந்தியாவில் அரசாக்ஷி செய்து யாவரையும் காப்பாற்றுதற்காக வந்திருக்கும் ஆங்கிலேயத் துரையவர்கள் பரிதாப முற்று

ஐயா! ஆலப்பளேயே நீர் யாதொரு சஞ்சலமு மெய்தாதீர். இத்தருணமே யாம் கண்டியிற் சென்று கீர்த்திசிங்கனுடைய மனோ கர்வத்தை அடக்கி விடுவோமெனத் தைரியம் புகன்று தமது சேனு சைன்யங்களுடன் கொழும்பு தேசத்தை விடுத்துக் கண்டிமா நகரத்தின் அருகிலிருக்கும் சப்ரகாமத்தில் வந்து சண்டைக் கொடி நாட்டி இரணபேரிகை யறிவித்தனர்.

இங்ஙனம் நிற்க கண்டிதேசத்தின ரனைவரும் இன்ருேடு நமக்கு நற்காலம் வந்தெய்தததென மனேல்லாசமா யிருக்கையில் அரண்மனையிற் சிம்மாதனத்தி லமர்ந்திருக்கும், கீர்த்திசிங்கனைவன் பேரிகையின் சப்தத்தை உற்றுக்கேட்டு ஓ ஹோ யாதோ மோசம் விளைந்தாற்போ லிருக்கின்றன வென, யோசித்துக் கொண்டிருக்கையில் தனது மூன்ருவது மந்திரியானவன் ஓடி வந்து புகலலாயினன்.

திசாநாயகன்:—அரசே ஆலப்பளே ஆங்கிலேய சேனு சைன்யத்துடன் நம்மீது சண்டைக் கழைத்து வந்து சப்ரகாமத்தி லிருக்கின்றனர். இனி தாமதித்தால் ஆபத்தாய்விடும். நீர் எங்கட்கு உத்திரவு செய்தால் நமது சேனைகளுடனே, சென்று அவர்களை அடித்துத் துரத்திவிடுகிறேன்.

கீர்த்திசிங்கன்:—ஆ! அப்படியா! முள்ளிக்கொடை நமது சேனைகளுடன் நீரும் திசாநாயகனுக்குத் துணையாய்ச் சென்று பகைஞரை செயித்து வரவேண்டும் ஆனால் உமது கருத்தென்ன?

முள்ளிக்கோடை:—பகைஞர்கட்கஞ்சாத மற்புயதீரா! இத்தருணமே உத்திரவு செய்வீராயின் நமது சேனுவீருடன் சென்று யெதிரிகளை யடித்துத்துரத்திவிட்டி வருகிறேன்.

கீர்த்திசிங்கன்:—சரி அவ்விதமே வீரா வேசத்துடன் சென்று சமர் முனையில் ஜெயம்பெற்று வருகுவீர்.

என, நவின்றவையுணர்ந்த, முள்ளிக்கொடையும், திசாநாயகனும், இரத, கஜ, துரகபதாதிகளெனும் தமது நால்வகைச் சேனையுடனே சப்ரகாமத்தில்வந்து ஆங்கிலேயருடன் யுத்தம்புரிந்து நிர்வகிக்கமாட்டாமல், அடிபட்டு, ஆவியிருந்தால் யாசித்தாயினும் ஜீவித்திருப்போமென பயந்து ஓடிவிட்டனர். அத்தருணம் தூதர்கள் கண்டி தேசத்தின் அரண்மனையில் ஓடிவந்து கீர்த்திசிங்கனைப்பணிந்து அரசே! நமது சேனு சைன்யங்களும் மந்திரிபிரதானியரும் பகைஞருடன் சண்டைசெய்து இறந்தவர்போக மற்றவரெல்லாம் பயந்து ஓடிவிட்டனர். ஆங்கிலேயரும் அமர் களத்தைவிடுத்து அரண்மனைக்கு வருகலாயின

ரென, பாதகனுகிய கீர்த்திசிங்கன் மனமிரண்டு திகிலடைந்து தனது மாளிகையில்வந்து, தனது மனைவி மைந்தரைப் பார்த்து விசனப்படுவதாயினன்.

கீர்த்திசிங்கன்:—பெண்ணே இனி நாமென்னசெய்வோம். எவ்வாருலகிலுய்வோம். சிசுஹஸ்திஸ்திரீஹத்திசெய்த பாவம் வந்துசூழ்ந்துக்கொண்டு துன்புறச் செய்கின்றனவோ? யாதுந் தெரிகிலேனே இன்ருேடு நமது வாழ்நாள் முடிந்தனவோ? யான்புரிந்த அநியாய அக்ரமத்திற்குத் தெய்வம் பொறுக்கவில்லைபோற் காண்கின்றனவே ஆலப்பளையானவன் ஆங்கிலேயரைத் துணையா யழைத்துவந்து நமது சேனு சைன்யங்களை யெல்லாங் கொன்று விட்டனனும் பகைஞரும் அரண்மனைக்கு வருகின்றனராம் ஆதலின் இனி நாம் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு கானக மார்க்கமாய் ஓடிப்போவோம் வருவாய்.

என, நவின்றிடுந் தன்மணுளன் வார்த்தையைக் கேள்வியுற்ற மிர்துபாஷிணி மனந்திகைத்து பிராணபதி யானுனக்கு முன்னமே தெரிவித்தேனே என் வார்த்தையையுங் கேட்காமல் பழிபாவத்திற் குட்பட்டதாலன்ருே அடாது செய்தால் படாது படுவர் என்பதுபோல ஆபத்திற்

சிக்கி அவதிப்படுவ தாயினீரென, தனது மைந் தர்களை யழைத்துக் கொண்டு மணாளனுடன் செல்லுந்தருணம் கீர்த்திசிங்கனுக்கு சிசுஹத்தி யும், ஸ்திரீஹத்தியுஞ் சூழ்ந்துகொண்டு எங் குஞ்செல்லவொட்டாமற் றடுத்தமையால், தனது இஷ்டதெய்வமாகிய கதிர்காமவடிவேலன் ஆல யத்திலாகிலும் போய் ஒளித்துக் கொள்ளுவோ மென குகையை நாடிவருகையில் பாவியின்நிழல் படலாகாதென பக்த ரக்ஷகனாகிய கந்தசாமியான வர் அகஸ்மாத்தாய் தமது குகையை மூடிக் கொண்டிருந்தமையால் கீர்த்திசிங்கன் மனம் பதைத்து தெய்வமும் துணையில்லையேயென திகி லுற்றுத் திருடனைப் போற்கலவரமாய் அழுதுக் கொண்டிருக்கையில் ஆங்கிலேயர் அரண்மனையிற் சென்று சேவகரை விடுத்து நாற்புரமும் தேடிக் கொண்டு வருகையில் குகையருகில் மனைவி மைந் தருடன் அழுதுக்கொண்டிருப்பதைப் பார்த்துக் குத்தும் உதையும் கொடுத்துக் குடுமியைப்பிடித் திழுத்துக்கொண்டு வருகையில் சிங்கள வம்ஸ துரோகியாகிய முள்ளிக்கொடையும்வந்து ஆங்கி லேய துரையவர்களின் சமுகத்தில் விடுத்தனர்.

அத்தருணம், தர்ம குணத்திற் சிறந்த இங்கி லீஷ் துரையவர்கள் கண்டிராஜனைப் பார்த்து அடடா, பாபி நீ இராஜாதிபதியா யிருந்தாலும், கடவுளாற் சிருஷ்டித்த ஜீவர்கட்கு துன்பம் செய்

யலாமா? கிஞ்சிற்றேனும் மனமிரங்காமல், நின் முன் மந்திரியாயமைந்த ஆலப்பனையின் பிள்ளைகளின் சிரசை வெட்டி உரலிலிட்டு பெற்றதாயின் கையினால் இடிக்கச்செய்து அவளையும் குளத்தில் தள்ளிக்கொன்றுவிடச் செய்தனையே, இது நீதியோ பாதகாவென வினவுதலும் மரத்தில் ஒட்டி வைத்திருந்த கடிதத்தை கீர்த்திசிங்கன் ஆங்கிலேய துரையவர்களிடந் தந்து ஐயா! இதனை வாசித்துப் பாரும் இவ்வித துர்க்குணத்தால் எனக்குக் கெடுதி செய்ய யோசித்தவன் குடும்பமானதை யான் அதஞ் செய்தேனென்றான்.

அதனைக் கண்ணுற்ற ஆங்கிலேயர் ஆச்சரியமடைந்து ஆலப்பனையைப் பார்த்து, நீ உத்தமனுயிருந்தும் இப்படி எழுதலாமோவென, ஐயா! யான் கொளும்புதேசத்திற்குவந்து இரண்டுமாதமாகிறதே யானெவ்விதமா யெழுதி யிருப்பேன், நீரே கவனிப்பீரெனப் புகன்று இது தனது கையெழுத்தல்ல இரண்டாவது மந்திரியின் எழுத்துப்போற் காண்கிறதென்றான். அப்போது அரசன் முதலானோர் சந்தேகித்து அங்ஙனம் நின்றிருக்கும் முள்ளிக் கொடையை எழுதும்படிச் சொல்ல அவன் மனநடுக்க மெய்தினவனுய் திருடனைப்போல் விழிக்குந்தருணம் அடிமேலடியடித்தால் அம்மியும் நகரும் என்பதற்கிணங்க கொலைஞர்களால் அடித்து உதைத்து மிரட்டிப் பயங்

கரப்படுத்தி விசாரிக்கையில் தான் வஞ்சகமாய் எழுதி மரத்தில் ஒட்டிவைத்தது உண்மைதானெனப் புகன்றனன். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற ஆலப்பளை மனவிசாரமுற்று அடா துரோகி நாமனைவரும் ஓரினமாயிருந்தும் இவ்வித துர்க்குணத்திற் பிரவேசிக்கலாமாவென, விசனமுற்றுக் கதறி யழுகையில், கீர்த்திசிங்கனும் மிர்துப்பாஷிணியும் அவ்விதமேதுயருற்றனர்.

இங்ஙனம், இவர்கள் நிலை இவ்விதமாயிருக்கையில் இந்த அநியாயத்தை கண்ணுற்ற ஆங்கிலேய துரையவர்கள் கீர்த்திசிங்கனையும், முள்ளிக்கொடையையும் பார்த்து அடா பாபிகளே! உங்களை கடவுள்தான் தண்டிப்பாரென மனிதசஞ்சாரமின்றிய தீவாந்திரத்திற் கொண்டுபோய் விடும்படி சேவகர்க்கு ஆக்ஞாபித்தனர், அத்தருணம் மஹாராணியாகிய மிர்துபாஷிணி மணாளனைப் பிராணபதி யானெவ்வளவு சொல்லியும் தடுத்துவிட்டதனாலன்றோ? உன் ஆசைமிகுந்த பிள்ளைகளையும் என்னையும் விடுத்து நீர் தீவாந்திரத்திற்கு போய்விடலாயினீரென பிரலாபித்திருந்தனள்.

அப்பால் ஆங்கிலேய துரையவர்கள் இனி இத்தகைய துர்க்குணத்திற்கு இராஜரீகங் கொடுக்கலாகாதென கண்டிதேசத்தில் இங்கிலீஷ் ராணுவத்தை நிலைநிறுத்தி துஷ்டரை அடக்குவதற்காக போலீஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு முதலா

னவையும் சகல தேசத்திலிருக்கும் மாந்தர்கள் தமது க்ஷேமலாபங்களைத் தமது சிநேகிதர்கட்கு கடிதமூலமாய்த் தெரிவித்து சுகமுற்றிருக்கும்படியான தபாலாபீஸ்களையும் ஏற்படுத்தி கண்டிமாநகரிற் கொருபழுதுமின்றி பரிபாலனஞ்செய்து வருகலாயினர்.

இங்ஙனம் நிற்க, ஆலப்பனையானவன் தன்னிடமிருந்த ஆஸ்தி பூஸ்திதியனைத்தும் தானதர்மஞ் செய்துவிட்டு தனது மனையாளாகிய குமாரியாமிவிழ்ந்திறந்த குளத்தில் விழுந்து பிராணனை விடுத்து தேவர்களனுப்பிய புஷ்ப விமானத்திலமர்ந்து தனது மனைவி மைந்தர் மைத்துனி முதலானோர் வசித்திருக்கும் நற்பதவியிற் சென்று நித்யானந்தமாய் வாழ்ந்திருந்தனன். மாசற்ற குணத்தினளாகிய மிர்துபாஷிணியும் தன்னிடமிருந்த திரவியங்களை யெடுத்துக்கொண்டு தனது இரண்டு பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு கண்டிநகரத்தை விடுத்து தமது சுயதேசத்தில் வந்து மணாளனுலுற்ற அநியாயத்தை அனைவர்க்கும் புகன்று தமது விதிவசத்தை நினைந்து மனமுருகி தோற்ற மனைத்தும் அழியுமென்றெண்ணி தர்ம குணத்துடன் தெய்வ பக்தியிற் சிறந்தவளாய்த் தனது பிள்ளைகட்கு தமது வம்சத்தின் உத்தம கன்னியர்களை திருமணம் புரிவித்து மனோல்லாசமாய் வாழ்ந்திருந்தனர்.

## படிப்பினை.

### இந்தக் கதையில் நாம் கவனித்த தென்ன?

கீர்த்திசிங்கன் பகவத்தியானமா யிருந்தமையால் அரசனாயின பிறகு மனோகர்வத்தின் துர்க்குணத்தினால் துயருற்றனன். மிர்துபாஷிணி தான் அரசபத்தினியா யிருந்தும் துர்க்குணத்தை அருகில்வர வொட்டாமல் தடுத்து நற்குண வழியாயிருந்தமையால் தனது மைந்தருடன் யாதொரு துன்பமுமின்றி ஜீவிப்பதாயினள். ஆலப்பளையின் மனைவிமைந்தர் இரஞ்சிதபூஷணி முதலானோர் பிராணன் விடுந்தருணம் பகவத்யானமா யிருந்தமையால் ஜனன மரணமின்றி நித்யானந்த வாழவைப் பெற்றனர். ஆங்கிலேயர் தர்ம குணத்தினரா யிருப்பதினால் எத்திசையோரும் புகழ்ந்துரைப்ப, இத்தனை நாளாய் யாதொரு துன்பமுமின்றி இராஜரீகம் புரியலாயினர். ஆகையால் மனிதராய்ப் பிறந்தாலும் மதியிற் சிறந்த உத்தமராய் உடலில்உயிரிருக்கும் வரையிலும் நற்குணத்துடன் ஜீவித்திருப்பவரே சிரேஷ்டரென மதித்திடுவர்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

கீர்த்திசிங்கனென்னும் கண்டிராஜன் கதை

சம்பூர்ணம்.

மைசூர் அரண்மனை சர்ஜன்
சென்னை மெடிகல் காலேஜ் புரோபசருமாகிய
மஞ் - ஜெகந்நாத நாயுடு இயற்றிய

## இங்லீஷ் வைத்திய சங்கிரகம்.

கனவான்களே!

இது நம் தமிழ்நாட்டில் வைத்தியத்தில் தக்க கீர்த்தியடைய வேண்டுமென்னும் எண்ணத்தோடு பல கஷ்ட வியாதிகளுக்குச் சிகிச்சை புரிந்துவரும் வைத்தியருக்கும் நூதனமாக வைத்தியங் கற்றுக்கொள்ளவேண்டுமென்னும் விருப்ப முடையார்க்கும் நோயற்ற வாழ்வை விரும்பும் ஆண் பெண் பாலர் விருத்தர் ஆகிய எல்லோருக்கும் எச்சமயத்திலும் எல்லாவூரிலும் எல்லாக் குடும்பத்திலும் அவசிய மிருக்கத் தக்க முக்கியமான ஒரு வைத்திய நூல் இதன் விலை ரூபா 3 8 0.

## பகவத் கீதை வசனம்.

(பாக்கெட் சயிஸ்)

18 - அத்தியாயமும் அடங்கியது.

சுத்தப்பதிப்பு.

விலை அணா 0 8 0

## பத்தாரத்நம் அல்லது மோஹனராணி

விலை அணா 8.

ஆலந்தூர் ஒரிஜனல் இந்து டிராமாடிக் கம்பெனியார் நடத்தி வருகிற

## பார்ஸி மதிவல்லப மங்கைமோகன.

இதன் விலை அணா 4.

புதிய தமிழ் நாவல்! புதிய தமிழ் நாவல்!

# மதிவல்லபன்

# மங்கை மோகனாள்,

ஓர் புதிய தமிழ் நாவல்.

இருபாலரும் வாசிக்கத் தகுந்த நாவல்.

## இதன் விலை அணா 8.

எங்களாரிய நேயர்காள் இச்சிறிய விளம்பரத்தை முற்றுங் கவனிக்க விரும்புகின்றோம்.

இந்த நாவலில் நம் அரிய பெரிய பெண் பாலர்களுக்கு நன்குவிளங்கும்படி இக் கதாநாயகர் இப் புத்தகத்தில் பதிவிரதாதன்மையைபற்றியும் இல்லறத்தில் நடக்கும் ஒழுக்கினங்களை பற்றியும் இதில் இனிது விளங்கும்.

அறிஞர்காள்? கதா நாயகியாகிய "மங்கை மோகனாள்." தன் நந்தவனத்தில் மதிவல்லபனைக் கண்காணித்து வலியமோகித்துக் கொடியவரங்களாலுங் கப்பல் வியாபாரியினாலும் பட்ட கஷ்டத்தை நீக்கி யிரக்ஷித்தது பரம்பொருள் வெளிச்சமே கதாநாயகனாகிய 'மதிவல்லபன்' பிறந்தது முதலடைந்த துன்பங்களை நீக்கிந்தான் மகிழ்ந்து வார்த்தையாடிய மங்கைமோகனாளை மணஞ்செய்ததற்குக் காரணம் ஈசன் கிருபையே; ஆகையா லெத்துயரநுகினும் பக்தியோடிருக்கில் அத்தன் காப்பன். இவ்வரிய நாவலைப்பெற்றுக் கையாள்பவருக்குத் தான் நன்கு விளங்கும். கரும்பென்று கூறினவளவில் நாவிற்கு இனிப்பைத்தருமா, அதனைக் கைக்கொண்டு மென்று தின்றாற்றான் நாவுக்கு உருசியைத்தருவதுபோ லிவ்வரிய நாவலினுண்மை இனிது விளங்கும்.

டி. சாரதா புத்தகசாலை,

நெ. 140, நயினியப்ப நாய்க்கன் தெரு,

பார்க்டவுன், மதராஸ்.